Sangathamil
# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 46 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஏப்ரல் 01 2023

## 14ம் ஆண்டு

# வீரவணக்கம்



பிரிகேடியர்
**விதுசா**
கந்தையா ஞானபுரணி
கரவெட்டி, யாழ்
(29.09.1969 - 04.04.2009)



பிரிகேடியர்
**துர்க்கா**
பொன்னுத்துரை கலைச்செல்வி
வலிகமாமம், யாழ்
(24.03.1971 - 04.04.2009)



**04.04.2009 அன்று முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு சிங்களப்படைகளின் நச்சுக்குண்டு தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவைத்தழுவிக்கொண்ட மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**



பிரிகேடியர்
**தீபன்**
வேலாயுதம்பிள்ளை பகிரதகுமார்
கண்டாவளை, கிளி
(08.01.1966 -05.04.2009)



பிரிகேடியர்
**மணிவண்ணன்**
அருளம்பலம் தவேந்திரன்
பருத்தித்துறை, யாழ்
(31.12.1970 - 03.04.2009)



பிரிகேடியர்
**ஆதவன்**
ஆறுமுகம் அருந்தவச்செல்வன்
கொற்றாவத்தை - வடமராட்சி, யாழ்
04.04.2009

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 / Sq. Ft (c$ 34.99 / h.)
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side, 10pt Card Stock
We print all kind of products
Call Me: Silver Print House - 647 712 1266

விளம்பரத்துக்கு அழையுங்கள்:
437.345.4203

Sangathamil
சங்கத்தமிழ்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும், முள்ளும் நிறைந்த கடினமாக பாதை. வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமால் மனித வாழ்வில் அர்த்தமேயில்லை.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே நடந்திராத பெரும் சமர்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே நடந்திராத, சந்தித்திராத சவால்களோடும், சாதனைகளோடும், இழப்புக்களோடும் நடந்தது **ஆனந்தபுர பெரும் சமர்**. அனைத்து உலக நாடுகளின் உதவியுடனும்,பாரிய படைக்கலன்களுடனும், எம் இனத்தை அழித்துக் கொண்டிருந்த சிங்கள இனவெறியர்களை முழுப் பலத்தையும் பிரயோகித்து புதுக் குடியிருப்பு ஆனந்தபுரப்பகுதியில் இடை மறித்தார்கள் தமிழீழ விடுதலைப்புலிகள்.

ஆக்கிரமிப்பாளர்களின் அரக்கத்தனமான கொடும் யுத்தத்தை மனோபலத்துடன் எதிர் கொண்டார்கள் விடுதலைப்புலிகள். யுத்தகளங்களில் பயன்படுத்த, தடை செய்யப்பட்ட பல விதமான ஆயுதங்களாலும், போர் விமானங்களாலும், ஆட்லெறிகளாலும் பரவலாகத் துடைத்தெறிந்து முன்னேறியது சிங்கள இராணுவம்.

விடுதலை அல்லது வீரச்சாவு என்ற தாரக மந்திரத்தை உச்சரித்தபடி ஒவ்வொரு போராளிகளும்,பொறுப்பாளர்களும், தளபதிகளும் அக்களத்தில் சாதனை படைத்தனர். பல நூற்றுக் கணக்கான இராணுவத்தைக் கொன்று குவித்தனர். உண்ண உணவு இல்லை, குடிக்க தண்ணீர் கூட இல்லை அனைத்து உதவிகளும் தடை செய்யப்பட்ட நிலையில் தமக்கேற்பட்ட சோர்வைக் கூட மறந்த நிலையில் தம்மிடம் இருந்த வளங்களை வைத்து சாவின் உச்சகட்டத்தில் கூட தர்மயுத்தம் நடத்தினார்கள். அக்களத்தில் போரிட்ட ஒவ்வொரு வீரர்களுடைய அழிக்க முடியாத வரலாறுகளும் அவர்களுடைய செங்குருதிகளால் அந்த மண்ணில் பதியப்பட்டது.

**பிரிகேடியர் தீபன்**




"என்னைக் காப்பாற்ற வேண்டாம், என்னை விடுங்கோ இந்த சிங்களவனை பழி வேண்டணும்" என வீரச் சாவடையும் தருணத்தில்க் கூட ஒலிக்கிறது தளபதி தீபனின் குரல். போர்க்களங்களில் போராளிகளோடு வாழ்ந்த அந்த தளபதி ஆனந்தபுரத்தில் ஆவேசமானார். அதர்ம யுத்தம் நடந்தும் அரக்கர் கூட்டத்தை அழித்தொழித்து சாவேனே தவிர மண்டியிட மாட்டேன் என சபதம் பூண்டார். சிங்கள இராணுவம் நடத்தும் யுத்த மழையை எதிர்த்து ஒரு பகுதியால் தீபனும் அவர் போராளிகளும் சண்டை செய்து கொண்டிருக்கிறார்கள். இயங்கவே முடியாத அளவுக்கு தீபன் பலத்த காயம் அடைகிறார். அவரைக் காப்பாற்ற முயல்கிறார்கள் போராளிகள். தன்னைக் காப்பாற்ற வேண்டாம் என கத்தியபடி எதிரியை நோக்கி ஆவேசமாகத் தாக்குதல் நடத்தி வீரச்சாவடைகிறார் பிரிகேடியர் தீபன்.

எதிரிக்குத் தலைவலியாக இருந்த தீபனை, போராளிகளுக்குப் பக்க பலமாக இருந்த தீபனை, தெரியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. போர்க்களங்களில் ஓயாத புயலாக சுழன்றடிக்கும் தீபனை எதிரி நன்கறிவான். தீபனின் கட்டுப் பாட்டில் இருக்கும் பிரதேசத்தை எட்டிப் பார்க்கவே பயப்படுவான் எதிரி. போராளிகளை ஊக்குவித்து அவர்களை யுத்த களத்தில் எப்பவுமே மகிழ்ச்சியாக வைத்திருக்கும் தளபதி தீபனை அனைத்துப் போராளிகளுக்கும் பிடிக்கும். அவருடைய கட்டளைக்காகக் காத்திருப்பார்கள் போராளிகள்.

கள நிலவரங்களை அதி வேகமாகப் புரிந்துகொண்டு அதிரடி முடிவுகளை எடுத்து, எதிரியை திணறடிக்கும் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி வளர்ந்த தீபன்



அவர்கள், சாள்ஸ் அன்ரனி படையணியை வழிநடத்தி நல்ல வழிகாட்டியாக, நல்ல போர்த்தளபதியாக உயர்ந்து, கட்டளைத் தளபதியாகப் பணிபுரிந்தார் .பல சாதனைகளுக்கும், பல வெற்றிகளுக்கும் காரணமாய் இருந்த தீபனுக்கு தமிழீழத்தில் தனி வரலாறுண்டு. எதிரிக்கு சவால் விட்டு, போர் புரியும் தீபன் சந்தித்த களங்கள் பற்பல. சாதனைகளோடு வாழ்ந்த அந்த வீரனின் சாதனைகள் என்றென்றும் பதியப்பட வேண்டியவை. தமிழினத்தால் படிக்கப்பட வேண்டியவை.

சாதனை வீரனே பிரகேடியர் தீபன்

உங்கள் கனவு நனவாகும் வரை

தொடர்வோம் உங்கள் தடம் ...

**பிரிகேடியர் விதுஷா**




**பிரிகேடியர் துர்க்கா**

பெண் என்னும் மரபுக்கு முடிசூட்டும் முகமாக, அடக்கப்படும் பெண்ணே நீதான் அதற்கு எதிராகப் போரிடு,என தட்டிக் கொடுத்து சிங்களத்தை முட்டி போட வைத்த எம் தேசத் தலைவரின் வழி தோன்றலால்... ஈழத்துப் பெண்களின் வீரத்து நிகழ்வுகள் உலகையே பலதடவை உலுக்கி வைத்துள்ளது. இவ்வழியில் அடியெடுத்து ஆரம்பித்த வரிவடிவப்புலித் தளபதிகள்தான் பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா.

ஆணுக்கு நிகராய் போருக்கு எதிராய் நேருக்கு நேர் நின்று போரிடும் வலிமை , இவர்களைப் போல, ஈழத்துப் பெண்களை மிஞ்ச யாருண்டு, என நெஞ்சுரம் கொண்டு நிமிர்ந்து களங்கள் பல கண்ட ஈழக்கண் ஒளிகள்.

ஒவ்வொரு வித்துடல் எதிரியிடம் விடுபட்ட வேளையிலும் அக்காவின் இரவுகள் விடிகாலைப் பொழுதுகளே, அக்கா உங்களையே நாம் விதைத்த பின்பு இன்றுவரை எமக்கு விடியவில்லை காலைகள், இணைபிரியாத தோழிகளாய் தமிழீழம் காத்தவர்கள். காப்பரனில் நடந்தவர்கள். கடுகளவு யோசனையும் பகிர்ந்த பின்பே கடமை செய்வார். காடு, நாடு,கடல் , வானம் தொட்ட எம் தமிழ் மறத்திகள் கண்ணாகக் கடமையேற்று, கருத்தோடு களமாடிய பெண்ணினத்தின் முதுகெலும்பு இவர்களென்றால் மிகையில்லை.




ஆனந்தபுரத்தில் கடுஞ்சமர் மூண்டபோது தலைமைதனைப் பாதுகாத்தும் சண்டையிட்ட போதுகூட, களமுனையும் பிரிக்கவில்லை இவர்களை. களத்திடை வீழ்ந்த வேளை துர்க்காக்கா வீழ்ந்த செய்தி விதுசா அக்கா செவிவந்து சிறிது நேரம் செல்லவில்லை அனலாகி விரைகிறார் அக்காவும் முன்னோக்கி, அடுத்தநொடி பாரிய சண்டை. திணறுகிறான் எதிரி. போர்க்கோலம் கொண்டவளை துளைத்த ரவை எவனதுவோ? சிங்களமே இனி உனக்கு பெருமெதிரி நாங்களடா.

பல ஆயிரக்கணக்கான வீரர்களை ஈழயுத்த களங்களில் இருபத்தைந்து வருடங்களாக நேர் நின்று வழிநடத்தி சாதனைகள் படைத்தவர்கள். உடல் முழுவதும் காயமுற்ற நிலையிலும் பருத்தியாடை போல் உடலை மீண்டும் பொருத்தி, ஈழ விடுதலைக்காய்த் தம்மை வருத்திய கட்டளை தளபதிகள்

உயிர் விடும் உச்சக் கட்டத்திலும் உயிரற்ற எம் உடல் கூட எம் தாய் மடியில் எருவாக வேண்டுமென்ற கொள்கையில் தவறாது நின்ற களங்களில், கடைசிக் களம்தான்ஆனந்தபுரம், ஈழத்துக்கான பாரிய யுத்தம்.

இதில், தலைவன் தலைமையில் தலை நிமிர்ந்து சென்றவர்

கள், கரும்புலிகளுக்குச் சமனாக பெரும் படையை எதிர்த்து சாவு வரும் வரை சிந்திக்க முடியாத துன்பங்களை எல்லாம் சந்தித்து, இறுகிய தொண்டையின் இறுதி ஓசை வரை, பெருகிய இரத்த ஆற்றின் நடுவினில் உயிர் விட்டவர்கள் .

அக்காக்கள் இருவருடன் ஆனந்தபுரத்தில், பல நூறு தோழர்களும் தோழியரும் வீச்சோடு சண்டையிட்டு வீரச்சாவு எய்திவிட்டார். இவர்களுக்காய் நாம் எப்பொழுதும் அழுதாலும் எம் உணர்வு குன்றிடாது. முப்பொழுதும் உமை நினைந்து உர மேற்றி நடக்கின்றோம். மிகவிரைவில் அண்ணன் அணி நடையேற்க ஆனந்தபுரத்திலே உங்கள் உடல் வீழ்ந்த மண்ணெடுத்து ஈழவிடுதலை பெற்று உடையணிந்து தேசியக்கொடி போர்த்தி தலைவன் கை பூத்தூவி உங்கள் தாகம் தீர்த்த பின்பு உறங்கவைப்போம் நீர் துயிலும் இல்லங்களில். உறுதி கொள்வோம் எண்ணங்களில். கல்லறைச் செல்வங்களே! நீங்கள் களத்திலும் உறங்கவில்லை,உணவின்றி, நீரின்றி உரமேற்றி வாழ்ந்தீர்கள். உங்கள் உறக்கம் தொலைத்தவர்கள் இனி ஒரு போதும் கண்ணயர முடியாது. உறுதிகூறி வீச்சோடு நடைபோட்டு, வீழ்த்திய சிங்களத்தின் உடல் ஏறி வந்து உரமிட்டுக் கல்லெடுத்து கட்டிய கல்லறைக்குப் பூத்தொடுத்து பூசிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை. அதுவரை பற்றைகள் போர்த்திய உம் விதைகுழிகள் பதுங்கி இருக்கட்டும்.

பெண் போராளிகளுக்கு "இரு தாய்களாக, இரு தளபதிகளாக" இருந்து படை நடத்திய பெரும் தளபதிகளே ! உங்கள் கனவு நிச்சயம் நனவாகும்.

**பிரிகேடியர் ஆதவன்**




"எங்கட உயிரைக் கொடுத்தாவது அண்ணையைக் காப்பாற்றணும்" ஆனந்தபுரத்தில் பிரிகேடியர் ஆதவன் போராளிகளுக்குக் கட்டளை வழங்கினார்.

போராளிகளில் ஒருவனாக மாறி, கட்டளைகளைப் பிறப்பித்த வண்ணம் பல தடைகளை உடைத்து, தானே குறிபார்த்துச் சுட்டு, எதிரிகளை வீழ்த்திய வண்ணம் முன்னேறுகிறார் ஆதவன்.

எப்பணி ஆற்றினாலும் தலைவரை பாதுகாப்பதே தன் முதற் பணி என எண்ணும் ஆதவனால் கள நிலைமைகளை அறிந்து கொண்டு பொறுமை காக்க முடியவில்லை, தலைவர் அருகிருந்து தலைவரைப் பாதுகாப்பதில் தன்னுடைய வாழ்நாட்களில் கூடிய காலங்களைக் கழித்த ஆதவன், கதி கலங்கி நின்றார். "எம் தலைவருக்கு சிறு இன்னல் நேருமாயின் அதைப் பார்க்க நான் உயிருடன் இருக்க கூடாது" என தன் போராளிகளிடம், தன் பிள்ளைகளிடம் அடிக்கடி கூறும் ஆதவனால் சினம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. பகை மேல் சீற்றம் கொண்டு சீறி எழுந்தார். படைகொண்டு தடையுடைத்து எதிரியை அழித்து தலைவரை காப்பற்றினார்.

அக்களத்தில் இருந்து தலைவரைப் பாதுகாத்த பின்பும், தான் நேசித்த மண்ணுக்காக, தான் வளர்த்த போராளிகளுக்காக அக்களத்தை விட்டு அகலாது கலங்காது போரிட்டார். போராளிகளை உற்சாகப் படுத்தி புயலாகப் போரிட்ட ஆதவன் அவர்கள் இயங்கவே முடியாத அளவுக்கு பலத்த காயம் அடைகிறார் . காப்பாற்ற முயன்ற போராளிகளைப் பார்த்து "எதிரி அண்மித்து விட்டான், என்னை விட்டுட்டுப் போங்கோ" எனக் கூறிய இறுதி வார்த்தைகளுடன் அவருடைய மூச்சு அடங்கிப் போனது.

தலைவரை உயிராக நேசித்த அந்த வீரத்தளபதி தன் இறுதி மூச்சை விடும் போது கூட தலைவரைப் பற்றியே நினைத்தார். தலைவருக்கு சிறு துன்பம் கூட நேரக் கூடாது என எண்ணினார்.

பல காலங்கள் தலைவரோடு நின்ற அந்த அற்புதத் தளபதியின் சாதனைகள் வியக்கத்தக்கது. எப்பணி ஆற்றினாலும் அப்பணியில் அத்தனை நேர்த்தி இருக்கும். மிகவும் கடினமான நிர்வாகப் பணியை சுலபமாக்கிய ஒரே தளபதி ஆதவன் அவர்களே. அனைத்துத் தளபதிகளுக்கும், அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், தலைவர் கூறும் வார்த்தை "நிர்வாகத்தை எப்படிச் செய்வது என்று கடாபியிடம் படித்து விட்டு வாருங்கள்". அது போலவே போராளிகளின் திறமைகளை இனம் கண்டு அவர்களை ஊக்குவித்து வளர்ப்பதிலும், அவர்களுடைய உள்ளத்துச் சிந்தனைகளைப் புரிந்து கொண்டு செயல்ப்படுத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே. குறி வல்லுணரான ஆதவனைப் பார்த்து வியக்காதவர்களே இல்லை. சொல்லிவைத்துச் சுடுவதில் அவருக்கு நிகர் அவரே. கரும்புலி வீரர்களை உருவாக்கி அவர்களை வழி நடத்திய அந்த அற்புதத் தளபதியும் இவரே, புதிய வீரர்களை போராட்டத்துக்குள் உள்வாங்கி புத்துணர்ச்சியோடும், கருத்துச் சுதந்திரத்துடனும் பயில்வித்த வித்தகரும் இவரே .

பல பணிகளை நேர்த்தியாகச் செய்து, பல சாதனைகள் புரிந்து, தலைவர் மனதில் தனியிடத்தைப் பிடித்த பிரிகேடியர் ஆதவனே! என்றென்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து கொண்டு உங்கள் கனவு நனவாகும் வரை உம் தடம் தொடர்வோம்...




பிரிகேடியர் ஆதவனோடு ஆனந்தபுரத்தில் அருகிருந்த பொறுப்பாளர்கள் இவர்கள். ஆதவனால் பல்லாண்டுகளாக பயில்விக் கப்பட்ட பண்பாளர்கள் இவர்கள். பல போர் வீரர்களை வளர்த் தெடுத்து, தேசக்கடமை ஆற்றிய சேவகர்கள் இவர்கள். வரலாறே பிரமித்து நிற்பதாக சிலரின் வரலாறுகள் அமைந்து விடு கின்றன. அத்தனை அர்ப்பணமும், ஈகமும், தியாகமும் அவர்களின் வரலாறு முழுவதும் நிறைந்தே கிடக்கும். அப்படியான ஒரு வரலாற்றுக்கு உரியவர்களாகவே இவர்கள் செயலாற்றினார்கள் .

தேசவிடுதலைப் போரில் ஒரு காலை இழந்திருந்த அகிலேசை தளபதி ஆதவன் அவர்கள் தளப் பணிக்காக அமர்த்திய போதும், "இல்லை அண்ணை நான் உங் களோடு சண்டைக்கு வாறன், என்னாலை சண்டை பிடிக்க முடி யும்." எனக் கூறி, போட்டிருந்த பொய்க் காலுடன் களம் புகுந்தவன்.

தன்னை வளர்த்த தளபதியோடு இணைந்து தன் தேசத்தையும், தலைவரையும் காப்பாற்றப் போரா டினான். பல்லாண்டுகளாக பல பணிகள் ஆற்றிய கேணல் அகிலேஷ் ஆனந்தபுரத்தில் விதையாகிப் போனான்.

அகிலேசுடனான எனது முதற்சந் திப்பு முள்ளியவளையில் ஒரு முகாமில் அகிலேசும் அவனது உற்ற தோழனும் அங்கு வந்திருந் தார்கள்.பார்ப்பதற்கு பெரியவர் பாவனையில் இருக்கும் இவ னோடு, பழகியபின் புரியும் அவனு டைய குழந்தைத்தனமான பேச்சும் பணிவும், வயது வேறுபாடின்றி அனைவரையும் மதித்து நடக்கும் பண்பு மிக்கவன்.அவனுடைய போராட்ட வாழ்க்கையில் அதிக காலத்தை பிரிகேடியர் ஆதவன்(கடாபி) அருகிருந்து பணி செய்தவன். இறுதி நாள் வரை அவனுடைய இறுதிக்கணம் வரை அவர் அருகிருந் தவன்.

மெல்லிய பேச்சுத் தடுமாற்றம் இழையோடும் இவன் பேச்சில் சுவாரசியமிருக்கும். பேசும் வேளையெல்லாம் கண்ணைச் சிமிட்டியபடியே பேசுவது அவனுடைய இயல்பு ஆதலால் ஒரு சிலர் பிழை நினைத்திருக்கவும் கூடும். என்னையே சிலர் கேட்டதுண்டு. ஆனால் அடுத்தவர் மனம்நோக இவன் வாழ் நாளில் என்றும் நடந்திருக்கமாட்டான். அப்படியொரு சாந்தம் குடிகொண்டவன். என்னை அன்பாக அவன் அழைக்கும் வார்த்தைக்காக என் மனம் இன்றும் ஏங்கி நிற்பது நீ அறிய வாய்ப்பில்லை.

பிரிகேடியர் ஆதவன் படுகாயமடைந்த நிலையில் அகிலேஷ் அவ்வணியை செவ்வனே வழிநடாத்தினான். அவர் அருகிருந்து அறிவுரை கேட்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்கான திட்டம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அந்த வேளையில் தான் அது நடைபெற்றதாக ஏனைய தோழர்கள் சொன்னபோது உங்கள் இருவரின் கடைமைக்கு அப்பாற்பட்ட அன்பை பார்த்து வியந்து நின்றேன். எங்கிருந்தோ வந்த எதிரிரவை ஒன்று உன் நெற்றியை துளைத்துவிட ஆதவன் அண்ணா மடிமீது நீ சரிந்து வீழ்ந்ததாக! உனை ஊட்டி வளர்த்தவர், உரிமையோடு ஏசுபவர், உணவு கூடி உண்டவரின் குடும்பமும் உன் உறவாய் ஏற்றிருந்த உந்தனை அணைத்தபடி அழுதாராம் அந்தத்தளபதி.

27.03.2009 அன்று நீயும் உன் பொறுப்பாளரும் பச்சைப் புல்வெளியூடாக இறுதிப்பயணம் வந்தீர்கள். உன் வீட்டில் சொல்லி வைத்து கோழிசமைத்து இருவரும் சேர்ந்து உன் அம்மாவின் கையால் கடைசிச் சோறு உண்டதாக உன் துணைவி சொல்லி அழவே தெரிந்து கொண்டேன். யார் வீட்டிற்கும் அலுவலின்றி போகாத நீங்கள் இருவரும் அன்று நேசமாக அணைத்து விடை பெற்று சென்றதுவும் முன் ஏற்பாடான திட்டம் என்று பின்பு நாம் உணர்ந்து கொண்டோம். சிறு குழந்தைகள் என்றால் அகிலேஸ்மாமா ஆச்சுமாமா ஆகிடுவார். அது அவனுடைய செல்லப் பெயர். அனைவருக்கும் பார்த்தவுடன் இவனை பிடித்துக் கொள்ளும் பணிவு மிக்கவன். ஆனால் கடமையில் கண்ணயராது உழைத்தவன்.

இவனுடைய பல பணிகள் இன்றுமென்ன இனியும் இனிவரும் காலங்களில் கூட வெளித்தெரிய வாய்ப்பில்லை. இவன் தன் விசுவாசமான பணியால் மட்டுமே தலைமையின் அருகு சென்றவன். அண்ணனே அகிலேசின் வேலை என்றுதான் கதைத்ததை என் காதால் கேட்டிருக்கிறேன். இரகசியம் காப்பதில் நீ மகா கெட்டிக்காரன். உன் மனைவிக்கும் கூட மூச்சு விட மாட்டாய். அண்ணனால் பெரிதும் விரும்பப்பட்டவர்களில் நீ முக்கியமானவன்.

கடல் நடுவில் ஒரு திட்டமிட்ட தாக்குதலுக்காக ஆதவனோடு நீ சென்றிருந்தாய், அங்கு திட்டத்துக்கு மாறாக எதிரி உலங்கு வானூர்தி சடுதியாக மிக அண்மையில் தோன்றி தாக்குதலை ஆரம்பிக்க இருபகுதிக்கும் கடுஞ்சமர் மூண்டது. உடனடியாக பிரிகேடியர் ஆதவனின் கட்டளைக்கு, அகிலேஸ் உலங்கு வானுர்தி நோக்கி சற்றும் பதட்டம் இன்றி உந்து கணையை ஏவி விட உலங்குவானூர்தி வெடித்துச் சிதறியது. சற்றும் எதிர் பாராமல் கள நிலைமை மாறிவிட இவர்கள் வெற்றியோடு தளம் திரும்பினார்கள். இந்த வரலாற்றுச் சாதனைக்கு கேணல் அகிலேஷ்தான் சொந்தக்காரன் என்று யாரும் அறிய வாய்ப்பில்லை. அன்று மட்டும் துணிந்து இவன் கணப்பொழுதில் அவ் உலங்கு வானுர்தியை அழித்திருக்காவிட்டால் அனைவரும் படகோடு மூழ்கும் நிலையே இருந்ததாக ஆதவன் பெருமையாக கூறிக் கொண்டார்.

பல சந்தர்பங்களில் அவர் அருகிருந்தும், உன் கால் ஒன்றை இழந்த பின்னும் சளைக்காது பணி செய்தவன். அவரைக் காப்பரனாய்க் காத்து நின்றவன். உன் அருகிலேயே அவரும் உறங்கியதை நீ அறிய வாய்ப்பு இல்லை. உங்கள் அனைவரையும் விட்டு வர மனமின்றி கண்டல் காட்டுக்குள் தன் கல்லறையை அமைத்துக் கொண்டார். இனி நீ அமைதியாக சேர்ந்துறங்கும் உன் தோழர்களும் அங்குதான் உன்னருகில் துயில்கின்றார். அனைவரையும் இந்நாளில் மனதிருத்தி வணங்குகிறோம்.




தமிழீழ விடுதலைப் போரில் பல களங்கள் கண்ட ராஜேஷ் களத்தில் ஒருகண்ணை இழந்திருந்தார். கடமையை கண்ணியத்துடன் செய்யும் ஓர் அற்புத வீரனாகவும், பல போராளிகளை வளர்த்தெடுத்து அவர்களுக்கு முன் உதாரணமாகவும் திகழ்ந்தார். நீண்ட காலங்களாக தேசவிடுதலைப் போரில் பங்காற்றியவர், களங்களில் மட்டுமின்றி தளங்களிலும், சிறப்புறப் பணியாற்றினார். தேசத் தலைவரைக் காக்கும் பணியிலும் பல வருடங்கள் ஈடுபட்டான்.

தமிழ்த் தேசத்தின் விடிவுக்காக அயராது உழைத்த லெப் கேணல் ராஜேஷ் ஆனந்தபுர பெருஞ்சமரில் வீர காவியமானான். இந்த வீரனை என்றென்றும் மனதில் இருத்தி இவன் தடம் தொடர்வோம்.




மூர்க்கத்தனத்தோடு முன்னேறிய இராணுவத்தைக் கொன்று குவித்து விதையானவன் இவன். தன்னுடைய இரண்டு வயதுக் குழந்தையை சிங்கள அரக்கர்களின் விமானத்தாக்குதலுக்குப் பலிகொடுத்து, அத்துயரில் இருந்து மீழமுன்பே களம் நோக்கி விரைந்தவன் நளன். ஆனந்தபுரத்தில் நடந்த உக்கிரப் போரில்

தேச விடுதலைக்காக பல பணிகள் ஆற்றிய இவன் இம்ரான் பாண் டியன் படையணியின் சிறப்புப் பொறுப்பாளராக சில



காலம் பணி புரிந்தான். மிகவேகமாகவே அனைவரது தேவைகளையும் அனைவரது கோரிக்கைகளையும் உள்வாங்கி படையணியை நிர் வகிக்கும் ஒருவனாக ஆகிப் போனான். நிர்வாகப் பணிகளை அழகாக போராளிகளுக்குக் கற்று கொடுத்தான்.

அனைவராலும் விரும்பப்படும் பொறுப்பாளனாகச் செயலாற்றிய லெப் கேணல் நளன் அவர்களை என்றுமே மறக்க முடியாது .

இவர்களோடு கப்டன் குட்டியருவி, கப்டன் இசைப்பிரியன், கப்டன் அமர்முரசு, கப்டன் நெடியவன், மேயர் ஈழச்செல்வன் இவர்கள் எம் இனத்தின் இருள் நீக்கிகள் ,எம்மனங்களில் சுடர் விட்டெரியும் சுடர் மணிகள். தூக்கம், சோர்வு, உணவு என்று எல்லாம் மறந்து எந்நேரமும் இயங்கியவர்கள். ஆனந்தபுரத்தில் பிரிகேடியர் ஆதவனோடு இறுதிவரை உறுதியுடன் உழைத் தவர்கள். கட்டளைக்குக் கீழ்ப் பணிந்து அனைத்துக் கடினமான பணிகளையும் அர்பணிப்புடன் ஆற்றியவர்கள். இந்தத் தியாகச் செம்மல்களை என்றும் எம் மனங்களில் இருத்திப் பூசிப்போமாக.

**கேணல் தமிழ்செல்வி**

உலகத்தில் வாழும் தாய்களுக்கெல்லாம் பெருமை தேடித்தந் தாள் ஆனந்தபுரத்தில் எங்கள் தமிழ்செல்வி. உக்கிரமான போர்க்களம் என்று தெரிந்து கொண்டும் இரண்டு வயதுக் பெண்குழந்தையை அருகிருந்தவர்களிடம் விட்டுக் களம் புகுந் தவள் இவள். கள நிலவரங்களைத் தெரிந்து கொண்டும் தான் பெற்ற பிள்ளையை விட்டு தன் தாய் நிலம் காக்க ஓடியவள் இவள். களத்தில் தன் தளபதி பிரிகேடியர் விதுசாக்காவிற்குப் பக்கதுணையாக நின்று போர் புரிந்தவள் இவள். தளபதிகளான பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா அக்களத்தில் வீரச் சாவைத் தழுவிய போது, அனைத்துப் பெண் போராளிகளையும் ஒழுங்குபடுத்தி, வழிநடத்திப் போர் புரிந்தவள் இவள் . களத்தில் தான் வீரச்சாவு அடைவது உறுதி எனத் தெரிய வந்த போது, தன் தோழிக்கு தொலைத்தொடர்பு மூலம் சொன்னாளாம்

"நான் இந்தச் சண்டையிலை இருந்து நிச்சயம் உயிரோடு வர மாட்டன். என்ரை பிள்ளையை நீங்கதான் எல்லாரும் பார்க் கணும். நீங்க எல்லாரும் பார்ப்பீங்கள் என்ற நம்பிக்கையோடு நான் போறன்"

அவள் தோழி தினமும் அவள் வார்த்தைகள் தன் காதில் ஒலித் துக்கொண்டு இருக்கிறது" எனக் கூறி கண்கலங்கி நின்ற போது... அவள் வார்த்தைகள் அனைவரையும் புல்லரிக்கச் செய்தது. அவளுடைய அந்தச் சாதனைகள் விண்ணைத் தொட்டு நிற்கின்றது.

சிறுவயதில் போராட்டத்தில் இணைந்த இவள் மணலாற்றில் தன்னுடைய பயிற்சியினை எடுத்து முடித்தவள். மணலாற்றில் உள்ள மண்கிண்டி மலையில் ஓர் தாக்குதலில் தன் திறமையை வெளிக்காட்டி அனைவராலும் இனம் காணப்பட்ட ஒரு போராளி ஆனாள். கனரக ஆயுதங்களை கையாள்வதில் இவளுக்கு நிகர் இவளே. அனைத்துக் கனகர ஆயுத பயிற்சிகளையும் இலகுவாகப் பயின்றது மட்டுமின்றி, பிரதான கனரகப் பயிற்சி ஆசிரியருமானாள். ஜெயசிக்குறுவில் அவளுக்கென்று தனி வரலாறு உண்டு. அனைத்துக் காலநிலைகளிலும் நடந்த இச் சமரில் அவளுடைய பாதம் படாத இடமே இல்லை. மாலதி படை யணியின் தளபதியாக பல களங்களை வழி நடத்தி, சாதனை யாளராகப் தலை நிமிர்ந்து நின்றாள்.

விதையாகிப் போன கேணல் தமிழ்செல்வியே! விழி மூடித் துயில் கொள்ளு... உன் கனவு நனவாகும். அதுவரையும் ஓயோம்.

**பிரிகேடியர் மணிவண்ணன்**




இயல்பாகவே அமைதியான சுபாபமும், கனிவான பேச்சும் நிறைந்த மணிவண்ணன், போர்க்களங்களில் புயலாக மாறி விடுவார். பல போர்க்களங்களைச் சந்தித்து விழுப்புண் அடைந்த போதிலும் போர்க்குணம் மிக்க வீரனாகவே செயற் பட்டார். களநிலவரங்களை உடனுக்குடன் புரிந்துகொண்டு மோட்டார் செல்களை விரையப்படுத்தாமல் சரியான இலக்குக்கு செல்களை அடிக்க கட்டளைகள் பிறப்பிப்பார். "வருகுது பார" என மணிவண்ணன் களத்தில் உள்ள தளபதிகளுக்கு கட்டளை பிறப்பிக்கும் போது களத்தில் போரிடும் போராளிகளின் மகிழ்ச் சியைப் பார்க்கவே தேவையில்லை. போர்க்களங்களில் இறுக் கமான சூழ் நிலைகளிலெல்லாம் மணிவண்ணனைத்தான் போராளிகள் தேடுவார்கள். பல இறுக்கமான இடங்களில் எல் லாம் செல்களை விழுத்தி தடைகளை உடைத்து பல வெற் றிகளுக்குக் காரணமாய் இருந்தவர் மணிவண்ணனும் அவ ருடைய போராளிகளும் தான்.

கேணல் ராயு அவர்களால் வழிநடத்தப்பட்ட மணிவண்ணன், கேணல் ராயு அவர்கள் வீரச்சாவடைந்த பின்னர் ராயு அவர் களின் ஆலோசனைகளைப் பின்பற்றி, சிறப்பாக, மோட்டார் படையணியை வழிநடத்தினார். அனைவருடனும் அன்பாகப் பழகும் மணிவண்ணன் அவர்கள் எளிதில் அனைத்துப் போராளிகளின் மனதிலும் இடம் பிடித்து விடுவார். அனை வராலும் "மணியண்ணை" என அன்பாக அழைக்கப்படும் தளபதியாவார்.

ஆனந்தபுர பெருஞ்சமரில் செல்களை சரியான முறையில் சரியான இலக்குகளில் பயன்படுத்தி எதிரிகளைக் கொன்று குவித்தவர். வீரச்சாவடையும் தருணத்தில் அவரும் அவ ருடைய போராளிகளும் இணைந்து எதிரியிடம் பிடிபடாதபடி அனைத்து மோட்டார்களையும் அழித்துவிட்டு அன்னை மண் ணை முத்தமிட்டார் பிரிகேடியர் மணிவண்ணன்.

**லெப் கேணல் அமுதாப்**




சாள்ஸ் அன்ரனி படையணியின் தளபதிகளாகாக களம் பல கண்டவர்கள். இறுதி முச்சு வரையும் போர்களங்களில் போரா டிய இளம் தளபதிகள், சொல்லி வைத்து செயலாற்றுவதில் இவர் கள் உத்தமர்கள். ஆனந்த புரத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இவர்களை நெஞ்சில் இருத்தி தியானிப்போம்.

**கேணல் கோபித்**




இவன் ஒரு வேவுப்புலி வீரனாகவே எனக்கு அறிமுகம். மெலிந்த உயரமான இவன் கண்களில் மட்டும் தேடலுக்கான ஒளி கூர்ந்த பார்வை நிறைந்திருக்கும். ஆம் இவன் புகாத எதிரி முகாம் இல்லை எனலாம். தனது போராட்ட வாழ்க்கையில் பெரும் பகுதியை வேவுப்பணிக்காகவே செலவிட்டவன். பிரிகேடியர் பால்ராஜ், கேணல் தீபன், கேணல் ஜெயம் இவர் களோடு அருகிருந்து தன் பணியை சிறப்பாகச் செய்து தலைவர் வரை விரும்பப்பட்டவன். இவனது பொறுப்பில் வேவுபார்த்து நடாத்தப்பட்ட பல இராணுவமுகாம் தகர்ப்புகள் எமக்கு முழு மையான வெற்றியைப் பெற்றுத்தந்துள்ளது. எதிரியின் குகைக் குள் சென்று பட்டி தொட்டியெல்லாம் புகுந்து விளையாடியவன்.

அத்தோடு நின்றுவிடாது சாள்ஸ் அன்ரனி படையணியின் சிறந்த சண்டைக்காரன், ஒரு பொறுப்பாளன் இவ்வாறு வளர்ந் தவன் இறுதியில் சாள்ஸ் அன்ரனி படையணியின் சிறப்புத் தளபதியுமானான். அன்று தொட்டு இறுதிவரை கட்டளைத் தளபதியாகவும் இருந்து பலநூறு வீரர்களை வழிநடத்தியவன். இவனுடைய தியாகமும், வீரமும், நற்குணமும் நிறைந்து கிடக்கும் வீரவரலாற்றை என் பேனாவுக்குள் அடக்கிவிட முடியாது. இறுதிவரை நின்று கடுஞ்சமர் புரிந்தவன். ஆனந்தபுர ஆரம்பச்சமர்க்களத்தில் தனது படையணியை வழிநடத்தி சண்டையில் எதிரியை திணறடித்து வீரமரணம் அடைந்தாலும் எமது தமிழீழ வரலாற்று பதிவில் இவனுக்கு தனியிடம் உண்டு.

**லெப் கேணல் மெய்யறிவு**

இம்ரான் பாண்டியன் படையணியில் பல பணிகள் ஆற்றிய இந்த வீரர்கள் பிரிகேடியர் ஆதவனோடு ஆனந்தபுரத்தில் களமாடி காவியமானார்கள். நீண்ட வரலாறுகளைத் தந்த இந்த வீரர்களை மனத்திருத்தி தியானிப்போம்.

**கேணல் அமுதா**

பெண்ணாக பிறந்து புலியாக மாறி புயலாக எழுந்து பல களம் கண்ட வீரத் தளபதி இவள். ஆனந்தபுரத்தில் மோட்டார் அணி யின் பெண் போராளிகளை வழிநடத்தி களத்தில் காவிய மானவள். அமுதா பயிற்சிமுகாம் முடிந்த கையோடு கனரக ஆயுதப்பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அங்கு 60mm மோட்டார் அணியில் ஒரு காப்பாளராக பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் போதே எனக்கு அறிமுகம். நிறத்த மெல்லிய நெடுத்த அவளது தோற்றம் கனரக ஆயுதத்திற்குப் பொருத்தமில் லாதவாறே பார்ப்பவர்கள் கணிப்பிடுவர். முகத்தில் என்றும் அமைதி குடிகொள்ள யாரை கண்டாலும் ஒரு சிரிப்பே இவளது பதிலாக இருக்கும். கதைப்பது குறைவு ஆனால் பயிற்சி வேளை யில் உருவத்திற்கு பொருத்தமில்லாதா சுமையை 60mm செல் பெட்டியை நிறைத்த மணலோடு தூக்கி கடின பயிற்சிகளை எல்லாம் இலாவகரமாகச் செய்து முடித்தாள். படிப்படியாக 60mm மோட்டார் கண்ணர், இரண்டு மோட்டார்களின் பொறுப்பாளர் என இவளுடைய பயிற்சி ஆசிரியர்களின் அரவணைப்பில் வளர்ந்தாள் எனலாம்.

மேஜர் சௌதினி,மேஜர் கோகிலா இவளுடைய பெரும் வழி காட்டிகள். தொடர்ந்து 82mm மோட்டார் தொட்டு 5 இன்சி வரை வைத்து இலகுவாகச் சண்டை செய்தவள். தனது ஒரு காலை இழந்த பின்பும் பல மோட்டார் அணிகளின் ஒருங்கிணைப்புப் பொறுப்பாளராச் சிறப்பாகச் செயல்ப்பட்டு ஆனந்தபுரத்தில் கேணல் அமுதாவாக விதையாகிப் போனாள்.

**கரும்புலி லெப் கேணல் கிந்துஸ்தானி**

வெடிகுண்டை உடம்பில் கட்டி கண் இமைக்கும் நேரத்தில் பல எதிரிகளை கொன்று குவித்து ஆனந்தபுரத்தில் சாதனை படைத்த தமிழினத்தின் தடை நீக்கியே உன்னை மறந்துடுமா நெஞ்சம்.

**கேணல் நாகேஸ்**




ஆனந்தபுரக்போர்க்களத்தில் போராடி வீரச்சாவு அடைந்த புனிதா, லெப்-கேணல் மோகனா, மேஜர் தென்னரசி, மேஜர் குலமதி, கப்டன் தமிழினி, கப்டன் தமிழ்முகில் ,கப்டன் அமுதினி, கப்டன் இசைஎழில், கப்டன் காவேரி, கப்டன் மதியொளி, கப்டன் அலையரசி, கப்டன் அகல்மதி ஆகி யோரையும் இன் நாளில் நினைவு கூருகிறோம்.

சித்திரை மாதம் , 05ம் திகதி மட்டும் நடந்த இந்தச் சமரில் இறுதிவரை எதிரியோடு சமரிட்டு பல பிரிகேடியர் தரத் தளபதிகள், பல கேணல் தரத் தளபதிகள், பல லெப் கேணல் தர தளபதிகள் உட்பட 450க்கு மேற்பட்ட மாவீரர்களையும் இந் நாளில் நெஞ்சிருத்தி நினைவு கூறுகிறோம்.

ஆண்டுகள் பல ஆனாலும் அழியாது உங்கள் நினைவுகள் என்றென்றும் உங்கள் நினைவுடன் ...
நன்றி: சி.கலைவிழி (ஆதவி), இருப்பு

**வீரவணக்கம்**

# 1.03.2009 தொடக்கம் 05.04.2009 வரை ஆனந்தபுரத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இந்த மாவீரர்களுக்கும் இதில் பெயர் குறிப்பிடத் தவறிய அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிகேடியர் தீபன்
பிரிகேடியர் ஆதவன் (கடாபி)
பிரிகேடியர் விதுசா
பிரிகேடியர் துர்க்கா
பிரிகேடியர் மணிவண்ணன்
கேணல் தமிழேந்தி அப்பா
கேணல் நாகேஸ்
கேணல் தமிழ்ச்செல்வி
கேணல் அமுதா
கேணல் சேரலாதன்
கேணல் அன்ரன்
கேணல் அகிலேஸ்
கேணல் கோபால்
கேணல் ஜயனார்
கேணல் இளங்கீரன்
லெப். கேணல் நளன்
லெப். கேணல் பாரதி
லெப். கேணல் அகநிலா
லெப். கேணல் அறிவரசி
லெப். கேணல் குயில்வேந்தன்
லெப். கேணல் நசீர்
லெப். கேணல் வாகீசன்
மேஜர் சித்தா
மேஜர் ஒளிவாணன்
பூங்குயிலன் புலனாய்வுத்துறை (நிலை தெரியாது)
லெப். கேணல் குமரச்செல்வன் (சிறி)
மேஜர் கெங்கா (சங்கீதன்)
லெப். கேணல் அமிர்தாப்
லெப். கேணல் மொழி
லெப். கேணல் சசி
மேஜர் செங்கையாழினி
மேஜர் கலைமகள்
மேஜர் செஞ்சுரபி
லெப்டினன்ட் அகல்மதி
2ம் லெப்டினன்ட் அலையரசி
கில்லியரசன்
(ராதா படையணி) நிலை தெரியாது
லெப். கேணல் புரட்சிநிலா
மேஜர் எழில்வேந்தினி
மேஜர் யாழிசை
கப்டன் அருளரசி
கப்டன் யாழரசி
கப்டன் நந்தா
2ம் லெப்டினன்ட்
முகிளினி
கப்டன் தமிழருவி
கப்டன் மகிழன்
மேஜர் குரலமுதன்
லெப். கேணல் மாயவன்
லெப். கேணல் மகேந்திரம்
குமணன் (நிதித்துறை) நிலை தெரியாது
அமுதினி (நிதித்துறை) நிலை தெரியாது
லெப். கேணல் மெய்யறிவு
லெப். கேணல் நிலான்
லெப். கேணல் பிரபு
நீலவாசன் (வடபோர்முனை கட்டளைப் பணியகம்) நிலை தெரியாது
லெப். கேணல் வீஸ்மன்
லெப். கேணல் இளமாறன்
மேஜர் அழகு
மேஜர் தமிழேந்தி

மேஜர் தவம்
மேஜர் எழிச்சி
மேஜர் பாரதி
மேஜர் செங்குமரன்
மேஜர் செம்முகிலன்
மேஜர் தமிழ்பிரியன்
மேஜர் கவியாளன்
கப்டன் மெய்யாளன்
கப்டன் கொடைவெற்றி
கப்டன் இனியவன்
கப்டன் வீரக்கொடி
கப்டன் இகழ்
கப்டன் தூயவன்
லெப்ரினன்ட் இசைமலை
லெப். கேணல் அருந்தா
லெப். கேணல் புனிதா
மேஜர் சுரேந்திரா
ஃஅன்புமதி
மேஜர் இந்துமதி
லெப். கேணல் கிந்துஸ்தானி
லெப். கேணல் அன்பு
லெப். கேணல் ஆனந்தன்
ஆனந்தபுர முற்றுகைச் சமர் களத்தில் நேரடியாக நின்ற போராளியின் பதிவு






லெப்.கேணல் ராதா வான்காப்புப் படையணி

ஆனந்தபுர முற்றுகைச் சமரில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த சகல படையணிகளும் பங்குபற்றியிருந்தன. அதைப்போன்று லெப்.கேணல் ராதா வான்காப்புப் படையணியில் பின்களப் பணியிலிருந்த எமது அணி போராளிகள் 40 பேர் ஆனந்தபுர முற்றுகை முறியடிப்புக்காக கணினிபிரிவின் 100ற்கு மேற்பட்ட பெண்போராளிகளை உள்ளடங்கிய தாக்குதல் அணியாக சென்றோம். எமது அணியை தாக்குதல் திட்டத்தின்படி மூன்று அணியாக பிரிக்கப்பட்டிருந்தது. அதன்படி ஒரு அணி தடையை உடைக்க மற்ற இரு அணிகளும் உள்நுழைவதே திட்டமாக இருந்தது. மார்ச்சு மாதம் 31 ம்திகதி எங்களது இரு அணிகள் ஆனந்தபுரத்தினுள் சென்றது ஒரு அணி ஆனந்தபுரத்திற்கு வெளியே பச்சைபுல் வெளியில் நிலை எடுத்தது. ஆனந்தபுர முற்றுகையிற்குள் எமது அணியினை சேர்ந்த 25ற்கு மேற்பட்ட நண்பர்களும் அதை போன்று முற்றுகையை உடைப்பதற்கான முயற்சியில் 5ற்கு மேற்பட்ட நண்பர்களும் வீரச்சாவடைந்திருந்தனர். அதைப்போன்று எமது அணியுடன் வந்த பெண்போராளிகளில் பெரும்பாலானோர் வீரச்சாவடைந்தும் விழுப்புண் அடைந்திருந்தனர். இந்த ஆனந்தபுர முற்றுகைச் சமரில் வீரச்சாவடைந்த எமது அணியினர் விபரங்கள்,

லெப்.கேணல் அனுஷன்
லெப்.கேணல் கபிலன்
லெப்.கேணல் அந்தியாஸ்
லெப்.கேணல் இளவரசன்
லெப்.கேணல் ஆற்றலோன்
லெப்.கேணல் பெருங்கீரன்
லெப்.கேணல் ஏழிசை
லெப்.கேணல் மதிவர்மன்
லெப்.கேணல் வல்லவன்
லெப்.கேணல் குலம்
லெப்.கேணல் கண்ணன்
லெப்.கேணல் நிறஞ்சன்
லெப்.கேணல் தயாபரன்
லெப்.கேணல் மைந்தன்
லெப்.கேணல் வண்ணம்
மேஜர் வாணவன்
மேஜர் சோலையப்பன்
கப்டன் சுடரவன்

கால நீட்சியில் எமது நினைவுகளில் 18 நண்பர்களின் பெயர்களே நினைவில் உள்ளது. அதைபோன்று சில நண்பர்களின் புகைப்படங்களே எம்மால் சேகரிக்க முடிந்தது ஆனந்தபுர முற்றுகைச் சமரின் பதிவுகளை பதிய முற்பட்ட போதே காலம் பல நினைவுகளை அழித்துள்ளதை உணரமுடிகிறது. எம்மை போன்று வாழும் சகமுன்னால் போராளிகள் உங்களுடன் உடன் களமாடிய நண்பர்களின் நினைவுகளையும் தியாகங்களையும் பதிவிடுங்கள் ஒரு போராளியின் சாவு சாதாரண சாவல்ல அது தமிழீழ விடுதலைக்கான வரலாறு.












# திருகோணமலை கின்னியா ஏழு வெந்நீர் ஊற்றும் பறிபோகும் அபாயம்!

மார்க் 16, 2023

இராவணன் தன் தாயின் இறுதி கிரிகைகளுக்காக தனது வாள் கொண்டு உருவாக்கியதாக இலக்கியங்களில் சொல்லப்படும் திருகோணமலை கன்னியா ஏழு வெந்நீர் ஊற்றும் பரிபோகும் அபாயத்தில் தொங்கிக்கொண்டிருக்கின்றது.

அந்த கன்னியா ஏழு வெந்நீர் ஊற்று கிணறுகளை பார்வையிட வருவோரிடம் இருந்து கட்டணம் அறவிடப்படுகின்றது. அதற்காக கட்டணச்சீட்டும் விநியோகிக்கப்படுகின்றது.

வருமான முகாமை மற்றும் பராமரிப்பு என்பன பௌத்த அடையாளம் இருப்பதாக சொல்லப்பட்டு தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

விநியோகிக்கப்படும் கட்டணச்சீட்டில், இது அநுராதபுர காலத்தில் பயன்படுத்தியதாகவும், தொல்லியல் சான்றுகளால் நிரூபிக்கப்பட்ட பௌத்த மத வளாகத்தில் இது அமைந்திருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




# 13வது திருத்தம் குறித்த பேச்சுவார்த்தைகளிற்காக பௌத்தமதகுருமாரை சந்திக்க விக்கி விருப்பம்!

மார்க் 16, 2023

அரசமைப்பின் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகளிற்காக மகாநாயக்க தேரர்களை சந்திப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகளும் சிவில் சமூகத்தினரும் விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவி விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவொன்று இதற்கான விருப்பத்தை வெளியிட்டுள்ளதுடன் பதிலுக்காக காத்திருக்கின்றது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகாநாயக்க தேரர்கள் உட்பட பௌத்தமதகுருமார்களின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து ஜனாதிபதி 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து பேசுவதை நிறுத்தியுள்ளார் என சிவி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சமீபத்தைய யாழ்ப்பாண விஜயத்தின் போது ஜனாதிபதி 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும் என என்னிடம் தெரிவித்திருந்தார் என விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பௌத்தமதகுருமாரின் எதிர்ப்பை தொடர்ந்து அது குறித்த முயற்சிகளை ஜனாதிபதி கைவிட்டுள்ளார் அவர் அது குறித்து பேசுவதில்லை என விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி 13வதுதிருத்தம் தொடர்பான தனது திட்டத்தை கைவிட்டுவிட்டார் என நான் கருதவில்லை ஆனால் மகாநாயக்க தேரர்களின் எதிர்ப்பினால் அதனை அவர் ஒத்திவைத்துள்ளார் என நான் கருதுகின்றேன் என தெரிவித்துள்ள விக்னேஸ்வரன் நான் மகாநாயக்க தேரர்களிற்கு பகிரங்க கடிதமொன்றை எழுதியுள்ளேன் சமீபத்தில் நான் எழுதிய கடிதத்திற்கு அவர்கள் பதிலளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நான் அவர்களை சந்தித்து இது குறித்து தெளிவுபடுத்த தயார் அவர்கள் உரிய தெளிவின்றி 13வது திருத்தத்தை எதிர்க்கின்றனர் நாங்கள் உரிய விடயங்களை தெளிவுபடுத்த தயார் ஆனால் அவர்கள் எங்களை சந்திக்க தயாரில்லை எனவும் தெரிவித்துள்ள விக்னேஸ்வரன் 13 திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என ஜனாதிபதி தொடர்ந்தும் தெரிவிக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# குற்றவாளியாக முத்திரை குத்தி அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை ஏற்க முடியாது!

**அருட்தந்தை மா. சக்திவேல்**

மார்ச் 18, 2023

பொதுமன்னிப்பு என்ற பெயரில் குற்றவாளியாக முத்திரை குத்தி அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை ஏற்க முடியாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று (18) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாத தடை சட்டத்தினால் 15 வருட வாழ்வை தொலைத்துவிட்ட அரசியல் கைதியான கிளிநொச்சியை சேர்ந்த விவேகானந்தனூர் சதீஷ்குமார் இன்று வெளியுலகையும் குடும்பத்தையும் காணும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

சிறையில் வாடும் ஏனைய அரசியல் கைதிகளும் துரிதமாக விடுதலை செய்யப்பட வேண்டும் எந்த வடிவத்திலும் பயங்கரவாத தடைச்சட்டம் இனிமேலும் தொடர்வதற்கு தெற்கின் சமூகம் இடமளிக்கக்கூடாது அதற்கான அழுத்தத்தை தொடர்ந்து கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

சதீஷ்குமார் மற்றும் அவரது குடும்பத்தாருடைய தனிப்பட்ட மகிழ்வில் நாமும் பங்கு கொள்கின்றோம். ஆனால், பொது மன்னிப்பு என்ற பெயரில் குற்றவாளியாக முத்திரை குத்தப்பட்டு அரசியல் கைதிகளை 'விடுதலை' என வெளியில் அனுப்புவதை, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு என்றுமே ஏற்றுக்கொள்வதில்லை.

அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு என்பது



அரசு பயங்கரவாதத்தினை அங்கீகரிக்கும், அதற்கு எதிரான மக்களின் விடுதலை செயற்பாட்டினை தொடர்ந்து பயங்கரவாதமாக்குவதுமான செயலாகும். தற்போதைய ஜனாதிபதியின் அரசியல் கைதியான சதீஷ்குமாரின் விடயத்திலும் அதுவே மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகள் என்போர் தேசத் துரோகிகள் அல்ல பயங்கரவாதிகளும் அல்ல. அவர்களை குற்றவாளிகளாக அடையாளப்படுத்தி காலத்துக்கு காலம் ஜனாதிபதிகள் விடுதலை என வெளியில் அனுப்புவது என்பது தமிழ் மக்களையும், தமிழர்களின் அரசியல் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தி அவமதிக்கும் செயலாகும்.

தற்போதைய ஜனாதிபதி 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இன பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று பாராளுமன்றத்தில் கொக்கரித்தார்.

தமிழ் மக்கள் விரும்பாத 13ஆம் யாப்பு திருத்தத்தை அமுல்படுத்தப்போவதாக அரசியல் நாடகம் ஆடினார்.

அது பயங்கரவாதமாகும் அரசியல் யாப்பில் உள்ள 13ஆம் யாப்பு திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று கூறி பெருமளவான இயக்கத்தினர் வீதி போராட்டத்தை நடத்தினர். பயங்கரவாத தடைச்சட்டம் இவர்களுக்கு எதிராக பாயவில்லை. இவர்களா தேசப் பற்றாளர்கள்?

விடுதலை செயற்பாட்டை பயங்கரவாதமாக்கி, அதற்கு துணையாக பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வந்து 44 ஆண்டு காலமாக பாதுகாப்பதும், 75வது சுதந்திர ஆண்டிலும் அதன் பாதுகாப்பிலே ஆட்சி செய்ய நினைப்பதும், அச்சட்டத்தினை புதுப் பெயரில் தொடர வழிசமைப்பதும் பயங்கரவாதமாகும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தொடர்ந்து சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளையும் அதே சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தூக்குத் தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் மூன்று அரசியல் கைதிகளையும் அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனையின்றி விடுதலை செய்வதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கை எடுப்பதே தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான ஆரம்ப செயற்பாடு என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

அன்று குட்டிமணி கூறியது போன்று தற்போது அரசு பயங்கரவாதம் வேறு வடிவத்தில் தெற்கு பக்கம் திரும்பியுள்ளது. இதற்கு எதிரான தெற்கின் சக்திகள் தமிழ் மக்களுடைய அரசியலை அங்கீகரித்து அதனை ஏற்றுக்கொள்வதன் மூலம் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிரான செயற்பாட்டை இன்னும் தீவிரப்படுத்த முடியும். இல்லையேல், நாடு தொடர்ந்து பிளவுபட்டே இருக்கும் என்பதையும் தெற்கின் சக்திகள் உணர வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். நாவற்குழியில் தமிழின அழிப்பின் சூத்திரதாரி சவேந்திரசில்வாவிற்கு எதிராக த.தே.ம. முன்னணி

மார்ச் 18, 2023

யாழ். நாவற்குழிக்கு தமிழின அழிப்பின் சூத்திரதாரியும் முப்படைகளின் பிரதானியுமான சவேந்திர சில்வாவின் வருகையைக் கண்டித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஆர்ப்பாட்டமொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் இன்று நாவற்குழி பகுதியில் முன் னெடுக்கப்பட்டுள்ளது.

நாவற்குழியில் அமைந்துள்ள விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட பகுதிக்கு பிரித் ஓதி வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த வழிபாட்டை நடத்துவதற்காகவே தென்னிலங் கையில் இருந்து சவேந்திர சில்வாவுடன், நூற்றுக்கணக் கான பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் பொழுது தமிழர் தேசத்தில் பௌத்த விகாரை எதற்கு! இனப்படுகொலையாளி சவேந்திர சில்வாவே வெளியேறு! நிறுத்து நிறுத்து பௌத்த மயமாக்கலை நிறுத்து! வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு! நாவற்குழி விகாரை சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பின் அடையாளம்! திட்டமிட்ட பௌத்த மயமாக்கலை நிறுத்து! நாவற்குழி தமிழர் தேசம்! தமிழர் தேசத்தில் புத்த கோயில் எதற்கு! ஆகிய பதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்பொழுது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன்,தமிழ் தேசிய உட்பட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.












# "அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலைக்காக கைகோர்க்க வேண்டும்"!

மார்ச் 19, 2023

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சுமார் 15 வருடங்களாக சிறைவாசம் அனுபவித்துவந்த தமிழ் அரசியல் கைதியான செல்லையா சதீஸ்குமாருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது. அவர், கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுதலைச் செய்யப்பட்டார்.




சிறீலங்கா ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் நல் லிணக்க நடவடிக்கைகளில் ஒன்றாக அவர் விடுதலைச் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது விடுதலைக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத் துரைத்த அவர், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர் புடையவர் என்றக் குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டு நான் கைது செய்யப்பட்டேன்.

எனக்கெதிரான வழக்கு, வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. அந்த நீதிமன்றத்தால் எனக்கு ஆயுட்சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அதனை ஆட்சேபித்து மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய் திருந்தேன். அந்த வழக்கு விசாரணை ஐந்து வருடங் களாக நடைபெற்றதன் பின்னர், எனக்கு விதிக்கப் பட்டிருந்த தண்டனை மீளுறுதி செய்யப்பட்டது.

அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தேன். சுமார் ஏழு வருடங்களாக அந்த நீதிமன் றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தது.

இந்நிலையில்தான், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு மற்றும் நல்லிணக்க அடிப்படையில் நான் உட்பட 3 பேருக்கு பெப்ரவரி 1ஆம் திகதியன்று பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டது.

அன்றையதினமே ஏனைய இருவரும் விடுதலைச் செய் யப்பட்டனர். நான், தாக்கல் செய்திருந்த வழக்கு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந் தமையாலும் அதனை நான் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாலும் சட்டநடவடிக்கை மற்றும் நிர்வாக நடவடிக்கையால் எனது விடுதலை தாமதமானது.

சிறைச்சாலையில். தண்டனையளிக்கப்பட்ட கைதிகளாக 10 தமிழ் அரசியல் கைதிகளும் விளக்கமறியல் கைதிகளாக 14 கைதிகளும் இருக்கின்றனர். ஆகையால் அவர்களின் விடுதலைக்காக குரல் கொடுக்கவேண்டும்.

அத்துடன், "அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலைக் காக ஒவ்வொரு மனித உரிமை அமைப்புகளும் கட்சி, இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் கைகோர்க்க வேண்டும். அது நல்லிணக்கத்திற்கு வழி வகுக்கும்." என்றார்.

# அன்னை பூபதியின் உண்ணாநோம்பு போராட்ட ஆரம்ப நாளான இன்று ஈகைச்சுடர் வணக்கம் முன்னெடுப்பு!

மார்ச் 19, 2023

அகிம்சை ரீதியில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீர்த்த முதல் பெண் என்ற பெருமையினைக் கொண்ட அன்னை பூபதியின் அகிம்சை போராட்ட ஆரம்ப நாளான இன்று (19) அன்னை பூபதியின் பிள்ளைகள் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் மற்றும் புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வத்து, மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மரநிழலில் 1988 ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி சாகும்வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை அன்னை பூபதி ஆரம்பித்தார்.

மகாத்மா காந்தியின் அகிம்சை போராட்டாத்தால் விடுதலை பெற்ற பாரத நாடு என்று வரலாறு கூறப்படும் இந்திய நாடு, அன்னை பூபதியின் அகிம்சைவழி போராட்டத்தை கணக்கில் எடுக்கவில்லை.

முன்னெச்சரிக்கையாக "சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" எனக் கடிதம் எழுதி வைத்தார்.

பத்துப் பிள்ளைகளுக்கு தாயான இவர், நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது.



ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின்னர் 19.04.1988 அன்று காலை 8.45, மணிக்கு அவர் உயிர் நீத்தார்.

அன்னை பூபதியின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட இன்றைய நாளில் மட்டக்களப்பு நாவலடியில் அன்னை பூபதியின் நினைவுத்தூபியில் அன்னை பூபதியின் பிள்ளைகள் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.

# இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் பங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினால் விசாரணைக்கு அழைப்பு!

மார்ச் 19, 2023

போர் முடிந்து 14 ஆண்டுகள் ஆகும் நிலையிலும், தமிழர்கள் திட்டமிட்ட வகையில் இலக்கு வைக்கப்பட்டு பயங்கரவாத தடுப்பு விசாரணைகளுக்கு அழைக்கப் படுவது தொடர்கதையாகவே உள்ளது.

இலங்கை கடுமையான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திவிக்கும் நிலையில், பன்னாட்டு சமூகம் மற்றும் உதவி வழங்கும் நாடுகள், அமைப்புகள், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை முக்கியமானதொரு நிபந்தனையாக வைத்துள்ளனர்.

அந்தச் சட்டம் நீக்கப்படாத வரையில், உதவிகளிற்கான வாய்ப்பு குறைவே என்ற செய்தி சொல்லப்பட்ட நிலையில், ஐ நா மனித உரிமைகள் ஆணையம் உட்பட பல அமைப்புகளிற்கு இலங்கை அரசு போலி வாக்குறுதிகளை வழங்கி தம்மை காப்பாற்றிக்கொள்ள முயல்கிறது என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகியுள்ளது.

நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் அல்லது அதற்கு மாற்றாக சர்வதேச நியமங்களிற்கு ஏற்ப புதிய சட்டம் இயற்றப்படும் என்று இலங்கை அரசு வாக்குறுதியை அளித்தாலும், உள்நாட்டில் அச்சட்டத்தின் கீழ் கைதுகள், அச்சுறுத்தல்கள் தொடரவே செய்கின்றன.

அவ்வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால்



ශ්‍රී ලංකා පොලීසිය
SRI LANKA POLICE
MESSAGE FORM
POLICE 205*

| | | | |
|---|---|---|---|
| Date 2023/03/18 | Time of Receipt | From Station | To Station |
| Sending Operator | Receiving Operator | | |
| From | To | No. | |

Distribution

H 057524 - 10,000 (2022/08)

விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைக்கான காரணங்கள் எவையும் குறிப்பிடப்படாது, சனிக்கிழமையன்று (18) அவருக்கு வழங்கப்பட்டுள்ள எழுத்துமூல அழைப்பாணையில், வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக எதிர்வரும் 2023. 03.24 ஆம் திகதி, மு.ப.9.00 மணிக்கு, பரந்தனில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவுக்கு சமுகமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களினதும் கௌரவ. தவிசாளர்கள் உள்ளிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்பது உறுப்பினர்கள் TID யினரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருந்த நிலையில், கட்சியின் மாவட்டக்கிளைச் செயலாளராக இருந்து சமூகநலப் பணிகளிலும், அரசியற் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திவரும் வீரவாகு விஜயகுமார் அவர்களும் தற்போது விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லை- கொக்குத்தொடுவாயில் பூர்வீக தமிழர் நிலங்கள் அபகரிப்பு!

மார்ச் 20, 2023



முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக வயல் நிலங்களில், எவ்வித முன்னறிவிப்பு இன்றி அரச திணைக்களத்ததைச் சேர்ந்த சிலரால் எல்லைக்கற்கள் நாட்டப்பட்டு அபகரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந் நிலையில் கொக்குத் தொடுவாய் கமக்கார அமைப் பினர், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரை ராசா ரவிகரனை திங்கட்கிழமை (20) அழைத்து அங் குள்ள நிலைமைகளைக் காண்பித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், கொக்குத் தொடுவாய் - கோட்டக்கேணியிலிருந்து, அம்பட்டன் வாய்க் கால், தீமுந்தல், பணம்போட்டகேணி, நாயடிச்ச முறிப்பு, வெள்ளைக்கல்லடி, சிவந்தாமுறிப்பு, சூரியனாறுவரை யான தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக வயல் நிலங்களில் அரச திணைக்களத்தைச் சார்ந்த சிலரால் எல்லைக்கற்கள் நாட்டப்பட்டு அபகரிப்பு முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கோ, கமக்கார அமைப்பினருக்கோ அறிவித்தல் வழங்கப் படாமலேயே குறித்த எல்லைக் கற்கள் நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறக மக்களுக்கு அறிவித்தல் வழங்காமல் எல்லைக் கல் நாட்டும் செயற்பாடொன்று, ஏற்கெனவே கடந்த வருட இறுதிப் பகுதியிலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அப்போது இது தொடர்பில் உரிய அரச அதிகாரிகள் மற்றும், வெலி ஓயா பகுதி நிலஅளவைத் திணைக்களத்தினரோடு பேசி முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் மற்றும், அப்பகுதித் தமிழ் மக்கள் அங்கு நாட்டப்பட்ட எல்லைக் கற்களை அங்கிருந்து அப்புறப்படுத்தியுமிருந்தனர்.

அத்தோடு இனிமேல் இவ்வாறான எல்லைக்கல் நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக இருந்தால் காணிகளுக் குரிய மக்கள், கமக்கார அமைப்பினர், மாவட்ட செய லாளலர் மற்றும், பிரதேச செயலாளர் ஆகியோருக்கு அறி வித்தல் வழங்கியே எல்லைக்கல் நாட்டப்படுமென, எல் லைக்கல் நாட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித் திருந்தனர்.

எனினும் தற்போது மீண்டும் எவ்வித முன்னறிவிப்பு மின்றி தமிழ் மக்களுக்குரிய வயல் காணிகளில் எல்லைக் கற்கள் நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இந் நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பினை ஏற்று குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்ற முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், இது தொடர்பில் உரியவர்களின் கவனத்துக்கு கொண்டுவருவதாகவும் தெரிவித்திருந்தார்



மேலும் குறித்த செயற்பாடுதொடர்பில் மாவட்ட செயலாளர் மற்றும், பிரதேச செயலாளர் ஆகியோரது கவனத்துக்கும் கொண்டுவர உள்ளதாகவும் கொக்குத் தொடுவாய் பகுதி தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# தென்தமிழீழம் மட்டக்களப்பு பூநொச்சிமுனை பாலம் திருத்தப் படாமையால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்!

மார்ச் 20, 2023



மட்டக்களப்பு பூநொச்சிமுனை பாலம் திருத்தப்படாமை யால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த உள் வீதியினூடாக சுமார் 5000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இலகுவாக பஸ் வண்டியில் செல்வதற்கு வசதி செய்யப் பட்டிருந்த பாதையாகவும் இது கருதப்படுகிறது.

இது தவிர இப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர் களும் இலகுவாக நகர பாடசாலைகளுக்கு செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பாதை முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதனால் தமது கருமங்களை முடித்துக் கொள்வதற்காக அதிக பணம் செலவு செய்து நீண்ட பாதை ஊடாக பயணிக்க வேண்டி இருப்பதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி வறிய மக்களின் பிரதான பாதையாக கருதப் படுகின்ற இப்பாதையின் இப் பாலத்தை திருத்தம் செய்து தருவதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நட வடிக்கை எடுக்க வேண்டு மென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் .

இப்பாலம் இடிந்து நொறுங்கி சுமார் இரண்டு வருட காலத்தை கடந்து இருக்கின்ற போதிலும் இப்பிரதேசத் திற்கு வருகை தந்த அரசியல்வாதிகளோ அரசியல் அதிகாரம் படைத்தவர்கள் எவரும் இதனை திருத்த கவனம் செலுத்தவில்லை என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலத்தின் திருத்த வேலை பிரதேச மக்களுக்கு அத்தியாவசிய தேவையாக கருதப்படுவதனால் விரைவாக இந்தப் பாலத்தை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யகம்பத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்றத்துக்கு இராணுவத்தினர் எவரும் சமூகமளிக்கவில்லை!

மார்ச் 22, 2023



இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப் பட்டிருந்த விடுதலைப்புலிகளின் திருகோணமலை அரசியல் துறை பொறுப்பாளராக செயற்பட்ட எழிலன் உட்பட ஏனையோரை இன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு வவுனியா மேல்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த போதும் இன்றைய தினம் எவரும் அழைத்துவரப்பட்டிருக்கவில்லை.

இன்றைய தினம் நீதிபதி வருகைதராமையினால் வழக்கு மீண்டும் திகதியிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராக செயற்பட்ட எழிலன் உட்பட இறுதிக் கட்ட போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக சரணடைந்த குடும்ப அங்கத்தவர்கள் சார்பில் ஆட்கொணர்வு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மனுமீதான தீர்ப்பினை வவுனியா மேல்நீதிமன்றம் கடந்த மாதம் வழங்கியிருந்தது. தீர்ப்பில் காணாமல் ஆக்கப் பட்டவர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர் என்பதற் குரிய ஆதாரங்கள் இருப்பதில் மன்று திருப்தியடைந் திருந்தது.

அத்தகைய நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத் துவதுடன், அப்படி முடியாது போனால் அதற்கான காரணங்களை நீதிமன்றில் இன்றைய தினம் விளக் கமளிக்குமாறும் வழக்கு திகதியிடப்பட்டிருந்தது.

எனினும் இன்றைய தினம் நீதிபதி மன்றுக்கு சமூகமளிக் காமையினால் குறித்த வழக்கு எதிர்வரும் மே மாதத்திற்கு திகதியிடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் இன்றைய தினம் இராணுவம் சார்பாக சட்டத் தரணி ஒருவரே மன்றுக்கு சமூகமாகியிருந்ததுடன், வேறு எவரும் நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதற்கான நட வடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அரிக்கன் விளக்குடன் வவுனியாவில் போராட்டம்!

மார்ச் 22, 2023

வவுனியாவில் அரிக்கன் விளக்குடன் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளால் போராட்டம் இன்று (22) முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் கொட்டகைக்கு முன் பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்த போது நாம் போராட்டம் ஆரம்பிக்கும் போது அரிக்கன் விளக்குகளையே பயன்படுத்தினோம். எனினும் எமது போராட்ட இடத்துக்கு மின்சார சபையே மின்சாரம் வழங்கியது.

தற்போது மின்சாரசபை அதனை நிறுத்தியதுடன் எமது போராட்டத்தை குலைக்க இந்த அராசங்கம் அடாத்தாக, எம்மை கைது செய்தது. ஆனாலும் எமது போராட்டம் தொடரும் என்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க உதவியை கோரியதுடன், இந்திய பிரதமர் மோடிக்கு நோபல் பரிசு வழங்குவதற்கும் எதிர்ப்பு தெரிவித்திருந்ததுடன் அமெ ரிக்கா, ஐரோப்பிய கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.









# முல்லை மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுப்பு!

மார்ச் 21, 2023

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களில் சத்தமில்லாமல் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மணலாற்றின் கற்தூண், அக்கரைவெளி, வண்ணாமடு, மணற்கேணி ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு சத்தமில்லாமல் பௌத்தமயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதித் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இது தொடர்பில் அப்பகுதி தமிழ் மக்கள் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, அவர் நேற்று (20) குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தமிழர்களின் பூர்வீக மணலாற்றின் கற்தூண்பகுதியை மகாப்பிட்டிய என்னும் பெயரிலும், வண்ணாமடு பகுதியை வண்ணாமடுவ என்னும் பெயரிலும், அக்கரைவெளி பகுதியை அக்கரவெலிய என்னும் பெயரிலும் பௌத்த பிரதேசமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதேபோல் மணற்கேணிப் பகுதியையும் அவ்வாறே பௌத்த பிரதேசமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அப்பகுதித் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த 1984ஆம் ஆண்டு தமிழ்மக்கள் குறித்த பகுதிகளிலிருந்து இடம்பெயர்வதற்கு முன்பு கற்தூண் பகுதியில் வைரவர் ஆலயம் இருந்ததாகவும், அக்கரை வெளியில் முனியப்பர் ஆலயமொன்று இருந்ததாகவும், அவ்வாறு இருந்த கோவில்களை உடைத்தழித்து தற்போது அந்த இடங்களை பௌத்த பகுதிகளாக மாற்றுவதற்கு முயற்சிகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் மணற்கேணிப் பகுதியில் இருந்த சைவ வழிபாட்டு அடையாளங்கள் உடைக்கப்பட்டு அங்கும் பௌத்தமயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அப்பகுதித் தமிழ்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை அக்கரைவெளியில் 1984ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருந்ததாகவும், மாட்டுப்பண்ணைகள், விவசய நிலங்கள் என தமிழ் மக்கள் சிறப்பாக வாழ்ந்த இடங்களையே பௌத்தமக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருதாகவும் தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்போது அக்கரைவெளிப் பகுதியில் கொக்கிளாய் பகுதியிலுள்ள தமிழ் மக்களும், கற்தூண் பகுதியில் கொக்குத்தொடுவாய் பகுதித் தமிழ் மக்களும், மணற்கேணி மற்றும், வண்ணாமடுப் பகுதிகளில் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணித் தமிழ் மக்களும் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.



இந்நிலையில் அண்மைக்காலமாக அந்தப் பகுதிகளுக்கு பௌத்த தேரர்கள் உள்ளிட்ட குழுவினர் அதிகளவில் வந்து செல்வதாகவும், பௌத்த மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தமிழ்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் கற்தூண்ப் பகுதிக்கு முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனை அழைத்துச் சென்ற தமிழ் மக்கள் அங்கு முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளைக் காண்பித்தனர்.

குறித்த பகுதிகளிலிருந்து தம்மை அப்புறப்படுத்தவே இவ்வாறான பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுகாகப்படுவதாகவும் அப்பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.



அத்தோடு ஏற்கனவே தமிழர்களின் பூர்வீக மணலாற்றுப் பகுதியின் பிரதான இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயாவாக மாற்றப்பட்டுள்ளதுடன், தமது நீர்ப்பாசனக் குளங்களும் அதன்கீழான வயல் நிலங்களும் அபகரிக்கப்பட்டதைப்போன்று, அவற்றை அண்டிய மானாவாரி விவசாய நிலங்களையும் ஆக்கிரமிப்பதற்கான அபாயம் இந்த பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் மூலம் ஏற்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# வடக்கு மாகாணத்தில் மாணவர்கள் இன்மையால் 103 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன!

## மாகாண கல்விப் பணிப்பாளர்

மார்ச் 14, 2023



வடக்கு மாகாணத்தில் போர் முடிவடைந்த பின்னரான 14 ஆண்டுகள் காலப்பகுதியில் மாணவர்கள் இன்மையால் 103 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 49 பாடசாலைகளும், கிளிநொச்சியில் 8 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 10 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பாடசாலைகளும் வவுனியா மாவட்டத்தில் 34 பாடசாலைகளுமே இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. வவுனியாவில் வவுனியா வடக்கு கல்வி வலயத்திலேயே இந்த எண்ணிக்கை உயர்வாகப் பதிவாகியுள்ளது என றார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் அ.உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கில் எந்தவொரு பாடசாலையும் நிரந்தர மாக மூடப்படவில்லை. வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கூறிய 103 பாடசாலைகளும் தற்காலிகமாகவே மூடப்பட்டுள்ளன. மாணவர் பற்றாக்குறை காரணமாகவே இவை மூடப்பட்டுள்ளன. இதற்கு இடப்பெயர்வுகள், நகர்ப் புற பாடசாலைகளின் வளர்ச்சி, நகரமயமாக்கல், சனத் தொகைப் பற்றாக்குறை எனப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பால் இன்று சில பாடசாலைகளில் புதிதாகக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. மறுபுறம் சில பாடசாலைகள் மூடப்படுகின்றன. நகர்ப்புற பாடசாலைகளின் வளர்ச்சியும் இதற்குக் காரணம். பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சில இடங்களில் மக்கள் இல்லை.

சில இடங்களில் நகரமயமாக்கல் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது. இது குறித்து நாம் அவதானம் செலுத்துகின்றோம். முறைப்படியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை எமது தரப்பில் நாமும் முன்னெடுப்பதற்குத் தயாராக உள்ளோம். தற்காலிகமாகப் பாடசாலைகளை மூடுவது எமது விருப்பு அல்ல. போதிய எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தருவார்களாயின் நிச்சயமாக பாடசாலைகள் மீள ஆரம்பமாகும்-என்றார்.

# தமிழர்களின் உரிமைகளை பறிப்பதில் அரசாங்கம் விசேட கவனம்!

## பா.உ. சி. சிறிதரன்

மார்ச் 24, 2023

தமிழர்களின் உரிமைகளை எவ்வாறு பறிக்கலாம் என்பது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. பிற இனங்களையும், அவர்களின் உரிமைகளையும் அழிக்கும் கொள்கையில் இருந்து அரசாங்கம் முதலில் வெளிவர வேண்டும், அதனை விடுத்து செயற்பட்டால் உலகில் உள்ள சொத்துக்கள் அனைத்தையும் கொண்டு வந்தாலும் இந்த நாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

சிறீலங்கா பாராளுமன்றத்தில் இன்று (24) வெள்ளிக்கிழமை இடம் பெற்ற சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் நிதியுதவி ஒத்துழைப்புக்கு அனுமதி கிடைத்தவுடன் ஒரு தரப்பினர் பட்டாசு வெடித்து, கொண்டாடும் நிலை காணப்படுகிறது.

ஆனால் நாடு 54 பில்லியன் டொலர் கடனாளியாக உள்ளது. நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய வேண்டும். பொருளாதார மேம்பாட்டுக்கான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க தயாராக உள்ளோம். பொருளாதார பாதிப்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்கள் சுதந்திரமாக, நிம்மதியாக வாழும் சூழல் இந்த மண்ணில் உள்ளதா? பல்வேறு கட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் வாழ்வியல் கட்டமைப்பில் ஒரு அனுகுமுறையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா, நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இதுவரையில் ஆட்சிக்கு வந்த அரச தலைவர்கள் அவதானம் செலுத்தவில்லை, சிறந்த தலைவரை இந்த நாடு தெரிவு செய்யவில்லை.

வரி விதிப்பு ஊடாக நாடு முன்னேற்றமடையும் என்றால் இந்த நாடு எப்போதோ முன்னேற்றமடைந்திருக்கும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் வரி விதிக்கப்படுகிறது,இதனால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டு மக்களை பொருளாதார ரீதியில் அதளபாதாளத்துக்குள் தள்ளி எவ்வாறு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர அரசாங்கம் கடன் பெற்றது. சொந்த மண்ணில் வாழ்ந்த மக்களை கொல்வதற்கு அதிக ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இதனால் நாடு கடன் சுமைக்குள் தள்ளி இன்று மீள முடியாத வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் இன்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் அரச அதிகாரிகள் கூட பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு பாரிய மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். யுத்தம் முடிவடைந்த பின்னரும் நிம்மதியாக வாழ முடியாத நிலை காணப்படுகிறது.

முன்னாள் போராளிகள் என்ற காரணத்தினால் புனர்வாழ்களிக்கப்பட்ட தமிழ்கள் திட்டமிட்ட வகையில் நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

தமிழர்களை எந்த நேரமும் விசாரணைக்கு அழைக்க முடியும் என்ற நிலையே இந்த நாட்டில் காணப்படுகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக புதிய பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி வெளியானதாக குறிப்பிடப்படுகிறது, ஆனால் இதுவரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை ஒரு நீதியான நாடாக காணப்படவில்லை. குருந்தூர் மலையில் வலுக்கட்டாயமான முறையில் ஆதிசிவன் ஆலய அம்சங்களை அழித்து விட்டு புத்த விகாரையை பௌத்த பிக்குகள் ஸ்தாபித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டுமான பணிகளுக்கு தடை விதிக்கப்பட்டும், பிக்குகள் அதற்கு எதிராக செயற்பட்டு பாரிய விகாரையை அமைத்துள்ளார்கள்.

இந்த நாட்டில் நீதிமன்றங்களை இவர்கள் மதிக்கிறார்களா, நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய அமைச்சர், அதிகாரிகள் செயற்படுகிறார்களா, இந்த நாட்டில் நீதியில்லை.

மிருசுவில் படுகொலையுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரியை முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ விடுதலை செய்தார், ஆனால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை, திருகோணமலை மாணவர்கள் படுகொலைக்கு இதுவரை நீதி வழங்கப்படவில்லை, மறுபுறம் கிருஷாந்தி படுகொலைக்கு நீதி கிடைக்கப்பெறவில்லை. ஆகவே நாட்டில் நீதி எங்குள்ளது.

தமிழ்களின் பூர்வீக நிலங்களை எவ்வாறு அபகரிப்பது என்பது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருகிறது.நெடுந்தீவு வெடியரசன் கோட்டை என முதலில் வர்த்தமானி வெளியிடப்பட்டது.

பின்னர் அங்கு பிக்குகளின் வசதிக்காக கோட்டையை



மடம் என குறிப்பிட்டு இரண்டாவது வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. தற்போது அது ஒரு பௌத்த விகாரை என வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. கடற்படையினர் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

இலங்கையின் பௌத்த தமிர்கள் வாழ்ந்துள்ளார்கள். சீனா, ஜப்பான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் பௌத்த மதம் உள்ளது, ஆகவே இங்கு குறிப்பிடுவதை போன்று அந்த நாடுகளையும் பௌத்த சிங்களம் என குறிப்பிட முடியுமா, தமிழர்கள் ஒரு காலத்தில் பௌத்தர்களாக வாழ்ந்துள்ளார்கள். கி.மு.3 ஆம் நூற்றாண்டு காலத்தில் அதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

தொல்லியல் நிபுணர்கள் என்.கே. திருச்செல்வனின் ஆய்வு அறிக்கையில் இலங்கையில் 2300 ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்ததாக பிராமி கல்வெட்டில் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் சிங்கள தொல்லியன் நிபுணர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் கிடைக்கப் பெறும் போது அதன் பிராமின் வடிவம் தொடர்பில் அவதானம் செலுத்தாமல் அந்த பகுதி சிங்கள குடியேற்றம் என அரசாங்கம் தீர்மானிப்பது அபத்தமானது. தமிழ்கள் தமது பூர்வீக நிலங்களில் இருந்து புறந்தள்ளப்படுகிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழர்களின் இருப்பு திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகிறது, தமிழர் பகுதியில் ஒரு இராணுவ படையினர் கனவு கண்டேன் என்று குறிப்பிட்டுக் கொண்டு புத்தர் சிலை வைத்தால் அதனை சிங்கள குடியேற்றமாக எவ்வாறு குறிப்பிட முடியும்.

முறையற்ற வகையில் செயற்படும் போக்கு அரசாங்கத்திடம் கிடையாது. மதம், இனம் ரீதியாக முன்னேற்றம் காணப்பட்டால் மாத்திரமே நாடு முன்னேறும் அதனை விடுத்து பிற இனங்களை அழித்து முறையற்ற வகையில் செயற்பட்டால் உலகில் உள்ள அனைத்து சொத்துக்களை கொண்டு வந்தாலும் இந்த நாடு முன்னேறாது என்றார்.

# வவுனியாவில் சிறீலங்கா படையினரின் வெறித்தனமான தாக்குதல் இருவர் வைத்தியசாலையில் அனுமதி!

மார்ச் 26, 2023

சிவில் உடையில் மதுபோதையில் வந்த சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர், தாக்கியதாக தெரிவித்து வவுனியா வைத்தியசாலையில் இருவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விஞ்ஞானகுளம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய சச்சிதானந்தன் சதாநந்தன், மரையடித்தகுளம், செங்கராத்தி மோட்டைப் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய சிற்றம்பலம் கேதீஸ்வரன் ஆகிய இருவரே, வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா - மரையடித்தகுளம், செங்கராத்திமோட்டை பகுதியில் தமது காணியை துப்பரவு செய்துவிட்டு வீடு திரும்பியபோது, மதுபோதையில் சிவில் உடையில் வந்த விசேட அதிரடிப்படையினர் தங்களை தாக்கியதாகவும், ஊர்மக்கள் ஒன்றுகூடியதையடுத்து அவர்கள் அங்கிருந்து



சென்று விட்டனர் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை பொலிசாரிடம் முறையிட்டுள்ளதாகவும், தெரிவித்தனர்.

# கச்சதீவில் உள்ள புத்தர் சிலையை உடனே அகற்றுங்கள்!

## கச்சதீவு யாத்திரை தல பரிபாலகர் அருட்பணி வசந்தன் அடிகளார்

மார்ச் 24, 2023



இரு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் என கச்சதீவு யாத்திரை தல பரிபாலகர் அருட்பணி வசந்தன் அடிகளார் கோரிக்கை விடுத்தார்.

கச்சதீவில் பௌத்த சின்னங்களில் புத்தர் சிலை வைக்கப் பட்டமை தொடர்பான புகைப்படங்கள் வெளியான நிலை யில் இன்றையதினம் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவு என்றாலே தமிழக மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்களுக்கும் ஏன் அண்மைய காலமாக சிங்கள மக்களுக் கும் ஞாபகத்துக்கு வருவது புனித அந்தோனியார் ஆலயமே.

கச்சதீவு அந்தோனியாருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தீவாக தொன்றுதொட்டு காணப்படுகின்றது.

ஆனால் திட்டமிட்ட வகையில் அண்மைய நாட்களில் இரண்டு புத்த பெருமானின் சிலைகள் வைக்கப்பட்டதுடன் அரச மரக்கன்றுகளும் நாட்டப்பட்டுள்ளது.

யாருக்கும் தெரியாத வகையில் உயரமாக பனை ஓலை களால் வேலியமைத்து அது மூடப்பட்டு காணப்படுகின் றமையை சில நாட்களுக்கு முன்னர் பார்த்த புகைப் படங்கள் மூலம் அறியக்கிடைத்தது. எதிர்காலத்தில் வரலாற்றை திரிபுபடுத்துவதற்கான முயற்சியே இது.

கச்சதீவில் புனித அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருக் கின்றது. அங்கு 7 தொடக்கம் 10 வரையான கடற்படை யினர் கடமையாற்றுகின்றனர். அவர்கள் வழிபட சிறிய தான புத்தர் சிலையை வைத்து வழிபடலாம். ஆனால் இவ்வளவு பெரிய புத்தர் சிலைகள் எதற்கு? அதை ஏன் மறைத்து வைத்திருக்க வேண்டும். கச்சதீவில் எந்தப் பகுதியிலும் அரச மரங்கள் இல்லை. ஆனால் திட்டமிட்ட வகையில் அரசமரங்கள் நாட்டப்பட்டுள்ளது. வடகிழக்கு தமிழர் பகுதியில் பௌத்த திணிப்பு திட்டமிட்டு மேற்கொள் ளப்படுகின்றது.

போருக்கு பின்னர் இன ஒற்றுமை பற்றி பேசப்படும்போது இவ்வாறான விடயங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

இரு நாடுகளின் அடையாள சின்னமாக விளங்கும் கச்சதீவு பகுதியிலுள்ள இவ்வாறான விடயங்கள் அகற் றப்பட வேண்டும். கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் புனிதத்திற்கும் தனித்துவத்திற்கும் பாதிக்காத வகையில் புத்தர் சிலைகள் அகற்றப்பட வேண்டும் - என்றார்.

# கச்சதீவில் முளைத்துள்ள புத்தர் சிலை உடனடியாக அகற்ற வேண்டும்!

## நா.ம.உ. சார்ள்ஸ் நிர்மலநாதன்

மார்ச் 24, 2023



கத்தோலிக்கர்களால் கொண்டாடப்படும் கச்சதீவில் முளைத்துள்ள புத்தர் சிலை சர்ச்சைகளை தோற்று வித்துள்ளது. ஏற்கனவே கடற்படையினர் வசமுள்ள பாலைதீவு முதல் கக்கடதீவு வரை அண்மை நாட்களில் புத்தர்சிலைகள் முளைத்துள்ளன.

இதனிடையே கச்சதீவில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை உடனடியாக அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மய மாக்கலை முன்னெடுக்கும் படையினர் கச்சத்தீவையும் விட்டுவைக்காது அங்கே பெரிய புத்தர் சிலையொன்றை பிரதிஸ்டை செய்துள்ளார்கள்.

கச்சத்தீவு இலங்கை கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கச்சத்தீவை இந்தியா இலங்கைக்கு வழங்கும் போது அந்தோனியார் ஆலயத்துடனேயே வழங்கப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாடுகள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. இந்தியாவின் ஒத்துழைப்பை ஒருபோதும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

கடந்த 3,4ஆம் திகதிகளில் கச்சத்தீவு புனித அந்தோனி யார் ஆலயத் திருவிழா நடைபெற்றபோது. தமிழ்நாட்டில் இருந்து 2281 பேரும் இலங்கையின் வடக்கு மாகாணத் தில் இருந்து நான்காயிரத்திற்கும் அதிகமான பக்தர்களும் கச்சதீவு திருவிழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

கச்சத்தீவில் அந்தோனியார் ஆலயம் மாத்திரமே இவ் வளவு காலமாக இருந்தது. ஆனால் இப்போது அங்கே பெரிய புத்தர் சிலை எப்படி வந்தது என்பது கேள்வியாக வுள்ளது.

இலங்கையில் இருப்பவர்களுக்கும் தமிழ்நாட்டில் இருப் பவர்களுக்கும் கச்சதீவு அந்தோனியார் ஆலயத்திற்கு உரிய இடமென்று தெரியும். வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்த அடையாளங்களை நிறுவிவருகின்றன. படை யினரால் கச்சத்தீவில் மிகப்பெரிய புத்தர் சிலை நிறுவப் பட்டுள்ளது.

கச்சத்தீவையும் விட்டுவைக்காத நிலைமையே இருக் கின்றது. இதனை உடனடியாக அகற்ற வேண்டும். கடற்படையினர் வழிபடுவதற்காக அது வைக்கப்பட்டது என்று பதில் வரலாம் கச்சத்தீவு திருவிழாவின் போது கடற்படையினரின் விருந்தினர்களுக்கே முன்னிலை வழங்கப்பட்டதாகவும் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

# நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைத்து எறியப்பட்டுள்ளது!

மார்ச் 26, 2023



வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் கழற்றி வீசப்பட்டுள்ளதுடன், ஏனைய விக்கிரகங்களும் மாயமாகியுள்ளன.

அங்கு, வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களமும்,நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்ப்படுத்தி வந்ததுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த 2021 ஆம் ஆண்டு வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தன.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த நிலையில் தொல்பொருட்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஆலயத்தின் நிர்வாகத்தினர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டனர்.

எனினும், குறித்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆலயத்தின் பூசகர் மற்றும் நிர்வாகத்தினர்கள் வழக்கிலிருந்து தற்காலிகமாக கடந்தவருடம் விடுதலை செய்யப்பட்டதுடன், குறித்த சம்பத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதராங்களுடன் கண்டறிந்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு பொலிசாருக்கு நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று (26) காலை ஆலயத்திற்கு சென்ற கிராமமக்கள் மற்றும் பூசகர் ஆலய விக்கிரகங்கள் திருடப்பட்டு அழித்தெறியப்பட்டமையை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.







குறிப்பாக ஆலயத்தின் பிரதான விக்கிரகமான ஆதிலிங்கம் அகழ்ந்து எடுக்கப்பட்டு அருகில் இருந்த புதருக்குள் வீசப்பட்டிருந்தது. அத்துடன் பிள்ளையார், அம்மன், வைரவர் விக்கிரங்களும் பெயர்த்தெடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கத்தை உடைத்தமையை கண்டித்து யாழ். பல்கலைகழகத்தில் போராட்டம்!

மார்ச் 27, 2023

நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்ட ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையை கண்டித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்பாக இன்றைய தினம் திங்கட்கிழமை மதியம் கவனயீர்ப்பு போராட்டமொன்று நடைபெற்றது.

குறித்த போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மண்திறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா, வெடுக்குநாறி மலை கச்சதீவு நெடுந்தீவு எங்கள் சொத்து, காவிகளின் அட்டகாசத்துக்கு முடிவில்லையா, இராணுவமே வெளியேறு கடற்படையே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், தொல்பொருட் திணைக்களமே வெளியேறு போன்ற கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டது.










# முல்லையின் எல்லைக் கிராமங்களில் மேலும் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் பௌத்தமயமாக்கம் சைவ வழிபாட்டு அடையாளங்ளும் காணாமலாக்கப்படுகின்றன!

**முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்**

மார்ச் 26, 2023

முல்லைத்தீவின் எல்லைக்கிராமங்களில் மேலும் சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், அந்தப் பின்னணியிலேயே எல்லைக் கிராமங்களிலுள்ள தமிழர்களின் பூர்வீக சைவ வழிபாட்டு அடையாளங்கள் திட்டமிட்டு அரச திணைக்களங்களால் காணாமலாக்கப்படுவதாக முன்னாள் வடமாகாணசபை



உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு எல்லைக்கிராமங்களில் இடம்பெறும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுதொடர்பில் 26.03.2023இன்று நேரடியாக கள ஆய்வு ஒன்றினை மேற்கொண்டு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மக்களோடு மணற்கேணி என்னும் இடத்திற்கு நாம் வருகைதந்திருந்தோம்.

இந்த மணற்கேணி என்னுமிடத்தில், தமிழர்களின் வழிபாட்டு அடையாளமான சிவலிங்கத்தை உடைத்திருப்பதாகவும் இங்கு பௌத்த மயமாக்கல் செயற்பாட்டிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இப்பகுதி மக்களால் எம்மிடம் முறையிடப்பட்டிருந்தது.

அவ்வாறு அவர்கள் முறையிட்டதற்கு அமைவாக நாம் இங்கு வருகைதந்து பார்வையிட்டபோது, இங்கு இருந்த சிவலிங்கத்தின் மேற்பகுதி உடைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டுள்ளது.

சிவலிங்கத்தின் அடிப்பாகம் மற்றும் ஆவுடையார் பகுதிகள் இங்கே உடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணாமல் ஆக்கும் வேலைகளை இலங்கை அரசாங்கத்தினுடைய திணைக்களங்கள் மிகக் கச்சிதமாக செய்துவருகின்றன.

இந்தச் செயற்பாடு முல்வைத்தீவு மாவட்டத்தில் மாத்திரமல்ல வடக்கு கிழக்கெங்கும் சில அரசதிணைக்களங்கள் இவ்வாறான காணாமலாக்கும் வேலையை அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப செய்துவருகின்றனர்.

குறிப்பாக இந்த மணற்கேணிப் பகுதியைப் பொறுத்தவரையில் கடந்த 1970ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் 36 குடும்பங்கள் இப்பகுதியிவ் இருந்ததாகவும், 200இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களுக்கு இப்பகுதியில் வயல் நிலங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறாக இப்பகுதியிலிருந்த தமிழ்மக்களால் வழிபடப்பட்டுவந்த சிவன் ஆலயமே தற்போது உடைக்கப்பட்டு காட்சிதருகின்றது.

இந் நிலையில் தற்போது இந்த இடங்களைப் பௌத்தமயமாக்கும் வேலைப்பாடுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும், வண்ணாமடு என்ற இடத்திலும், மணற்கேணி என்ற இந்த இடத்திலும், கற்றூணடிப் பகுதியிலும் விகாரைகள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறாக எமது தமிழர்கள் வாழ்ந்த பூர்வீக நிலங்களில் விகாரைகளை அமைத்து, தமிழர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் தனது திணைக்களங்களினூடாக செய்துவருகின்றது.

அதேவேளை இந்த பகுதிகளில் தாங்கள் வாழ்ந்ததற்குரிய ஆவணங்கள் பல தம்மிடம் இருப்பதாக இப்பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப்பகுதிகளில் கூட்டுறவுச்சங்கங்கள், கால்நடைப் பண்ணைகள், விவசாய பண்ணைகள் என இந்த பகுதிகள் சிறப்பாக இருந்ததை இப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந் நிலையில் இவ்வாறான இந்த ஆக்கிரமிப்பாளர்களின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது, இப் பகுதிகளில் எமது மக்களை சிறுபான்மையினராக்கி, சிங்களவர்களை இப்பகுதியில் மேலும் குடியேற்றி பெரும்பான்மையினராக்கும் வகையில் குடியேற்றங்களை மேற்கொள்ளப்போகின்







றார்கள் என்பதை இவ்விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன - என்றார்.

# வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் விக்கிரங்களை உடைத்தமை கண்டணத்துக்கு உரியது!

**அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் ஆறு. திருமுருகன்**

மார்ச் 26, 2023

வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்திலுள்ள விக்கிரகங்களை உடைத்தமை கண்டணத்துக்கு உரியது எனத் தெரிவித்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவரும், சைவத்தமிழ் அறிஞருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் இலங்கையின் கௌரவ ஜனாதிபதி விக்கிரகங்களை உடைத்தமை குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஞாயிற்றுக்கிழமை(26.03.2023) இரவு செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சைவமக்களின் தொன்மைகளை அழிக்கும் செயற்பாடு தொடர்கிறது. இது திட்டமிட்டு நடைபெறுகிறது. அரசாங்கம் இத்தகைய செயல்களை நிறுத்த வேண்டும். தொல்லியல் திணைக்களம் ஆதிச் சைவக் கோவில்களை சைவமக்கள் பராமரிப்பதற்குத் தொடர்ந்து இடையூறு செய்வதும்





வேதனைக்குரியது.

ஆலயத் திருப்பணி நடைபெறுவதற்கு இந்து கலாச்சாரத் திணைக்களம் உரிய அனுமதிகளை வழாங்க வேண்டும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து சைவசமயத்துக்கு வரும் இன்னல்களைப் போக்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோவில் அழிக்கப்பட்டமைக்கு எதிராக நல்லூரில் கவனயீர்ப்புப் போராட்டம்!

மார்ச் 28, 2023

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் அழிக்கப்பட்டமைக்கு எதிராகவும், கடந்த சில மாதங்களாக குருந்தூர் மலை, கன்னியா உட்பட ஆதி சிவன் கோவில்கள் வழிபாடு தடுக்கப்பட்டுப் பௌத்த மரபுரிமை களாக, விகாரைகளாக மாற்றப்பட்டு வருகின்றமையைக் கண்டித்தும் தமிழ்ச் சைவப் பேரவை, அகில இலங்கை சைவமகா சபை ஆகியன இணைந்து இன்று செவ்வாய்க் கிழமை(28.03.2023) மாலை-04.30 மணியளவில் நல்லை ஆதீனத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று நடாத்தப்பட்டது.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கீரிமலை மெய்கண்டார் ஆதீன முதல்வர் உமாபதிசிவம் அடிகளார், அருட்தந்தை வண.ஜெயந்தன், தமிழ்ச் சைவப் பேரவையின் தலைவரும், முன்னாள் நீதிபதியுமான இ.வசந்த சேனன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி.பொன்னுத்துரை சந்திர சேகரம், அகில இலங்கை சைவமகாசபையின் தலைவர் நா.சண்முகரத்தினம், அகில இலங்கை சைவமகா சபையின் பொதுச் செயலாளர் வைத்தியகலாநிதி ப.நந்தகுமார், இலங்கை முதல் உதவிச் சங்கத் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குனரும், அரசியல் ஆய்வாளருமான சி.அ.யோதிலிங்கம், முன்னாள் யாழ். மாநகரசபை உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், தமிழ்ச்சைவப் பேரவை மற்றும் அகில இலங்கை சைவமகாசபையின் உறுப்பினர்கள், சமய, சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தொல்லியல் அமைச்சரே! வெடுக்குநாறி மலையைச் சிதைத்த காடையர்கள் யார்? பதில் கூறு!, கன்னியா, குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, கீரிமலை, ஆதிசிவன் கோவில்களில் இடையூறின்றி வழிபட அரசு



ஆவண செய்ய வேண்டும்! , சர்வதேசமே! தமிழினச் சுத்திகரிப்பைத் தலையிட்டு நிறுத்து! உள்ளிட்ட பல சுலோகங்களைத் தமது கைகளில் ஏந்தி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

# தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அடித்து நொருக்கப்பட்டது!

பா.ம.உ. சார்ள்ஸ் நிர்மலநாதன்

மார்ச் 28, 2023

வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்து ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று (28) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று வருடங்களாக வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்து ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு பக்தர்கள் செல்வதையும், திருவிழாக்கள் செய்வதையும் தொல்பொருள் திணைக்களம் ஊடாக பொலிஸார் தடை விதித்து இருந்தனர்.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாக இங்கு திருவிழா செய்ய முடியாமல் இருந்த சூழ்நிலையை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

அதன் அடிப்படையில் தற்போது மூன்று தினங்களுக்கு முன்பு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலயத்தில் இருக்கும் அனைத்து விக்கினங்களும் உடைத்து எரியப்பட்டுள்ளது. குறித்த நடவடிக்கையானது படைத்தரப்பினரால் இடம் பெற்றுள்ளதாக அறிகின்றேன்.

தொல்பொருள் திணைக்களத்தில் உதவியுடன் வெடுக்குநாறி மலையை பௌத்த மயமாக்கி, அதனை விகாரையாக்குவதற்காக அவர்கள் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேல் முயற்சி செய்து வந்தார்கள்.

குறித்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றேன்.

அதே போல் வடக்கு- கிழக்கில் இருக்கும் தமிழர்களின் மத கலாச்சார அடையாளங்களை அழித்து மிக தீவிரமாக பௌத்த மயமாக்க நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றது.

குறித்த செயல்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தொல்பொருள் திணைக்களம் தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் பல்வேறு இடங்களில் குறித்த செயல்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலயம் தாக்கப்பட்டு



உடைக்கப்பட்டமை க்கு எதிராக எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஆரம்பித்து வவுனியா மாவட்டச் செயலகத்தை வந்தடைய உள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு,தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களம் பௌத்த மயமாக்கலுக்கு ஆதரவாக வடக்கு கிழக்கில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவும் அவர் தெரிவித்தார்.

# வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு எதிராக நெடுந்தீவில் போராட்டம்!

மார்ச் 29, 2023

யாழ்.நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையினை கண்டித்தும், கச்சதீவில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இன்று நண்பகல் நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற இந்த போராட்டத்தில் நெடுந்தீவு மக்களும் கலந்து கொண்டு தங்கள் ஆதரவினை தெரிவித்திருக்கின்றனர். நெடுந்தீவு வெடியரசன் கோட்டையினை ஆக்கிரமித்துள்ள தொல்லியல் திணைக்களம் அதனை பௌத்த விகாரையாக அடையாளப்படுத்தி,

அதன் வரலாற்றை திரிபுபடுத்துவதுடன், புதிதாக விகாரையை அங்கு கட்டுவதற்கும் முயற்சித்து வருகின்றது. இதேபோல் கச்சதீவில் அதன் மத அடையாளத்தை மாற்றும் வகையில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளதுடன், ஆங்காங்கே அரச மரங்களும் நாட்டப்பட்டிருக்கின்றது.



இவற்றை கண்டித்தே இன்றைய போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக தமிழ்தேசிய மக்கள் முன்னணியினரும், பொதுமக்களும் இணைந்து வெடியரசன் கோட்டையினை பார்வையிட்டதுடன், அங்கு காலை சிறிது நேரம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினையும் நடத்தியிருக்கின்றனர்.

இன்றைய போராட்டம் காரணமாக யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளில் இருந்து மேலதிக பொலிஸார் நெடுந்தீவுக்கு கொண்டுவரப்பட்டு அங்கு பதற்றமான நிலையினை பொலிஸார் ஏற்படுத்தியதுடன், புலனாய்வாளர்களும் குவிக்கப் பட்டிருந்ததை காணக்கூடியதாக உள்ளது.

# வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு எதிராக நெடுந்தீவில் போராட்டம்!

மார்ச் 29, 2023



யாழ்.நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையாக மாற்றுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையினை கண்டித்தும், கச்சதீவில் புத்தர் சிலைகள் வைக்கப் பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இன்று நண்பகல் நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற இந்த போராட்டத்தில் நெடுந்தீவு மக்களும் கலந்து கொண்டு தங்கள் ஆதரவினை தெரிவித்திருக் கின்றனர். நெடுந்தீவு வெடியரசன் கோட்டையினை ஆக்கிரமித்துள்ள தொல்லியல் திணைக்களம் அதனை பௌத்த விகாரையாக அடையாளப்படுத்தி,

அதன் வரலாற்றை திரிபுபடுத்துவதுடன், புதிதாக விகா ரையை அங்கு கட்டுவதற்கும் முயற்சித்து வருகின்றது. இதேபோல் கச்சதீவில் அதன் மத அடையாளத்தை மாற் றும் வகையில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளதுடன், ஆங்காங்கே அரச மரங்களும் நாட்டப்பட்டிருக்கின்றது.

இவற்றை கண்டித்தே இன்றைய போராட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது. முன்னதாக தமிழ்தேசிய மக்கள் முன் னணியினரும், பொதுமக்களும் இணைந்து வெடியரசன் கோட்டையினை பார்வையிட்டதுடன், அங்கு காலை சிறிது நேரம் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினையும் நடத்தி யிருக்கின்றனர்.

இன்றைய போராட்டம் காரணமாக யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளில் இருந்து மேலதிக பொலிஸார் நெடுந்தீவுக்கு கொண்டுவரப்பட்டு அங்கு பதற்றமான நிலையினை பொலிஸார் ஏற்படுத்தியதுடன், புலனாய்வாளர்களும் குவிக்கப் பட்டிருந்ததை காணக்கூடியதாக உள்ளது.







# வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் யாழில் கவனயீர்ப்பு போராட்டம்!

மார்ச் 31, 2023

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இன்று (31) கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்றது.

இதன்போது, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வ தேசமே உரிய தீர்வு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.







# முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம்!

மார்ச் 30, 2023

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்திவரும் போராட்டம் 2213 ஆவது நாளான இன்று (30) நீதிகோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளார்கள் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் அலுவலகத்திற்கு முன்னால் முல்லைத்தீவு முதன்மை வீதியில் இந்த கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தங்களுக்கு நீதி கோரி கவனயீர்ப்பினை முன்னெடுத்துள்ளதுடன் பதாதைகளை தாங்கியாவறு ஓ.எம்.பியும் வேண்டாம் நட்டஈடும் வேண்டாம், மரண சான்றிதழும் வேண்டாம், இலஞ்சமும் வேண்டாம் போன்ற கோசங்களை தாங்கி சர்வதேச விசாரணையே தங்களுக்கான தீர்வினை பெற்றுத்தர ஒரே வழி சர்வ தேசமே பதில் சொல் என வலியுறுத்தி இந்த கவயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டுள்ளார்கள்.

இதன்போது கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி ம.ஈஸ்வரி சர்வதேச நீதிமன்றத்தில் எங்கள் உறவுகளுக்கு என்ன செய்தார்கள் என்பதை சொல்ல வேண்டும் அதற்கான நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக போராடிக்கொண்டிருக்கின்றோம் சர்வதேசம் இலங்கைக்கு பொருளாதார பிர்ச்சினைக்கு நிறைய உதவி செய்து கொண்டிருக்கின்றது இதேமாதிரி எங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் சரியான நீதியினை பெற்றுத்தரலாம் என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றது.

இன அழிப்பு தொடச்சியாக இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது அதில் காணாமல் ஆக்கப்பட்டவர்களும் ஆதாரமாக இருக்கின்றது நீதி கிடைக்கும் வரை எவரின் அழுத்தம் வந்தாலும் தொடர்ந்து போராடுவோம்.

எங்களுக்கு இந்த நட்டஈடு, மரணசான்றிதழ்கள், ஆற்றல் படுத்தல்கள் எல்லாம் எங்களுக்கு தேவை இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள்.





# வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைப்புக்கு எதிராக வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி!

மார்ச் 30, 2023

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும், நீதி கோரியும் வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இடம்பெற்றது.

ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இன்று (30) காலை 10 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலயத்தில் தேங்காய் உடைத்து வழிபட்ட பின் ஆரம்பமாகிய பேரணி மணிக்கூட்டு கோபுர சந்தியை அடைந்து, அங்கிருந்து பசார் வீதி ஊடாக ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி ஊடாக மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் உட்பட ஏனைய விக்கிரகங்களும் கடந்தவாரம் உடைத்தழிக்கப்பட்டிருந்தமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

குறித்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிப்பதுடன், இந்த விசமச் செயலை செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி குறித்த பேரணி இடம்பெற்றது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'வெடுக்குநாறிமலை மீதான தாக்குதல் கௌதம புத்தரின் ஆன்மிகத்தோல்வி, ஈழத்தமிழனை வேரறுக்க நினைக்காதே, வெடுக்குநாறி எங்களின் இடம், மத சுதந்திரத்தை தடுக்காதே, தொல்பொருள் திணைக்களமே வெளியேறு' போன்ற கோசங்களை எழுப்பியிருந்ததுடன், பதாதைளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்ட பேரணியாக சென்ற மக்கள் வைத்தியசாலை சுற்றுவட்ட பகுதியில் அமைந்திருந்த தொல்பொருள் திணைக்கள அலுவலக வளாகத்திற்குள் சென்று வாயிலை மறித்து தொல்பொருள் திணைக்களமே வெளியேறு என கோசமிட்டனர். சுமார் 15 நிமிடங்கள் வரை



குறித்த வாயிலை முற்றுகையிட்ட மக்கள் பின்னர் அங்கிருந்து வெளியேறி மாவட்ட செயலகம் சென்றிருந்தனர்.

மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர அவர்களிடமும், ஜனாதிபதிக்கான மகஜர் ஜனாதிபதியின் வடக்கிற்கான இணைப்பாளரும், மேலதிக செயலாளருமான ஈ.இளங்கோவன் அவர்களிடமும் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களும் மகஜர் வழங்கப்பட்டது.

இதனையடுத்து இது குறித்து ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபயின் மேலதிக செயலாளர் மற்றும் அரச அதிபர் ஆகியோர் இணைந்து வாக்குறுதி வழங்கியதையடுத்து போராட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றனர்.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன், செ.கயேந்திரன், தமிழரசுகட்சியின் தலைவர் மாவைசேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், சமயப் பெரியோர்கள், சமூக ஆர்வலர்கள், பல்கலைகழக மாணவர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், காணாமல் போன உறவுகளின் சங்கத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.






# தமது உரிமைகளை அடைவதற்கு தமிழ் மக்கள் இன்னமும் எவ்வளவு காலம்தான் காத்திருக்க வேண்டும்!

**யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

மார்ச் 30, 2023




ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் 52வது அமர்வில், விடயம் 8 தொடர்பான விவாதத்தின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 30.03.2023 இன்று ஜெனீவா நேரம் 10.20 மணியளவில் ஆற்றிய உரை 2

தலைவர் அவர்களே,

திட்டச் செயற்பாட்டுக்கான வியன்னா 66ம் பிரகடனத்தின் (Vienna Declaration and Programme of Action), இரண்டாவது பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

“எல்லா மக்களும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். இந்நெறிமுறைகளின்படி, தமது அரசியல் நிலைப்பாட்டையும், பொருண்மியம் மற்றும் சமூக கலாச்சார விடயங்களையும் மேற்கொள்ளும் வழிவகைகளைத் தீர்மானிக்கும் உரித்துடையவர்களாக அவர்கள் இருப்பர்”

அப்பிரகடனத்தில், மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுதலிப்பது மனிதவுரிமை மீறலாகவும், அவர்களது உரிமையினை முறைப்படி நிலைநாட்டுவதனை மறுதலிக்கும் செயல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறீலங்காவில் - தமிழர்கள் ஒரு தேசமாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்மக்கள் தமது பொருண்மிய, சமூக, கலாசார மேம்பாட்டை மேற்கொள்வதற்கான உரிமையை, தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் மறுத்துவந்த காரணத்தாலும், தமிழ் மக்களது இருப்புக்கு ஆபத்து உருவாகி வந்ததனாலும், 1977ம் ஆண்டு, தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தனிநாட்டினை அமைப்பதற்கு ஆதரவு வழங்கி, ஜனநாயக ரீதியில் பெருந்திரளாக வாக்களித்தார்கள்.

அதன்பின்னர், சிறீலங்கா அரசாங்கம் அரசியலமைப்பில் கொண்டு வந்த 6வது திருத்தத்தின் அடிப்படையில், தனிநாடு கோருவதனை சட்டவிரோதமான செயலாக ஆக்கியுள்ளது. நடைமுறையில் இவ்விடயம் தவறாக வியாக்கியானப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நடைமுறையிலிருக்கின்ற, மத்தியில் அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்கும் ஒற்றையாட்சி முறையிலான அரசியலமைப்பிலிருந்து, அதிகாரப் பரவலாக்கத்தை நோக்கிய மாற்றங்கள் பரிந்துரைக்கப்படுவதனைக் கூட, பிரிவினைவாதமாகப் பார்க்கப்படும் நிலையே காணப்படுகிறது.

இதன் விளைவாக தமது அரசியல் நிலைபாடு தொடர்பில் காத்திரமான உரையாடலுக்கான வெளி, தமிழ்மக்களுக்கு மறுக்கப்படுகிறது.

தலைவர் அவர்களே,

தமது உரிமைகளை அடைவதற்கு தமிழ் மக்கள் இன்னமும் எவ்வளவு காலம்தான் காத்திருக்க வேண்டும்?

# ஐ.நா. மனிதவுரிமைச் சபையானது இனியும் பாசாங்கு செய்ய முடியுமா?

**யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

மார்ச் 30, 2023

ஐ.நா. மனிதவுரிமை சபையின் 52வது அமர்வில், விடயம் எட்டு தொடர்பான விவாதத்தின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 30.03.2023 இன்று ஜெனீவா நேரம் 10.05 மணியளவில் ஆற்றிய உரை 1.

தலைவர் அவர்களே,

திட்டச் செயற்பாட்டுக்கான வியன்னா பிரகடனத்தின் (Vienna Declaration and Programme of Action) , 62வது பந்தியில், வலிந்து காணாமற்போகச் செய்தலை தடுப்பதற்கும், அவ்வாறான செயலைச் செய்பவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்குமாக - வினைத்திறன் மிக்க - சட்டரீதியான - நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, அனைத்து நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. நாடுகள், தமது ஆட்புல எல்லைக்குள் இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெறுவதாக நமபுவதற்கு இடமிருக்கும்போது, அவை தொடர்பில் - விசாரணைகளை மேற்கொள்ளவேண்டியது அந்நாடுகளின் கடமை என்பதனையும், இக்குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டால் சம்பந்தபட்டவர்கள் மீது, சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் அப்பிரகடனம் மீளவலியுறுத்துகிறது.

இவ்வருடம் பெப்பிரவரி மாதம், சிறீலங்காவின் மனிதவுரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்கள் வடமாகாணத்திற்கு பயணம் மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட தரப்புகளான - வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், தமிழ் அரசியற்கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப் பலரையும் சந்தித்தனர். இச்சந்திப்புகளின் போது, மேற்குறித்த 62வது பந்தியில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு மாறாக - பழைய வற்றை மறந்துவிடுமாறும், பொறுப்புகூறலை வலியுறுத்த வேண்டாம் எனவும் முன்னைய குற்றச்செயல்கள் பற்றிய விடயங்களை சிறீலங்கா அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கையாளும் எனவும், தாம் சந்தித்தவர்களிடம் பரப்புரையில் ஈடுபட்டதுடன், அழுத்தங்களையும் பிரயோகித் துள்ளனர்.




பாதிக்கப்பட்டவர்களும்,
தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் இவ்வாலோசனைகளை நிராகரித்து, சர்வதேச குற்ற வியல் பொறுப்புக்கூறல் பொறிமுறையை வலியுறுத் தியபோது, சிறீலங்கா மனிதவுரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் தங்களது கோபத்தை வெளிப்படுத் தியுள்ளனர்.

மேற்படி ஆணைக்குழு தனது களப்பயணத்தை முடித்துக் கொண்டு வெளியிட்ட அறிக்கையில், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு போன்ற உள்ளகப் பொறிமுறையினை அமைப்பதற்கு, தாம் சந்தித்த பாதிக்கப்பட்ட தரப்புகள் இணங்கிக்கொண்டதாக தவறாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும் பல தவறான தகவல்கள் அவ்வறிக்கையில் காணப்படுகிறது.

இந்நிலையில் - தலைவர் அவர்களே, சிறீலங்காவின் மனித உரிமைகள் ஆணைக்குழு நடுநிலையானது என - ஐ.நா. மனிதவுரிமைச் சபையானது, இனியும் பாசாங்கு செய்ய முடியுமா?




# றொரன்டோவில் போக்குவரத்து கட்டணங்கள் உயிர்த்தப்படும்!

மார்ச் 19, 2023

றொரன்டோவில் விரைவில் போக்குவரத்து கட்டணங்கள் உயர்த்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில வாரங்களில் இளையோர் மற்றும் வயது வந்தர் வர்களுக்கான போக்குரவத்து கட்டணங்கள் உயர்த்தப்பட உள்ளது.

சிரேஸ்ட பிரஜைகள், கட்டணச் சலுகை அறிவிக்கப்பட்ட பயணி களுக்கான கட்டணங்கள் என்பனவற்றில் மாற்றமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

றொரன்டோ போக்குவரத்து ஆணைக்குழுவின் வரவு செலவுத் திட்டத்திற்கு அமைய இவ்வாறு கட்டணங்கள் உயர்த்தப்பட உள்ளன.

போக்குவரத்து சேவையில் பயணிக்கும் வயதுவந்தவர்கள் மற்றும் இளையோருக்கான கட்டணங்கள் 10 சதத்தினால் உயர்த்தப்பட உள்ளது.

இதேவேளை கட்டண அதிகரிப்பு குறித்த யோசனைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கட்டண அதிகரிப்பு யோசனைத் திட்டம் நியாயமானதாக அமையப்பெறவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# கனடா எட்மினட்ரன் வீட்டு வன்முறையை தீர்க்கச் சென்ற காவல்துறையினர் படுகொலை!

மார்ச் 18, 2023

கனடாவில் வீட்டு வன்முறைச் சம்பவமொன்றை தீர்த்து வைப்பதற்காக சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கனடாவின் எட்மின்டன் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. வீடு ஒன்றில் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுவதாக தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

இதன் போது பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட் டுள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர்.

30 வயதான கான்ஸ்பிள் பிரட் ரயன் மற்றும் 35 வயதான ட்ரவிஸ் ஜோர்டன் ஆகிய இரண்டு உத்தீயோகத்தர்களும் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயிரிழப்பு தொடர்பில் பல் வேறு தரப்பினரும் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

நண்பர்கள், உறவினர்கள், சகல பணியாளர்கள் ஆழ்ந்த இரங்கல்களை வெளியிட்டுள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.



# தமிழர் பிராந்தியத்தின் சுயநிர்ணய உரிமையை IMF வலியுறுத்த வேண்டும்!

### கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் கெரி ஆனந்தசங்கரி

மார்ச் 13, 2023

இலங்கைக்கு நிதியை வழங்குவதற்கு முன்னர் தமிழ் சிறுபான் மையினருக்கு கூடுதல் சுயாட்சி என்ற விடயத்தை சர்வதேச நாணய நிதியம் (IMF) நிபந்தனையாக விதித்திருக்க வேண் டும் என்று கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் கெரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார் .

செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் லிபரல் பாராளுமன்ற உறுப் பினரான அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். எனினும் அவரது கருத்துக்கள் கனேடிய கொள்கையை பிரதிபலிக்கின்றனவா என்பது தொடர்பில் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி எதனையும் கூறவில்லை.



எந்தவிதமான அளவீட்டின்படியும், இலங்கை தோல்வியுற்ற மற்றும் வங்குரோத்து நாடாகும். அத்துடன் நீண்டகால அரசியல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை உறுதி செய்யும் அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைமை இல்லாத நாடு என்றும் கெரி ஆனந்தசங்கரி கூறியுள்ளர். எனவே, சர்வதேச நாணய நிதியம், இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களின் மொத்த மற் றும் கடுமையான மீறல்களில் கவனம் செலுத்த வேண்டும். அத் துடன் தமிழ் பிராந்தியத்தின் சுயநிர்ணய உரிமையை வலி யுறுத்த வேண்டும் என்று கெரி ஆனந்தசங்கரி கோரியுள்ளார்.

# கனடாவில் வாடகை வீடு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை!

மார்ச் 27 2023

கனடாவில் வாடகை வீடுகள் தொடர்பில் றோயல் பேங்க் ஆப் கனடா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டளவில் கனடாவில் வாடகை வீடுகளுக்கான தட்டுப்பாடு பெருமளவில் அதிகரிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாடகை வீடுகளுக்கான தட்டுப்பாடை வரையறுக்க வேண்டு மானால் 3 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 332000 வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

அதாவது ஆண்டுதோறும் வீட்டு நிர்வாணப் பணிகளை 20% அதிகரிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 70 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு இருந் தன வீட்டு வாடகைத் தொகை அதிகரித்துச் செல்லும் அதே வேளை, வீடுகளுக்கான தட்டுப்பாட்டு நிலையும் வெகுவாக உயர்வடைந்துள்ளது.

சந்தையில் கேள்விக்கு ஏற்ற அளவில் வாடகை வீட்டு அலகுகள் நிரம்பல் செய்யப்படாத காரணத்தினால் இவ்வாறு வாடகை தொகை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீடுகள் அதிக அளவில் நிர்மாணிக்கப்படவிட்டால் மக்கள் வீடுகளை வாடகைக்கு அமர்த்த பெரும் சிரமங்களை எதிர் நோக்க நேரிடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# அமெரிக்கா – கனடா உடன்படிக்கை ஏதிரி பிரச்சினைக்கு தீர்வாகாது!

மார்ச் 26, 2023

கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உடன்படிக்கையின் மூலம் ஏதிலிகள் குறித்த பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



ஏதிலிக் கோரிக்கையாளர் விவகாரம் தொடர்பில் அமெரிக்காவிற்கும், கனடாவிற்கும் இடையில் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் மூலம் குடியேறிகள், ஏதிலிகள் கனடாவிற்குள் பிரதான எல்லைப் பகுதிகள் வழியாக பிரவேசிப்பதனை தடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பூரணமாக ஏதிலிகள் எல்லை வழியாக பிரவேசிபதனை தடுத்து நிறுத்தப் போவதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பான வழிகளில் ஏதிலிகள் கனடாவிற்குள் பிரவேசிப்பதனை முடக்குவதன் மூலம் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு கூடுதல் சந்தர்ப்பம் உருவாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

மொன்றியல் ஏதிலிகள் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அப்துல்லாஹ் தாவூத் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தீர்மானங்கள் காரணமாக கடந்த காலங்களில் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களையும் ஆட்கடத்தல் கும்பல்களையும் உருவாக்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




இந்த உடன்படிக்கையின் பின்னர் கூடுதல் எண்ணிக்கையில் ஏதிலிகள் கனடாவிற்குள் பிரவேசிக்கும் சாத்தியங்கள் அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதான வழிகளை முடக்வதன் மூலம் ஆபத்தான பயணங்களை ஏதிலிகள் மேற்கொள்ள நேரிடலாம் எனவும் உயிர் ஆபத்து ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல் ஒன்ராறியோவின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம்

மார்ச் 30, 2023

மார்ச் 23 அன்று, ஒன்ராறியோ அரசாங்கம் "வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல்" எனும் அடிப்படையில் ஒன்ராறியோவின் 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தினை வெளியிட்டது. இத்திட்டமானது ஒன்ராறியோவில் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், முக்கியமான முதலீடுகளை ஒன்ராறியோவை நோக்கி ஈர்த்தல், சேவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தை வளர்க்கும் நோக்கில் வெளியிட்டுள்ளது. இவ்வரவு செலவுத் திட்டமானது ஒன்ராறியோ மக்களுக்கும் வணிகங்களுக்கும் முன்னுரிமைகளை வழங்கும் அதேவேளையில், ஒன்ராறியோவின் பற்றாக்குறையை நீக்குவதற்கு வழியமைக்கும்.

ஒன்ராறியோ அரசாங்கமானது பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கவும், வணிக செலவுகளைக் குறைக்கவும், முதலீடுகளை ஈர்க்கவும், எதிர்கால தேவைக்கான உட்கட்டுமான திட்டங்களை விரைவுபடுத்தவும் இத்திட்டத்தினை சமர்ப்பித்துள்ளது.

பொருளாதார வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தை விரும்பும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் முதலீட்டுச் செலவுகளைக் குறைக்கும் நோக்கோடு ஒன்ராறியோ அரசாங்கம் உற்பத்தி முதலீட்டு வரிச் சலுகையை கொண்டுவந்துள்ளது.

எமது மாநிலத்திலுள்ள குடும்பங்களினதும் வணிக நிறுவனங்களினதும் நலன்கருதி நாம் அடுத்த 10 ஆண்டுகளில் சாலைகள், நெடுஞ்சாலைகள், பொதுப்போக்குவரத்து, மருத்துவமனைகள், பள்ளிகள், நீண்ட கால பராமரிப்பு இல்லங்கள் போன்றவற்றை அமைப்பதற்கென 180 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளோம்.

எமது தொழிலாளர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை எமது அரசாங்கம் எடுத்து வருகின்ற வழிகளாவன:
2023ஆம் ஆண்டிலிருந்து 100 இளங்கலைப் பட்டப்படிப்புக்கான இடங்களை சேர்க்கவும், ஒன்ராறியோவில் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற ஒன்ராறியோவின் குடியிருப்பாளர்



களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் 2024ஆம் ஆண்டிலிருந்து 154 முதுகலை மருத்துவப் பயிற்சி இடங்களையும் சேர்க்கவும் மேலதிகமாக 33 மில்லியன் டொலர்களை வழங்குகிறது. மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் இளங்கலைப் படிப்புகளுக்கு ஒன்ராறியோவின் குடியிருப்பாளர்களுக்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும். இந்நிதி குறிப்பிடத்தக்க வகையில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஸ்காபரோ வளாகத்தில் உள்ள ஸ்காபரோ ஒருங்கிணைந்த மருத்துவ சுகாதார கல்லூரிக்கு (Scarborough Academy of Medicine and Integrated Health - SAMIH) வழங்கப்படும்.

224 மில்லியன் டொலர்களை பயிற்சி மையங்களுக்கு ஒதுக்கியுள்ளதன் மூலம், தொழிற்பயிற்சிக்கூடங்களை விரிவுபடுத்தவும் அதிதிறன் வாய்ந்த தொழிலாளர்களுக்கான பயிற்சியை அளிக்க நிபுணத்துவம் வாய்ந்த தனியார்துறையை மேம்படுத்தவும் உதவியளிக்கப்படும்.

ஒன்ராறியோவில் குடியேற விண்ணப்பிப்போருக்கான திட்டத்துக்கு கூடுதலாக 25 மில்லியன் டொலர்களை ஒதுக்கும் திட்டம்: மாநிலம் முழுவதிலும் உள்ள முக்கிய உட்கட்டுமானத் திட்டங்களைக் கட்டியெழுப்ப உதவுவதற்காக திறமையான புதிய குடிவரவாளர்களை அடையாளங்கண்டு நாம் பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

எமது சமுகத்தில் வாழும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவியை வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அந்த வகையில்:

உத்தரவாதமிக்க ஆண்டு வருமானத்தினை விரிவாக்கம் செய்வதன் மூலம், ஜூலை 2024 முதல், மேலும் 100,000 முதியவர்கள் சுட்டுகளில் அடிப்படையிலான மாதாந்த நிதியைப் பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள்.

வீடற்ற நிலையை இல்லாதொழித்தல் மற்றும் பழங்குடியினருக்கான வீட்டுத் திட்டங்களுக்கு 200 மில்லியன் டொலர்களை ஒதுக்குதல் மூலம் அதிக மக்களுக்கான பாதுகாப்பான வீடுகளை உருவாக்குவதை உறுதிசெய்யப்படும்.

அத்துடன், எமது அரசு வழங்கும் அத்தியாவசியமான சேவைகளை அனைவரும் பெற்றுக்கொள்வதற்கு மருந்தகங்களிலுள்ள மருந்தாளுநர்கள் பொதுவான நோய்களுக்கு பெரும்பாலான மருந்துகளை பரிந்துரைக்க அனுமதியளித்து, ஒன்ராறியோ சுகாதாரத்துறையை அனைவரும் இலகுவில் அணுகும் வழியை உறுதிசெய்யப்படும்.

நோயாளர்கள் அல்லது முதியவர் வீட்டுப் பராமரிப்பு, மனநலம், போதை அல்லது வேறு செயல்களுக்கு அடிமையானோர் நலன், குழந்தை மருத்துவம் போன்றவற்றிற்கு கூடுதல் நிதி வழங்குதல்.

குழந்தைகள் நல திட்டங்களிலிருந்து அடுத்த கட்டத்துக்கு நகரும் வயது வந்த இளையோர்களுக்கு அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான நிதி நிலையை அவர்கள் உருவாக்குவதற்கு உதவும் விதத்தில் மூன்று ஆண்டுகளில் 170 மில்லியன் டொலர்கள் ஒதுக்கல்.

ஸ்காபரோ நிலக்கீழ் தொடரிவழித்தட விரிவாக்கம், ஸ்காபரோ சுகாதார கட்டமைப்பின் மேம்பாடு, ஸ்காபரோவில் முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவப் பள்ளி போன்ற திட்டங்களின் மூலம் மேற்படி நிதியானது எங்கள் சமுகத்தில் பெரும் மாற்றங்களை உண்டுபண்ணுவதையிட்டு நான் பெருமை கொள்கிறேன்.

விஜய் தணிகாசலம்,
மாநில சட்டமன்ற உறுப்பினர்
ஸ்காபரோ – றூஜ் பார்க்

# கனேடிய மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 40.1 பில்லியன் டொலர்கள்!

மார்ச் 30 2023

கனடிய மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை 40.1 பில்லியன் டொலர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே எதிர்வுகூறப்பட்ட தொகையை விடவும் பற்றாக்குறை தொகை 10 பில்லியன் டொலர்களினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் கிறிஸ்டியா பிரிலாண்ட் நேற்றைய தினம் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கம் 491 பில்லியன் டொலர் பெறுதியான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

பற்சுகாதாரததிற்கு கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்யப்படுவதாக



அறிவிக்கப்பட்டுள்ளது.

தூய்மையான சக்தி வளத் திட்டங்களுக்கு அதிகளவில் முதலீடு செய்யவும் வரிச் சலுகை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

இந்த நடவடிக்கையின் காரணமாக அரசாங்கத்தின் வருமானம் 5.7 பில்லியன் டொலர்களினால் வீழ்ச்சியடையும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

செல்வந்தர்கள் மற்றும் பெரு நிறுவனங்களின் வரியை அதிகரிப்பதன் மூலமும் அரசாங்க செலவுகளை குறைத்தும், பாதீட்டு பற்றாக்குறை தொகையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தமிழக செய்திகள்



# இலங்கை தமிழர்களுக்கு ரூ.223 கோடி செலவில் 3949 வீடுகள் கட்டப்படும்!

## தமிழக வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிப்பு

மார்ச் 20, 2023

இலங்கை தமிழர்களுக்கு 3949 வீடுகள் 223 கோடி செலவில் கட்டப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழக சட்டசபையில் 2023- 2024ம் ஆண்டுக்கான தமிழக அரசின் பட்ஜெட்டை நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார்.

எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டதையடுத்து பட்ஜெட் உரையை புறக்கணித்து எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் சட்ட சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இந்நிலையில்இ பட்ஜெட் தாக்கலில் நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கூறியதாவது திராவிட மாடல் ஆட்சி வெற்றி நடைபோட்டு வருகிறது. இலக்குகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். மொழிப்போர் தியாகி தாளமுத்து, நடராஜருக்கு சென்னையில் நினைவு மண்டபம் அமைக் கப்படும்.

தமிழ் கணினி பன்னாட்டு மாநாடு நடத்தப்படும். அம்பேத்கரின் நூல்களை தமிழில் மொழிபெயர்க்க ரூ.5 கோடி மானியம் வழங்கப்படும்.

கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை இந்தாண்டு திறக்கப படும். 711 தொழில் நிறுவனங்களில் 8 இலட்சம் தொழிலாளர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் செயல்படுத்தப்படும்.

இலங்கை தமிழர்களுக்கு 3949 வீடுகள் ரூ.223 கோடி செலவில் கட்டப்படும். சோழர்களின் பெருமையை பறை சாற்றும் வகையில் தஞ்சையில் சோழர் அருங்காட்சியம்



அமைக்கப்படும்.

மாநிலம் முழுவதும் 25 பகுதிகளில் நாட்டுப்புற பயிற்சி மையம் அமைக்கப்படும். வருவாய் பற்றாக்குறையை ரூ.62,000 கோடியில் இருந்து ரூ.30,000 கோடியாக குறைத்துள்ளோம் என இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்!

## தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன்

மார்ச் 19. 2023

இசுலாமிய சிறைவாசிகள் உள்பட 10 ஆண்டுகள் சிறைவாசம் கழித்த சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசுக்கு, தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகன் (ச.ம.உ) கோரிக்கை வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

ஆயுள் தண்டனை என்பது சட்டப்படி ஆயுள் முழுவதும் சிறையில் இருப்பது என்றாலும், அச்சிறைவாசிகளின் தண்டனையை ரத்து செய்யவோ, குறைக்கவோ முழுமையாக அதிகாரத்தை ஒன்றிய, மாநில அரசுகளுக்கு அரசியல் சாசனம் வழங்கியுள்ளது. குற்றவியல் சட்டம் 432 அடிப்படையில் தண்டனை குறைப்பதற்கு ஒன்றிய அரிசன் ஒப்புதல் வேண்டும். அதே நேரத்தில், அரசியல் சட்டப்பிரிவு 161ன் அடிப்படையில் முன் விடுதலைக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காவிட்டாலும், மாநில அரசுகளுக்கு முன் விடுதலை செய்வதற்கு உரிமை உண்டு.

இருபது ஆண்டுகள் சிறைவாசம் கழித்தவர்களை விடுதலை செய்யும் வகையில், தமிழ்நாடு அரசு முன் விடுதலை திட்டத்தை 1994இல் கொண்டு வந்தது. எவ்வளவு பெரிய குற்றங்களை செய்தவர்களாக இருந்தாலும் இத்திட்டத்தின் கீழ் முன் விடுதலை செய்ய முடியும்.

முக்கியமாக, ஒரு மாநில அரசு தன் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி அவர்களை கருணை அடிப்படையில் விடுதலை செய்ய



முடியும். அண்ணா பிறந்த நாள், அண்ணா நூற்றாண்டு, எம்.ஜி.ஆர் நூற்றாண்டு என்ற பல நிகழ்வுகளில் பத்து ஆண்டுகள் கழித்த ஆயுள் சிறைவாசிகள் தமிழ்நாட்டின் சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2008ஆம் ஆண்டு, சட்டமன்றத்தில் நான் (தி.வேல்முருகன்) வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான திமுக அரசு, ஏழு ஆண்டுகளுக்கும் மேல் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த 1,400 சிறைவாசிகள் விடுதலை செய்யப்பட்டனர். எம்.ஜி.ஆரின் 100 வது ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு, 10 ஆண்டுகளுக்கும் மேல் சிறை தண்டனை அனுபவித்த 1,627 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், அப்போது சில இசுலாமிய சிறைவாசிகள் விடுதலை செய்யப்படவில்லை என்பது வேதனைக்குரியது.

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சிறைகளில் 38 இசுலாமிய சிறைவாசிகள், 27 முதல் 28 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

சிறை விதிகளின் படி சிறைவாசிகளுக்கு வழங்கும் பரோல் விடுவிப்பு கூட, இசுலாமிய சிறைவாசிகளுக்கு மறுக்கப்பட்டு வருகிறது.

இவர்களில் பலர் 60 வயதைக் கடந்தவர்களாகவும் நோயாளிகளாகவும் உள்ளனர். சிறையில் இருந்து வந்தாலும் நல்ல உடல்நலனோடு அவர்கள் வாழ முடியாது. அவர்களது எஞ்சிய வாழ்நாளையாவது குடும்பத்துடன் செலவிட விரும்புகிறார்கள்.

எனவே, கடந்த காலங்களில் சிறைவாசிகள் விடுதலையில் நிகழ்த்தப்பட்ட பாராபட்சங்கள் கடந்து இசுலாமிய சிறைவாசிகள், 10 ஆண்டுகள் கழித்த ஆயுள் சிறைவாசிகளை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில், கருணையின் அடிப்படையில் விடுதலை செய்ய, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது.

குறிப்பாக, நிறைய இசுலாமிய சிறைவாசிகள் குற்றம் செய்யாமலேயே நீண்ட காலமாக சிறையில் வாடுகின்றனர். இதனை தமிழ்நாடு அரசு கருத்தில் கொண்டு, இசுலாமிய சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.

இவ்வாறு அறிக்கையில் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

# காஞ்சிபுரத்தில் வெடி ஆலை விபத்து 9 பேர் உயிரிழப்பு!

மார்ச் 22, 2023

காஞ்சிபுரம் அருகே வெடி ஆலை விபத்தில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.

காஞ்சிபுரம் குருவிமலை என்னும் இடத்தில், வெடி ஆலை செயல்பட்டு வந்திருந்தது. இந்த நிலையில் அந்த வெடி அலையில் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடி விபத்து ஏற்பட்டு பலர் தீக்காயம் அடைந்ததாக கூறப்படுகிறது.

அவர்களை 108 அவசர மருத்துவ வாகன மூலம், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் 11 பேரும் மேல் சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், 100 சதவீதம் தீக்காயங்களுடன் 5 பேர் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் இருந்தனர்.

இந்த நிலையில் காயமடைந்தவர்கள் சிகிச்சை பலனின்றி 9 பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் ஆர்த்தி மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுரேந்தர் ஆகியோர் நேரில் சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள்.

காஞ்சிபுரம் வெடி ஆலை விபத்தில் 9 பேர் பலியான சம்பவம், அவரது குடும்பத்தார் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அரசு சார்பில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



www.sangathamil.ca

# விவசாயிகளுக்கு நம்மாழ்வார் பெயரில் விருது!

மார்ச் 21, 2023

அங்கக வேளாண்மையை ஊக்கவிக்கும் வகையில், விவசாயிகளுக்கு நம்மாழ்வார் பெயரில் விருது வழங்கப்படும் என தமிழ்நாடு வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் வேளாண் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

2023-24ம் ஆண்டுக்கான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நேற்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்து உரையாற்றினார்.

அவரது உரையில், பெண்களுக்கு மாதந்தோறும் உரிமை தொழில் 1000 ரூபாய், பள்ளிக் கல்வித்துறை, இளைஞர் மேம்பாட்டுதுறை, சுற்றுச்சூழல், காலை உணவு திட்டம், மெட்ரோ இரயில் திட்டம், மீனவர் நலன், முதியோர்களுக்கான ஓய்வூதியம் திட்டம், மாற்றுத்திறனாளிகள் நலன், மேம்பால திட்டம், இலங்கை தமிழர்களுக்கான குடியிருப்பு திட்டம் என பல்வேறு திட்டங்கள் வெளியாகின.

இரண்டாம் நாளான இன்று, வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், வேளாண் நிதிநிலை அறிக்கை வாசிக்கத் தொடங்கினார், அப்போது பேசிய அவர், வேதியியல் பொருட்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதால் மண்ணும், நீரும் நச்சுத்தன்மை அடையும் என்பதால் அவற்றை தவிர்த்து இயற்கையான எருவை பயன்படுத்தி வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் முதலமைச்சர் தமிழ்நாடு அங்கக வேளாண்மை கொள்கையை வெளியிட்டதாக கூறினார்.

அங்கக வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் 10 ஆயிரம் ஹெக்டேருக்கு மானிய உதவி அளிப்பதற்காக





வரும் ஆண்டில் 26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் அமைச்சர் அறிவித்தார். நீலகிரி மாவட்டத்தில் அங்கக வேளாண்மையை ஊக்குவிக்க சிறப்புத் திட்டம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 50 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் அறிவித்தார்.

அங்கக வேளாண்மையில் நம்மாழ்வார் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அங்கக வேளாண்மையில் ஈடுபடுவதோடு அதனை ஊக்குவிக்கும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று நம்மாழ்வார் பெயரில் விருது வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த விருதுடன் 5 லட்ச ரூபாய் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

# கச்சத்தீவில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்ற ஆணையிட வேண்டும்!

## மத்திய அரசுக்கு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தல்

மார்ச் 25. 2023

இலங்கை கடற்படையால் கச்சத்தீவில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்ற இந்திய அரசு ஆணையிட வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தியாவால் கொடையாக வழங்கப்பட்ட கச்சத்தீவில் மிகப்பெரிய புத்தர் சிலையை சிங்களக் கடற்படை அமைத்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்த நடவடிக்கைக்கு தமிழகம் மற்றும் இலங்கையில் வாழும் தமிழர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர். சிங்கள அரசின் செயல் கண்டிக்கத்தக்கது!








கச்சத்தீவில் புனித அந்தோணியார் ஆலயம் மட்டுமே உள்ளது. அங்கு ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவில் தமிழகம் மற்றும் ஈழத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட அனைத்து மதத் தமிழர்கள் பங்கேற்கின்றனர். அத்திருவிழா மத நல்லிணக்கத்தின் அடையாளமாக திகழ்கிறது.

புத்தர் சிலை அமைக்கப்பட்டிருப்பது கச்சத்தீவை சிங்களமயமாக்கும் செயலாகும். புத்தர் கோயிலுக்கு ஆண்டுதோறும் திருவிழா நடத்தப்பட்டால் அது தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தக்கூடும். மத நல்லிணக்கத்திற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி விடும்.

இவற்றையும் கடந்து புத்தர் சிலை வழிபாடு என்ற பெயரில் சிங்களர்களையும், சீனர்களையும் கச்சத்தீவில் முகாமிடச் செய்து, தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியாவை உளவு பார்ப்பதற்கான வாய்ப்புகளை மறுக்க முடியாது. இது இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விடும்.

கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டாலும் கூட அந்தோணியார் ஆலயத் திருவிழா, அடிப்படை வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றுக்கு இந்தியா தான் உதவி வருகிறது. எனவே, இந்த விவகாரத்தில் இந்திய அரசு தலையிட்டு கச்சத்தீவில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்ற ஆணையிட வேண்டும்" இவ்வாறு அந்த பதிவில் கூறியுள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.**

**தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.**

**எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# இலங்கை கடற்படைக்கு வைகோ கண்டனம்!

மார்ச் 25, 2023

இந்திய கடல் எல்லையில் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததற்கு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இராமேஸ்வரத்திலிருந்து மார்ச்சு 22 ஆம் தேதி 540 விசைப் படகில் மீன்படித் தொழிலுக்குச் சென்ற தமிழ்நாட்டு மீனவர்களை இந்திய கடல் எல்லையில் அத்துமீறி நுழைந்து, சிங்களக் கடற்படையினர் விரட்டி உள்ளனர்.

இலங்கை ரோந்து கப்பலில் வந்த அவர்கள் துப்பாக்கியைக் காட்டி நமது மீனவர்களை மிரட்டி இருக்கின்றனர். கடலில் மீன் பிடிக்க வீசிய வலைகளைக்கூட விட்டு விட்டு தமிழ்நாட்டு மீனவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள படகுகளில் தப்பி உள்ளனர்.

கடந்த 22ம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப் பட்டினம், கோட்டைப்பட்டினம் ஆகிய மீன்பிடி துறை முகங்களிலிருந்து 255 விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

மார்ச்சு 23ம் தேதி அதிகாலை இந்திய கடல் பகுதியான நெடுந்தீவு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் அத்துமீறி நுழைந்து நமது மீனவர்களை தாக்கி, விசைப்படகுகளை பறிமுதல் செய் திருக்கின்றனர்.

இரண்டு படகுகளுடன் 12 மீனவர்களை கைது செய்து, காங்கேசன் துறைமுக கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இலங்கை கடற்படையின் தொடர் அட்டூழியங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்காமல் ஒன்றிய அரசு வேடிக்கை



பார்ப்பது கண்டனத்துக்கு உரியது.

இலங்கை சிறையில் உள்ள 28 மீனவர்களை விடுவிக்கவும், மீன்பிடி படகுகளை மீட்கவும் ஒன்றிய அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துகிறேன் என அறிக்கையில் வைகோ தெரிவித்துள்ளார்.

# 'உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழ் இருக்க வேண்டும்' முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்

மார்ச் 25. 2023

மதுரை மாவட்ட உயர்நீதிமன்ற வளாகத்தில் ரூ.166 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கூடுதல் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய தமிழ்நாடு முதலவர் மு.க. ஸ்டாலின், உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும், சமூக நீதி அடிப்படையில் நீதிபதிகள் நியமனம் நடைபெறவேண்டும் என்பது உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை முன்வைத்தார்.

வழக்காடு மொழி குறித்த கோரிக்கைக்கு மேடையில் பதில் கூறிய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், இந்தியாவின் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் வழக்காடு மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தின் 348வது பிரிவு கூறுவதால், தமிழை வழக்காடு மொழியாக உயர்நீதிமன்றத்தில் பயன்படுத்துவதற்கு அரசியலமைப்புத் திருத்தம் தேவைப்படலாம் என்று தெரிவித்தார்.

தமிழ் மொழியை வழக்காடு மொழியாக சென்னை உயர்நீதி மன்றத்தில் அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன், உச்சநீதிமன்ற கிளை சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய இடங்களில் கொண்டு வர வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூகநீதி அடிப்படையிலான பணி நியமனம் பின்பற்றப்படவேண்டும் என்றும் அடிக்கல்நாட்டு விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் மத்திய சட்டத்துறை அமைச்சர் ஆகியோரிடமும் கோரிக்கைகளை முன்வைத்தார்.

முன்னதாக, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட்




மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் கட்டப்படவுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டடங்களுக்கு ரிமோட் மூலம் அடிக்கல் நாட்டினார். அதனை அடுத்து, முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜ/ ஆகியோர் மயிலாடுதுறை மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றை காணொளி காட்சிகள் மூலம் திறந்து வைத்தனர்.

# கிளிநொச்சியை சேர்ந்த இரு குடும்பங்கள் தமிழகத்தில் தஞ்சம்!

மார்ச் 29, 2023

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியை சேர்ந்த இரண்டு குடும்பங்களை சேர்ந்த 08 பேர் தமிழகம் இராமேஸ்வரம் பகுதியை சென்றடைந்துள்ளனர்.

தலைமன்னார் பகுதியில் இருந்து கடந்த திங்கட்கிழமை இரவு படகொன்றில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 1 ஆண், 5 பெண்கள், 1 ஆண் குழந்தை, 1 பெண் குழந்தை உட்பட 08 பேர் சட்டவிரோதமான முறையில் தமிழகம் நோக்கி பயணித்துள்ளனர்.

அவர்களை ஏற்றி சென்ற படகு இராமேஸ்வரம் அருகில் மூன்றாம் மணல் திட்டில் அவர்களை இறக்கி விட்டு தப்பி சென்றுள்ளது. தமிழகத்திற்கு அழைத்து செல்வதற்காக குறித்த படகுக்கு ஒரு இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பணம் கொடுத்துள்ளனர்.



மணல் திட்டில் மீட்கப்பட்டவர்களை கடலோர காவல் படையினர் மீட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# உலக செய்திகள்

# ஆவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரியவர்களுக்கு நிரந்தரமாக வாழ்வதற்கான வழியை ஏற்படுத்துங்கள்!

மார்ச் 17, 2023

தற்காலிக விசாக்களிலும் கடல்கடந்த தடுப்புகளிலும் உள்ள அகதிகளுக்கு நிரந்தர விசாக்களை கோரி தமிழ் அமைப்புகளும் அகதிகள் உரிமைகளுக்கான அமைப்பும் போராட்டம் ஒன்றை நடத்தியிருக்கிறது.

இதில் பங்கேற்ற ஆவுஸ்திரேலிய தமிழ் காங்கிரசின் இயக்குநரும் முன்னாள் தமிழ் அகதியுமான நிமலாகரன் சின்னக்கிளி, தற்காலிகமாக உள்ள அகதிகளுக்கு நிரந்தர தீர்வைக் கோரியிருக்கிறார்.

அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் அகதிகள், ஆவுஸ் திரேலியாவின் படகு கொள்கை காரணமாக மலேசியா, இந்தோனேசியாவில் சிக்கியுள்ள அகதிகள் தொடர்பாகவும் இப்போராட்டத்தில் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது.

ஆவுஸ்திரேலியாவில் படகு வழியாக தஞ்சமடைய முயன்ற தனது கடந்த காலத்தை பகிர்ந்த நிமலா, "கடந்த அக்டோபர் 2009யில் மலேசியாவிலிருந்து 253 தமிழர் களுடன் சிறிய படகில் ஆவுஸ்திரேலியாவை நோக்கி புறப் பட்டோம். ஆனால் அப்போதைய ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட் கோரிக்கைக்கு இணங்க நாங்கள் இந்தோ னேசிய கடற்படையால் தடுத்து நிறுத்தப்பட்டோம். சட்ட விரோதமாக பயணித்த எங்களை தடுப்புக் காவலுக்கு கொண்டு செல்ல முற்பட்டனர். நாங்கள் ஆவுஸ்திரேலியா வில் தஞ்சமடைய முயன்ற அகதிகள், நாங்கள் இந்தோ னேசியா வர விரும்பவில்லை என்றோம். ஆவுஸ் திரேலியாவில் மீள்குடியமர்த்துவதற்கான உறுதியைக் கேட்டோம். அச்சிக்கல் ஆறு மாதங்களாக நீடித்த நிலை யில் வலுக்கட்டாயமாக தடுப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டோம்," எனக் கூறியிருக்கிறார்.

அதன் பின்னர், இந்தோனேசியாவிலிருந்து ஆவுஸ் திரேலியாவில் மீள்குடியமர்த்தப்பட நான்கரை ஆண்டுகள் ஆனதாக அவர் பகிர்ந்திருக்கிறார்.




ஆவுஸ்திரேலிய பிரதமருக்கும் குடிவரவுத்துறை அமைச் சருக்கும் கோரிக்கை விடுத்துள்ள நிமலா, ஆபத்தான கடல் பயணங்களை மேற்கொண்டு ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியவர்களுக்கு நிரந்தரமாக வசிப்பதற்கான உத வியை செய்ய வேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

அப்படி தஞ்சமடைந்தவர்கள் ஆவுஸ்திரேலியாவில் பல ஆண்டுகளாக உழைத்து, வரி செலுத்தி பிற ஆவுஸ் திரேலியர்களைப் போலவே வாழ்வதாக நிமலா சுட்டிக் காட்டியிருக்கிறார்.

# ஆப்கானிஸ்தானில் ஊடக செயல்பாடுகளுக்கு கடும் கட்டுப்பாடு!

மார்ச் 19, 2023

ஆப்கானிஸ்தானில் ஊடக சுதந்திரம் மோசமான நிலைக் குச் சென்றுள்ளது எனவும், ஆளும் ஆட்சியின் கீழ் பத் திரிகையாளர்கள் குறைந்த மன உறுதியால் பாதிக்கப் பட்டுள்ளனர் என பத்திரிகையாளர்கள் குற்றப்பாட்டு உள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தேசிய பத்திரிகையாளர் தினம் அனு சரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பத்திரிக்கையாளர் சார்பில் வெளியிடப்பட்டு அறிக்கையில், பல காரணங் களுக்காக 53 சதவீத ஊடகவியலாளர்கள் வேலையிழந்து உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 50 சதவீத ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ள தாகவும், பெரும்பாலான ஊடக ஊழியர்கள் ஆப்கானிஸ் தானை விட்டு வெளியேறியுள்ளனர் என அதில் தெரிவித் துள்ளனர்.

இது குறித்து (ANJU) பத்திரிகையாளர் முஸ்தபா ஷஹ் ரியார் கூறுகையில், ஊடக சமூகம் பல பிரச்சனைகள் மற்றும் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்கிறது. மேலும் ஆப்கானிஸ் தானில் ஊடகங்களின் செயல் பாடுகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது தவிர, ஊடக சமூகத்தின் பாதுகாப்பு சட்டங்கள் இடை நிறுத்தம் ஒரு பெரிய சவாலாக உள்ளது என தெரிவித்தார்.

அதேபோல் TOLO செய்தி கருத்தின் படி, தேசிய ஊடக வியலாளர்கள் தினத்தில் பல ஊடகவியலாளர்கள் பொருளாதார சிக்கல்கள் குறித்து கவலை தெரிவித் துள்ளனர்.



பத்திரிக்கையாளர்க ளின் பிரச்சனை களில் தீவிர கவனம் செலுத்தி அவர் களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அரசு கேட்டுக்கொள் கிறோம்," என்று பத்திரிகையாளர் முஸ்தபா ஷஹ ரியார் கூறினார்.

ஆனால், தலிபான் களின் தகவல் மற்றும் கலாச்சார அமைச்சகம், பத் திரிகையாளர் களின் உரிமைகளை நிலை நிறுத்துவதில் தாங்கள் உறுதியுடன் இருப் பதாகவும், அவர்களுக்கு கிடைக்கும் வசதிகளை அதி கரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறியதாக TOLO செய்தி தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஊடக சுதந்திரம் மோசமான நிலைக் குச் சென்றுள்ளது மற்றும் ஆளும் ஆட்சியின் கீழ் பத்திரிகையாளர்கள் குறைந்த மன உறுதியால் பாதிக்கப் பட்டுள்ளனர். நாடு முழுவதும் உள்ள தலிபான் அதி காரிகளுக்குப் பிடிக்காத முக்கியமான விஷயங்களைப் புகாரளித்ததற்காக பல நிருபர்கள் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, மரண அச்சுறுத்தலுக்கு உள்ளாகி யுள்ளனர் என்று காமா பிரஸ் தெரிவித்துள்ளது

பல வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் மற்றும் செய்தி நிறுவனங்கள் கதவுகளை மூடிவிட்டன. சில மதிப்பீடுகளின்படி 6,000க்கும் மேற்பட்ட பத்திரிகை யாளர்கள் வேலை இழந்துள்ளனர். பெண் ஆப்கானிஸ் தான் பத்திரிகையாளர்கள் ஒரு பத்திரிகையாளர் பல்வேறு கட்டுபாட்டால் பாதிக்கப்படுகின்றனர்.

பெண்கள் பல்கலைக்கழகத்தில் சேருவதையும், அரசு அல்லது அரசு சாரா உதவி நிறுவனங்களுடன் பணிபுரி வதையும், பொது இடங்களில் தோன்றுவதையும் கட்டுப் படுத்தும் தலிபான்கள் விதித்துள்ள சமீபத்திய கட்டுப் பாடுகள் பெண் பத்திரிகையாளர்களையும் பாதித்துள்ள தாக காமா பிரஸ் தெரிவித்துள்ளது.

# பிரான்ஸ் நாட்டில் குப்பைகள் அகற்றப்படமால் போராட்டத்தில் ஊழியர்கள்!

மார்ச் 20. 2023

பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் சமீபத்தில் ஓய்வூதிய சீர்திருத்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டது.

இதன்படி, அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது 62-ல் இருந்து 64 ஆக மாற்ற வழிவகை செய்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரான்ஸ் முழுவதும் அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை குறித்த மசோதாவுக்கு பிரான்ஸ் மந்திரிகள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இதனால் போராட்டங்கள் நாளுக்கு நாள் வலுத்து வருகின்றன. இந்த நிலையில் தூய்மை பணியாளர்களும் கடந்த சில தினங்களாக தங்களது பணியை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் தலைநகரான பாரிஸில் குப்பைகள் அகற்றப்படாமல் மலைபோல் குவிந்து கிடக்கின்றன.

மேலும், நகரின் முக்கிய சாலைகள், வீதிகள் குப்பைகளால் நிரம்பி துர்நாற்றம் அடிக்கிறது. சுமார் 7 ஆயிரம் டன் குப்பைகள் அகற்றப்படாமல் கிடப்பதாக கூறப்படுகிறது.



# பிரிட்டனில் புலம்பெயர் மக்களுக்கு எதிராக புதிய சட்டம் லண்டனில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

மார்ச் 19, 2023




பிரிட்டனில் புலம்பெயர் மக்களுக்கு எதிராக கொண்டு வரப்படும் புதிய சட்டத்திற்கு எதிராக லண்டனில் ஆயிரக் கணக்கான மக்கள் திரட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிறுபடகுகளில் பிரித்தானியாவுக்குள் நுழைந்து, அதன் பின்னர் புகலிடம் கோரும் நடவடிக்கையை ரிஷி சுனக் அரசாங்கம் மொத்தமாக ஒழிக்க முடிவு செய்துள்ளது. ஆனால், சிறு படகுகளில் மேற்கொள்ளப்படும் ஆபத்தான பயணம் முடிவுக்கு வந்த பின்னர், புதிய வாய்ப்புகள் வழங்கப்படும் எனவும் ரிஷி சுனக் அரசாங்கம் கூறுகிறது.

இந்த நிலையில், மனிதர்கள் எவரும் சட்டவிரோத மானவர்கள் அல்ல என வாசகங்கள் பதிக்கப்பட்ட பதாகைகளுடன் சுமார் 2,000 ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகம் அருகாமையில் திரண்டனர்.

அரசாங்கத்தின் மனிதாபிமானமற்ற, சட்டவிரோத புலம்பெயர் பிரேரணைக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் என நிர்வாகிகள் தரப்பு தெரிவித்துள்ளது. பிரித்தானிய மக்கள் பண்பானவர்கள், அதனாலையே, பயங்கரமான சூழ்நிலைகளில் இருந்து தப்பியோடி வரும் மக்களுக்கு அவர்கள் தங்கள் ஆதரவை அளிக்கத் தயாராக இருக்கிறார்கள் என குறிப்பிட்டுள்ளனர்.

மனிதர்கள் எவரும் சட்டவிரோதமானவர்கள் அல்ல, அவர்களின் சூழ்நிலை அப்படியான நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர். அப்படியானவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டியது நமது கடமை எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, லண்டனில் மட்டுமின்றி, கிளாஸ்கோ மற்றும் வெல்ஷ் ஆகிய பகுதிகளிலும் திரளான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஓராண்டில் மட்டும் சிறு படகுகளில் சுமார் 45,000 மக்கள் பிரித்தானியாவுக்குள் நுழைந்துள்ளனர்.

பிரித்தானியாவின் புதிய புலம்பெயர் பிரேரணை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் UNICEF அமைப்பும் கவலை தெரிவித்துள்ளது.

# இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள்!

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்களகம்

மார்ச் 21, 2023

இலங்கையில் கடந்த 2022 ஆம் ஆண்டிலும் குறிப்பிடத்தக்க மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்டனி பிளிங்கன் நேற்று வெளியிடப்பட்ட மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான வருடாந்த நாடுகளுக்கான அறிக்கையில் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் அண்டு மார்ச் மாதம் முதல் ஜீலை மாதம் வரை, நீடித்த மின்வெட்டு, அதிகரித்துச்செல்லும் உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை உள்ளிட்ட பொருளாதார நெருக்கடியால் நாடு உள்நாட்டு அமைதியின்மைக்கு தள்ளப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் அரசாங்கத் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்காகவும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தியப் பெருங்கடல் தீவான டியாகோ கார்சியாவில் தற்கொலைக்கு முயன்ற 05 தமிழர்கள்!

மார்ச் 23. 2023

பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தியப் பெருங் கடல் தீவான டியாகோ கார்சியாவில் தற்கொலைக்கு முயன்ற ஐந்து தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் மருத்துவ சிகிச்சைக்காக ருவாண்டாவிற்கு அனுப்பப்பட்டதாக தி நியூ ஹியூமனிடேரியன் செய்தி வெளியிட்டுள்ளது.




பிரித்தானிய அரசாங்கத்தின் குடியேற்றத் தடுப்புக் கொள்கைகளுக்கு எதிரான சமீபத்திய பின்னடைவாக, குடிவரவு அதிகாரிகளின் பராமரிப்பில் இருந்து காணாமல் போனதாக கூறப்படும் 200 ஆதரவற்ற சிறார்கள் தொடர்பான செய்தி வெளியாகியுள்ள நிலையில், இந்தச் செய்தியும் வெளியிடப்பட்டுள்ளது.

மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட 5 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள், ருவாண்டா தலைநகர் கிகாலியில் உள்ள ருவாண்டா இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் டியாகோ கார்சியாவில் 18 மாத சிறைவாசத்தின் போது ஏற்பட்ட காயங்கள் மற்றும் பிற நோய்களுக்காக உளவியல் சிகிச்சை மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த நவம்பரில் டியாகோ கார்சியாவிலிருந்து மூன்று புகலிடக் கோரிக்கையாளர்கள், ருவாண்டாவுக்கு அனுப்பப்பட்டனர். இந்தநிலையில் குறித்த புகலிடக்காரர்களின் தற்கொலை முயற்சி குற்றச்சாட்டுகள் உண்மையாக இருந்தால், பிரித்தானிய அதிகாரிகள் தங்கள் பிரதேசத்தில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்களின் உடனடி நலனுக்கான அனைத்து விருப்பங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர் எமிலி மெக்டொனெல் (Emilie McDonnell) கோரிக்கை விடுத்துள்ளார்.

டியாகோ கார்சியாவில் உள்ள 94 புகலிடக் கோரிக்கையாளர்களில் பலர், 26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போது படையினரால் சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறுகின்றனர். 22 வயதான யுவதி ஒருவர் தாம் கடந்த மார்ச் முதலாம் திகதி தற்கொலைக்கு முயன்றதாக தி நியூ ஹியூமனிடேரியனிடம் தெரிவித்துள்ளார். சில நாட்களுக்கு முன்னர் தான் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாக பிரித்தானிய அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்ததன் காரணமாகவே தாம் இதனை செய்ததாக அவர் கூறியுள்ளார். அதே நாளில், அவரது சக புகலிடக் கோரிக்கையாளர்களில் ஒருவர் தையல் ஊசியை பாதியாக உடைத்து இரண்டு துண்டுகளையும் விழுங்கினார், தீவில் மேலும் மூன்று பேர் மார்ச் 13 அன்று இதேபோன்ற வழிகளில் தற்கொலைக்கு முயன்றதாக ஹம்ஷிகா கூறியுள்ளார்.





இந்த ஐவர் உட்பட 89 பேர் இலங்கை மற்றும் இந்தியாவை விட்டு வெளியேறி, கனடாவை அடைய முயன்ற போது, அவர்களது படகு அருகிலுள்ள கடற்பரப்பில் பழுதடைந்தது. இதனையடுத்து பிரித்தானிய படையினர் அவர்களை மீட்டு தீவில் வேலி அமைக்கப்பட்ட முகாமில் தடுத்து வைத்தனர். இந்த புகலிடக்கோரிக் கையாளர்களில் சிலர் இந்தியாவில் உள்ள ஏதிலி முகாம்களில் உள்ள இலங்கை பெற்றோருக்கு பிறந்தவர்கள், அங்கு அவர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டுள்ளது.

# தீவிரம் அடையும் பிரான்ஸ் போராட்டம்!

மார்ச் 10, 2023

பாரிஸ் நகரில் பொலிசாரின் தடுப்புகளுக்கு நெருப்பு வைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்புகை குண்டுகள் வீசப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.



ஜனாதிபதி இமானுவல் மேக்ரானின் ஓய்வூதிய வயது சீர்திருத்தங்களுக்கு எதிரான போராட்டங்கள் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகிறது.

அரசாங்க எதிர்ப்பு ஊர்வலங்கள் சுமார் 50 கிராமங்கள் மற்றும் நகரங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தங்களுக்கு எதிராக நூறாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிரான்ஸ் தெருக்களில் போராட்டக்காரர்கள், பாரிஸ் நகரின் கிழக்கே கலவரத்தில் ஈடுபட்ட சிலர் தடுப்புகளுக்கு நெருப்பு வைத்ததையடுத்து கலவரத் தடுப்பு பொலிசார் தடியடி நடத்தியுள்ளனர்.

பல பகுதிகளில் கடைகளின் சன்னல்கள் சேதப்படுத்தப்பட்டு, தெருவில் அமைக்கப்பட்டுள்ள மரச்சாமான்களும் அடித்து நொறுக்கப்பட்டன. கருப்பு உடையணிந்து குழு ஒன்று கலவரங்களில் ஈடுபடுவதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

அது மட்டுமின்றி தீவிர இடதுசாரி ஆர்வலர்களும் வன்முறையில் ஈடுபடுவதாக பொலிசார் அடையாளம் கண்டுள்ளனர்.

பிரான்ஸ் தெருக்களில் கலவரங்களை கட்டவிழ்த்து



விட்டுள்ள குண்டர்களுக்கு எதிராக 13,000 பொலிசாரை களமிறக்கியுள்ளதாக உள்விவகார அமைச்சர் ஜெரால்ட் தார்மானின் அறிவித்துள்ளார்.

விவசாயிகளும் பல்கலைக்கழக மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டங்களில் களமிறங்கிய பின்னரே, போராட்டம் கலவரமாக வெடித்துள்ளது என பொலிஸ் தரப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

# சூரியனில் மிகப்பெரிய ஓட்டை விஞ்ஞானிகள்விடுத்த எச்சரிக்கை!

மார்ச் 31, 2023

சூரியனின் செயல்பாடு பற்றி நாசா விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்நிலையில் சூரியனில் பூமியை விட 20 மடங்கு பெரிய அளவிலான கருமையான பகுதி தென்படுவதை நாசா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இது "கொரோனல் ஓட்டை" என்று விஞ்ஞானிகளால் அழைக்கப்படுகிறது. பார்ப்பதற்கு சூரியனின் ஒரு பகுதி காணாமல் போனது போன்று காட்சி அளிக்கிறது.

இந்த கொரோனல் ஓட்டையை சூரியனின் தென் துருவ பகுதி அருகே கடந்த 23-ஆம் திகதி நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வகம் கண்டறிந்துள்ளது.

கொரோனல் ஓட்டை தோன்றியதால் புவி காந்த புயல்கள் அல்லது சூரிய காற்று ஏற்படக்கூடும் என அமெரிக்காவின் தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பான என்.ஓ.ஏ.ஏ. எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏனெனில் கொரோனல் ஓட்டையில் இருந்து புறப்படக்கூடிய மணிக்கு 2.9 லட்சம் கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடிய சூரிய காற்றானது பூமியை நோக்கி வரும் என்றும், அது இன்று நடைபெறும் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனால் பூமியின் காந்த புலம், செயற்கைகோள்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா? என் பதை பார்க்க விஞ்ஞானிகள் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர். ஒருவாரத்தில் சூரியனில்




தோன்றிய 2-வது துளை இது என தெரியவந்துள்ளது.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

## ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker



**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

---

LILAND

## LIFE INSURANCE

Mortgage Insurance Line of Credit Insurance

- Life Insurance (Whole / Term) ஆயுள் காப்புறுதி
- Non-Medical Up to Age 85 வயது வரை மருத்துவ பரிசோதனை அற்ற
- Critical Illness Insurance with 100% Cash back கொடிய நோய்களுக்கான காப்புறுதி கட்டிய பணம் முழுவதும் மீள பெற முடியும்

## 20 வருடம் மட்டும் பணம் செலுத்தும் காப்புறுதி

இருபது வருடங்களுக்கு பின் பணம் கட்ட வேண்டியதில்லை. ஆனால் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும். இருபது வருடங்களுக்கு பின் விரும்பினால் காசு பெறுமதியை **Cash Back Value** பெறமுடியும்.

## Living Benefits / Income Replacement

- If you get sick, accident or soft tissue injury
- For Self-Employed
- For Business People if you don't have benefits
- 2 years, 5 years up to Age 70 (Long Term Disability) Claim எடுக்காவிட்டால் 50% பணம் மீள பெறமுடியும்

## Super Visa, RRSP Loan, RESP (Education)

கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness) for 25 Sickness
நோய் வராத பட்சத்தில் கட்டிய பணம் முழுக்க மீளப்பெற முடியும்.

(24 Yrs Experience)

## INCOME TAX




- ★ Accounting
- ★ Bookkeeping
- ★ Payroll - HST
- ★ New Business Registration



இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

**Philip Chandran**
Liland Insurance
**416-450-9043**
philipsam0715@hotmail.com

வருமான வரித்திணைக்களகத்திற்கு நேரடியாக வருமான வரிப்படிவங்களை அனுப்புதல்.

உங்கள் வருமானவரி மீளளிப்புப் பணத்தை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளல்.

*INSURANCE IS LIKE YOUR MUM AND DAD*

---

## சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# புரட்சிகர தலைமையை உருவாக்குவோம்!

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



தனித்து நின்று போராடி தமிழீழம் காணவேண்டும் என்ற இறுமாப்போடு நாம் இயங்கவில்லை. ஆயுதப் போராட்ட பாதையை வரித்துக்கொண்ட சகல விடுதலை அமைப்புக்களும் எமது பொது எதிரியை எதிர்கொண்டு போராட வேண்டும் என்பதே எமது ஆவல். ஒன்றுபட்டுப் போராடுவது எமது பலத்தைப் பன்மடங்குபெருக்கும். ஆகவே, நாம் ஒற்றுமையை வரவேற்கவே செய்கிறோம். ஒற்றுமையின் தேவையை உணர்கிறோம். ஆனால் இந்த ஒற்றுமையானது தமிழ் ஈழப் புரட்சி இயக்கதிற்கு அப்பாற்பட்ட அந்நிய சக்திகளின் அழுத்தங்கள் காரணமாகவோ, அன்றி பிற்போக்கு சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளின் நெருக்குதல் காராணமாகவோ, அவசரப்பட்டுச் சமைத்த சாம்பார் ஒற்றுமையாக அமைவதை நாம் விரும்பவில்லை. அப்படியான தளர்ந்த, உறுதியற்ற, சந்தர்ப்பவாத இணைப்பு நிரந்தரமான ஒற்றுமையை, உண்மையான ஒற்றுமையை உருவாக்கப்பபோவதில்லை என்பது எமது கருத்து. இப்படிச் சொல்வதால் நாம் ஒற்றுமையை விரும்பவில்லை என்று எவரும் தவறாகக் கருதிவிடக்கூடாது.

நாம் விரும்புவது உண்மையான, நிரந்தர ஒருமைப்பாட்டையே, இந்த ஒற்றுமையானது புரட்சிகரத் தலைமையை கட்டியெழுப்பும் இலக்கில், வரலாற்று போக்கினை உணர்ந்து கொண்ட தெளிவில், புரட்சிகர இலட்சியங்களிலிருந்து வழுவாத உறுதிப்பாட்டில், ஆழமான சகோ தாத்துவப் புலிந்துணர்வில், புரட்சிகர சக்திகள் மத்தியில் ஏற்படவேண்டிய ஒன்றாகும். இந்த ஒற்றுமையானது எந்த வொரு கட்டாயத்தின் பேரிலேயோ, அழுத்தத்தின் பேரிலேயோ பலவந்தமாக திணிக்கப்படுவதல்ல.

நாம் இன்று வரலாற்றின் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் நிற்கிறோம். தமிழீழத்தில் கோரத்தாண்டவமாடிவரும் அரச பயங்கரவாத அட்டூழியங்களால் எமது மக்கள் மிகவும் இக்கட்டான ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளனர். எமது மக்கள் சிங்கள இனவாத அரக்கர்களால் கொன்று குவிக்கப்படும் பொழுது முழு உலகமுமே கவலை கொள்ளலாம், கண்டனங்கள் தெரிவிக்கலாம், கண்ணீர் வடிக்கலாம். ஆயினும் எமது மக்களைப் பாதுகாத்து, அவர்களது சுதந்திரத்தை வென்றெடுக்கும் மாபொரும் பொறுப்பு விடுதலைப் போராளிகளாகிய எம்முடையது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த மாபெரும் வரலாற்றைச் சுமந்து கொண்டிருக்கும் நாம், எம்மத்தியிலுள்ள வேற்றுமைகள், வெறுப்புகளைக் களைந்து எமது மக்களின் விடிவுக்காக ஒன்றிணைந்து போராடும் காலம் அண்மித்துவிட்டது என்றே கருதுகிறேன். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இதனையே எமது மக்களும் எதிர் பார்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியாததல்ல.

ஒற்றுமைக்கு முதற்படியாக, ஒற்றுமைக்கான நல்லெண்ண சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொள்வது அவசியம். இதற்கு வழியாக நாம் ஒருவரை ஒருவர் விசமத்தனமாக தாக்கி விமர்சிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். துர்அதிஷ்டவசமாக எம்மத்தியில் வேரூன்றிய வேறுபாடுகள், வெறுப்புணர்வுகளை களைந்துவிட வேண்டும். சொல்லளவில் ஒற்றுமை வேதாந்தம் பேசிக்கொண்டு, செயலில் சகோதரத்து யுத்தம் நடத்தும் விடுதலை அமைப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. இந்த சகோதர விரோத செயற்பாடுகள் நிறுத்தப்படாமல் ஒற்றுமைக்கான நல்லெண்ண சூழ்நிலையை எப்படி உருவாக்குவது? ஒற்றுமை என்ற உயரிய நோக்கினை மக்களை எமாற்றும் வெறும் பிரச்சார சாதனமாகக் கையாள்வது மிகவும் கீழ்த்தரமான அரசியற் சந்தர்ப்ப வாதமாகும்.

ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் சகல புரட்சிகர விடுதலை அமைப்புகளுக்கும் நான் விடுக்கும் வேண்டுகோள் இதுதான். போர்க்களத்தில் குதியுங்கள். எமது பொது எதிரியை ஒன்றிணைந்து எதிர்ப்போம். தளத்தில் எதிரியை சந்திக்கும்போத எம்மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் பிறக்கும் என்பது திண்ணம். அதே சமயம் உண்மையான ஒருமைப்பாட்டிற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளையும் மேற்கொள்வோம். நாம் தோளோடு தோள் நின்று போராடும்பொழுது எமது மக்களும் எம்மோடு அணிதிரள்வார்கள். முழுத் தேசமுமே எமக்கு பக்கபலமாக நிற்கும். எமது ஒன்றுதிரண்ட பலத்தைக்கண்டு எதிரி நடுக்கம் கொள்வான். நாம் களத்தில் ஒன்றிணைந்து போராடினால் எதிரியை எமது தாய்நாட்டிலிருந்து விரட்டியடித்து சுதந்திர தமிழீழம் காண்பது வெகுதூரத்தில் இராது.

எமது பழைய, பாராளுமன்றத் தலைமை, எதிரியைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் அரசியல் ஞானமும் அற்றதாக இருந்தது தான் எமக்கு இந்த துர்க்கதி ஏற்பட்டது. சப்பாணிகட்டி மண்டியிட்டிருந்து, சலுகைகளுக்காகத் தவம் இருந்து, நம்பி நம்பி ஏமாந்து, ஒரு பரம்பரையின் காலத்தை இவர்கள் வீணடித்தனர். இவர்களது விவேகமற்ற அரசியல் போக்கால் எமது விடுதலைப் போராட்டம் பல்லாண்டு காலம் பின் தள்ளப்பட்டது.

கடந்த முப்பது ஆண்டு காலத்திற்கு மேலாக படிப்படியாக தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்குமுறையானது இன ஒழிப்பை இலக்காகக் கொண்டு ஒரு நாசகாரத் திட்டம் என்பதை தமிழ்ப்பாராளுமன்ற அரசியல்வாதிகள் தீர்க்கதரிசனத்துடன் புரிந்து கொள்ளவில்லை. அரச பயங்கர வாதம் கூர்மையடைந்து, சிங்கள இனவாதப் பூதம் தமிழினத்தை பூண்டோடு அழிக்க கிளம்பிய போதும்கூட இவர்கள் பாராளுமன்ற ஆசனங்களையும், பதவிகளையும் கட்டிப் பிடித்தபடி சிங்களத் தலைவர்களுக்கு துதிபாடிக் கொண்டிருந்தார்கள். கூட்டணித் தலைவர்கள் புரிந்த மாபெரும் தவறு என்னவென்றால் தமிழ்ப் புரட்சிவாத இளைஞர் பரம்பரையை அந்நியப்படுத்தி வந்தமையாகும் தேசிய சுதந்திரத்திற்காக நாம் வரித்துக்கொண்ட புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் வரலாற்றுக் கட்டாயத்தையும் அதன் அரசியல் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளாமல் எமது போருபாய வடிவத்தினை கண்டிந்து வந்தனர், எம்மைப் பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என வர்ணித்தனர்.

நாம் போராட்ட களத்தில் இரத்தம் சிந்தியபோது, எமது இளம் வீரர்கள் உயிர்த் தியாகங்கள் புரிந்துவந்தபோது, தமிழ் இனம் சமூகம் தாங்கொணா ஒடுக்குமுறைக்கு இலக்காகியபோது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டணித் தலைவர்கள் எதையும் உருப்படியாகச் செய்யவில்லை. இவர்கள் செய்ததெல்லாம் உமது ஆயுதப் போராட்டத்தை ஒரு அரசியல் அழுத்தமாகப் பிரயோகித்து, சலுகைகள் வேண்டி சிங்கள அரசுடன் சமரச பேச்சுக்களை நடத்திவந்தனர். இன்று சிங்கள அரசால் தூக்கியெறியப்பட்டு, அரசியல் அரங்கிலிருந்து அந்தியமாக்கப்பட்டிருக்கும் இந்த வேலையில்தான் புரட்சிகர விடுதலை அமைப்புகளை நாடவேண்டிய ஞானோதயம் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த சூழ்நிலையிலும் கூட நாமே போராடி, எமது மக்களின் விடுதலையை நாமே பெற்றெடுக்க வேண்டும் என்ற தன்நம்பிக்கை இவர்களிடம் இல்லை. இதனால் தான் இந்திய இராணுவப் படையெடுப்பிற்கு இவர்கள் அழைப்புகளை விடுகிறார்கள்.

எமக்கு இந்தியாவின் உதவி அவசியம். இந்தியாவின் ஆதரவும் அவசியம். இந்தியாவின் நல்லெண்ணம் அவசியம்.

நாம் முதலில் இந்தியாவிடம் எமது தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தவேண்டும். தமிழீழ தனியரசே எமது பிரச்சனைக்கு இறுதியான தீர்வு என்பதை திட்டவட்டமாக எடுத்துரைக்க வேண்டும். எமது கோரிக்கையை தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறி இந்தியாவின் நல்லாதரவைப் பெறுவதை விட்டு எமத பிரச்சனையை தீர்த்துவைக்குமாறு இந்தியாவிடம் கைநீட்டி நிற்பது அரசியற் சாணக்கியம் ஆகாது.

எனது அன்பான தமிழீழ மக்களே!

விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வயிர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமேயில்லை. நாகரீகம் தோன்றிய காலம்தொட்டு இன்று வரை, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடத்தியிருக்கிறது, யுத்தங்கள் புரிந்திருக்கிறது, புரட்சிகள் செய்திருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நம்மதியாக வாழ முடியாது. சமாதானமாக சந்தோசமாக வாழ முடியாது. சுதந்திரத்தை வென்றெடுக்காதுபோனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும், தன்மானமிழந்து தலைகுனிந்து வாழவேண்டும், பயந்து, பயந்து பதட்டத்துடன் வாழவேண்டும், படிப்படியாக அழிந்துபோக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

நாம் போருக்குத் தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதைவிட போராடி வாழ்வதே மேன்மையானது என்று இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராகவேண்டும். ஈழத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக, வீரப்புலி இனமாக மாறவேண்டும். விடுதலை என்பது ஒருதேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் முழு சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச் சூழ்நிலையில் எம் மத்தியில் சுயநலவுணர்வுகள் களையப்பெற்று சமூகவுணர்வு, இனவுணர்வு பிறக்கவேண்டும். பணத்தை முடக்காமல், உணவு பண்டங்களைப் பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலம் கருதாமல் வசதிபடைத்தோர் வசதியற்றோருக்கு உதவவேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி, இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த தேசிய சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது நாம் எமது தேசத்திற்கு புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தமிழீழம் என்றோ ஒரு நாள் உதயமாவது திண்ணம். சமதர்ம சமூகமாக எமது நாடு வளம் கொளிப்பது திண்ணம்.

இந்நம்பிக்கையில் ஆன்ம உறுதி தளராது விடுதலைப் பாதையை நோக்கி வீறு நடை போடுவோமாக.

ஏப்ரல் 1985


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
* Furnance * Air Conditioner
* Tankless Water Heater * Heat Pump
* Duct Less * Airmax Velocity * Air Handlers
* Boilers * Fire Places * HRV * Attic Insulation
* Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD Navien
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do
Training Experience
* For All Your Taekwon-Do, Martial
Arts, Kickboking, Self Defense and
Yoga Needs
2016
READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268





# இது
# காலம் கனிந்த நேரம்

காற்று எங்கும் வியாபித்துளது.
கலங்காதே!
மூச்சை உள்வாங்கி வெளியேவிடு.
சுவாசம் சீராகும்.
முள்ளந்தண்டை நிமிர்த்தி
கை காலை உதறு
தளையறுந்து போகும்.
உனக்கு விலங்கிட எவரால் முடியும்?
நீ காலில் நசியும் சிறுபுழு அல்ல
உன்னைக் கையால் கசக்கமுடியாது.
நீ யார்?
உரத்துக் கேள் பதில் வரும்.
நீ யார்?
மனிதன் மட்டுமல்ல...
நீ மனிதனிலும் தமிழன்.
பயமறியாத பரம்பரை வித்து.
நல்லூரின் “இராசவாசலில்” தேடிப்பார்
இந்தமண் உனதென்ற “தோம்பு” கிடைக்கும்.
“பண்டாரவளவை” உழுதுபார்
உன் பூட்டி வணங்கிய :மாடவிளக்கும்”,
பொங்கிப் படைத்த “பித்தளைத்தாம்பாளமும்”
வரலாறெழுதிய “எழுத்தாணியும்” வந்து சேரும்
வலிலபுரக்கோவில் மணலைக் கிளறிப்பார்
நீ யாரென்ற தடயங்கள் தட்டுப்படும்.
இந்தளவும் இருக்கிறதே
இன்னுமேன் கட்டுண்டு கிடக்கின்றாய்.
எல்லாவற்றையும் மண்ணுள் புதைத்துவிட்டு
ஏன் இருப்பிழந்து இருக்கின்றாய்.
தமிழனே! நம்பிக்கையுடன் எழுவாய்
இரவு கரைந்து, கரைந்து
வைகறைப் பொழுதோடு கலக்கும்
குங்குமச் சாந்தில் குளித்து
கிழக்கின் திரை விலத்தி
சூரியன் சுடர்வழி மலர்வான்
வீடியும் பொழுது உனக்கு விரைந்து வருகிறது.
வரவேற்க ஆரார்த்தித் தட்டுடன் ஆயத்தமாகு.
ஆனால்
புலரும் பொழுதுக்காகப் போராட வேண்டும்
என்பதைமட்டும் எண்ணிக்கொள்.
குஞ்சு கொத்தாமல்... முட்டை உடையாது.
கூழாகிப்போனால்... குஞ்சு பிறவாது.
வாழ்வுவரும் வழியில்
வேதனை வேலிகளைத் தாண்ட நேரிடும்.
குருதியில் குளித்தபடிதான் புதிய பிரசவம்.
தலைப்பிரசவம் தாய்க்கே புரியும்.
போராடிப் பெற்றால்தான்
விடுதலையின் விலை தெரியும்.
காலம் வந்து கதவைத் தட்டும் போது
சாவியைத் தயாராக வைத்திருப்பவன் புத்திசாலி
முகூர்த்த நேரத்தில்
தாலியைத் தொலைப்பவன் முட்டாள்.
முற்றிச் சரிந்த வயலுக்குள்
அரிவாளுடன் இறங்குபவன் அறிவாளி.
ஏர்கொண்டு இறங்கினால்...
புத்தியிலேதோ பிசகிருக்க வேண்டும்.
இது காலம் கனிந்த நேரம்.
தோளின் சுமையை
அடுத்த தலைமுறைக்கும் சுமத்தாதே.
பயணத்தை உன்கால்களே முடிக்கட்டும்.
இப்போது வேண்டும் வீரம்
நாணல் போலக் கூனல் கூடாது.
ஊசியிலை மரங்கள் போல நிற்பவன்
விழுந்தாலும் நினைக்கப்படுவான்.
மணிமுடியும், கவசமும் தாங்கிய
பெருமைக்குரிய பிறப்புடையவனே!
அடையாள அட்டையும்.
அகதிப்படிவமும் சுமக்கின்றாயே
நினைத்துப் பார்! நெஞ்சு கொதிக்கவில்லையா?
சாளரத்தைத் திறந்து வெளியே பார்.
குஞ்சுகள் கூட அணிவகுத்துப் போகின்றனர்.
முரசம் முழங்க முன்னேறுகின்றனர்.
முடிந்தால் அவர்களுடன் முன்னேறு
இல்லையேல் என்னசெய்வதா?
வாழத்துக்கூறி வழியனுப்பு.
வெற்றியுடன் வீடுதிரும்பும்வரை
அவர்கள் நினைவாக வாழ்ந்துகொள்.
அது போதும்.

**-புதுவை இரத்தினதுரை**

# அழிவின் விளிம்பில் நீர் வளம் சர்வதேச நீர் நாள் – மார்ச் 22!

22.03.2023

“நீர் இன்றி அமையாது உலகெனின் யார் யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு” என்ற வள்ளுவப் பெருந்தகையின் பொன் வாக்கு ஒன்றே இந்தப் பூமியின் ஆதாரமே நீர் தான் என்றும், தண்ணீர் இல்லாமல் உலக செயற்பாடுகள் ஒன்றும் ஈடேற முடியாதென்றும் ஒரு புல் முளைப்பதற்குக் கூட நீர் அவசியம் என்றும் கூறி நீரின் அருமையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இயற்கை அன்னையின் கொடையாய் மழையாகவும், கடல்கள், ஆறுகள், அருவிகள், நீர்வீழ்ச்சிகள், நிலத்தடி நீர், கால்வாய்கள் எனப் பல்வேறு தேவைகள் கருதி ஒவ்வொரு தேவைக்கும் ஒவ்வொரு தீர்வாய் இப்புவிக்கு வரமளித்தாற் போல் பல்வேறு நீர்நிலைகள் அருளப்பட்டுள்ளன.

நிலத்தைவிட நீரே அதிக வீதமாகப் படைத்த இறைவன் நீர்த்தேவை அறிந்தே இறைத்துள்ளான் நீரை.

நாம் வாழும் புவியானது தன் மீது நீராடை போர்த்தியுள்ள காரணத்தினால் ‘நீலக்கோள்’ என அழைக்கப்படுகின்றது.

பூமியில் உள்ள நீரில் 97.5 வீதம் நீர் கடல் நீராக உப்பேறிக் கிடக்கின்றது. எஞ்சிய நீரிலும் வெறும் 0.007வீதம் நீர் மாத்திரமே பயன்பாட்டிற்கு உகந்த நன்னீராக உள்ளது.

இன்று 46 கோடி மக்கள் குடி நீர்ப் பற்றாக்குறையினால் அவதிப்படுகின்றனர்.

பின்தங்கிய நாடுகளில் பெண்களும் குழந்தைகளும் நீர் தேடி 15கிலோமீற்றர் நடந்து செல்லும் அவல நிலையையும் அண்மையில் ஊடகங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன.







இவ்வாறு தொடரும் நீர் வேட்கை அத்துடன் அடங்கிவிடுவதாக இல்லை. நீர் வள ஆதாரங்களை முறையாக முகாமைத்துவம் செய்யத் தவறின் நடப்பு நூற்றாண்டின் அரைவாசியின் போது உலகில் மூன்றில் இரண்டு பகுதியினர் கடுமையான நீர்ப்பற்றாக்குறையால் அவதியுறுவர் என்று யுனெஸ்கோ எச்சரித்துள்ளதுடன் நீரின் தரம் பற்றிய கணிப்புகள் பீதியை ஊட்டுகின்றன என்றும் தெரிவித்திருந்தது.

இன்று உலகில் ஐந்தில் ஒரு பகுதி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் என்பது வெறும் கானல் நீராகவே உள்ளது. பெரும்பாலான சுகாதாரச் சீர்கேடுகள், தொற்றுக்களுக்கும் நீர் மாசு பிரதான காரணமாக உள்ளது.

இவ்வாறு நீரின் தூய்மையை பலாத்காரம் செய்வதில் தொழிற்சாலைகளும், சில மனித செயற்பாடுகளும் முக்கிய பங்காற்றுவதுடன், இயற்கை அனர்த்தங்களான சுனாமி, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, நில நடுக்கம் போன்றவையும் நீரை மாசாக்கத்தவறவில்லை. அந்த வகையில் தொழிற்சாலைக் கழிவுகளால் நீருடன் கலக்கும் இரசம், குரோமியம், ஈயம், கட்மியம் போன்ற பார உலோகங்களும் சயனைட் இரசாயனங்களும் “குடம் பாலுக்குத் துளி விஷம்” போல நீரை நஞ்சாக்கி நிற்கின்றன.

இன்று குடிநீரில் விவசாய இரசாயனங்களும் குடியேறி அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றமை கண்கூடு. பசளைகளிலிருந்து வந்து சேரும் ‘நைத்திரேற்’ அதிகமாய் குடிநீரிற் கலப்பதால் “நீலக்குழந்தை” நோயை அதாவது இரத்தத்தில் ஒட்சிசன் காவப்படுவதில் தடங்கல் ஏற்பட்டு குழந்தை இறக்கும் அபாயங்கள் ஏற்படுகின்றன என உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருந்தது.

இவ்வாறான காரணிகளின் தாக்கத்தினால் இன்று மருத்துவ உலகிற்கு பாரிய சவாலாகவும் பல உயிர்களை நாளுக்கு நாள் குடித்துவருவதுமாக சிறுநீரக நோய் மாறியுள்ளது.

நீரில் கலக்கும் இரசாயனப் பொருட்கள், நீரின் தூய்மை பாதிக்கப்படல், கல்சியச் செறிவு அதிகரித்தல் போன்ற காரணிகள் சிறுநீரகக் கற்கள் மற்றும் சிறுநீரக செயலிழப்பு என்பவற்றிற்கு பாரியளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நாம் அன்றாட வாழ்வில் உள்ளெடுக்கும் ஒவ்வொரு துளி நீரும் உடலின் நீர்ச் சமநிலையைப் பேணுவதற்கும் கழிவகற்றல் பொறிமுறைக்கும் அத்தியாவசியமாக உள்ளது. எனவே நாம் அருந்தும் நீரின் தூய்மைத்தன்மை பற்றி மிக மிக அவதானமாக இருப்பதுடன் முடிந்தவரை வடிகட்டிய நீரையே அருந்த வேண்டும் .

திரவத் தங்கம் என வர்ணிக்கப்படும் நீரானது இவ்வாறு அளவிலும் தரத்திலும் வேகமாகக் கீழிறங்கி வருவதால் எதிர்காலத்தில் நன்னீர் என்ற சொல்லே கேள்விக்குறியாக உள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

அழகு, பாதை, வாழ்வாதாரம், குடிநீர் செழிப்பு என எண்ணிலடங்கா ஈகைகளை உலகிற்கு நல்கும் நீர் வளமானது முதல் உயிரி தோன்றிய நாளிலிருந்து புவியில் உயிர்ப் பசையை ஒட்டி வைத்திருப்பதில் முக்கிய பங்காற்றி வருகின்றது. இவ்வாறு உயிரணுக்கள் ஒவ்வொன்றிலும் உறவாகியுள்ள நீருக்கு ஆபத்தென்றால் அதற்கான மூலகாரணங்கள், நீரினைப் பாதுகாக்கும் பொறிமுறைகள், விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் என்பன இன்று மிக மிக அவசியமானவையாக உள்ளன.

நீரின் அவசியம் அறிந்து நம் முன்னோர் குளங்கள், நீர்நிலைகள் அமைத்து நீரைப் பாதுகாத்ததுடன் நீரை மாசுகளின்றியும் பாதுகாப்பாகவும் நம்மிடம் ஒப்படைத்தனர். ஆனால் தற்காலத்தில் நவீனம் என்ற பெயரில் நாம் நீர் வளங்களைப் பாதுகாக்கத் தவறி நிற்கின்றோம். நம் அடுத்த சந்ததியினருக்கும் நீர் வளத்தை பாதுகாப்பாகவும் தூய்மையுடனும் வழங்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும் .

மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள், தனிநபர் நீர்ச்சிக்கனம், தேவைக்கு அதிகரித்த நீர்ப்பாவனையைத் தவிர்த்தல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல், முறையான கழிவகற்றல் செயன்முறைகளைப் பின்பற்றல், கழிவுநீரை நீருடன் கலக்கவிடாது முறையான கழிவகற்றல் பொறிமுறைகளைக் கையாளுதல், தேவையற்ற இரசாயனப் பாவனைகளைத் தவிர்த்தல், எண்ணெய்க் கழிவுகள் கடலில் கலக்காது பாதுகாத்தல் போன்ற நீரை மாசிலிருந்து பேணும் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் நீர்வளத்தை மாசின்றிக் காத்து வரண்ட பூமியாக இப்புவியை மாற்றாது நீர் வளம் பேணிச் செழிப்புடன் வாழ்வோம்.

-டக்ஸனா கிருஷ்ணானந்தன் (குகதா) - தினக்குரல்


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
FREE EFILE SERVICE
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
www.kevtax.com
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866 / FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


AR GROUP
ARASAN RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643

# வடக்கு- கிழக்கில் சைவ - தமிழ் வரலாற்று எச்சங்களை அழித்தலும் பௌத்த எச்சங்களாக திரித்தலும்!

03.02.2023



“தேர்தலை நடத்துவதன் ஊடாக இலங்கை மக்களின் இறை யாண்மை அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அதிகரித்த ஈடுபாட்டின் அவசியத்தை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்”- இது இன்றைய பத்திரிகை செய்தி. இலங்கை மக்களின் (சிங்கள மக்களின்) இறையாண்மையை பாதுகாக்க ஐ.நா.தலையீடு வேண்டுமென சஜித் கேட்கலாம். அதனால், இந்த நாட்டின் இறைமைக்கு பங்கம் ஏற்படாது.ஜே.வி.பிக்கெதிரான இராணுவ நடவடிக்கையில் சிங்கள மக்கள் கொல்லப்படுவதற்கெதிராக மனித உரிமையை நிலை நாட்டக்கோரி மகிந்த ஐ.நா. செல்லலாம். அதனால் இலங்கையின் இறைமை, கீர்த்தி? பாதிக்கப்படாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நேர்மையான நீதி விசாரணை வேண்டுமென கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ஐ.நா.வுக்கும் வத்திக்கானுக்கும் சென்றால் இலங்கையின் காவல்துறை, நீதித்துறையின் கீர்த்தியும் இறைமையும் பாதிக காது. தலைப்பிற்கும் இவற்றுக்கும் என்ன சம்பந்தம்? இலங்கை யின் தேசிய கட்சித்தலைவர்கள், சிங்கள மத தலைவர்கள் எல்லோரும் இலங்கையின் இறையாண்மையை பாதுகாக்க, மனித உரிமைகளை பாதுகாக்க, நீதித்துறை, காவல்துறையின் நேர்மையான சேவையினை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டுமென்பதை காலத்துக்கு காலம் வலியுறுத்திக் கொண்டே வந்துள்ளனர்.

இங்கு அவர்கள் இலங்கை மக்கள் என்பதை மறைமுகமாக சிங்கள மக்கள் என்ற அர்த்தத்தையே வெளிப்படுத்தி வரு கிறார்கள். ஏனெனில் அவர்கள் விருப்பத்தில் இலங்கை ஓர் சிங்கள-பௌத்த நாடு. மேலும் இத்திட்டத்தை முழுமைப்படுத்த தடையாக இருக்கும் தமிழர்களையும் அவர்களது தொன் மையையும் அழிப்பதற்கெதிராக அவர்கள் ஐக்கிய நாடுகள் சபை, அதன் உறுப்பு நாடுகளுக்கு சென்றால் அது இறைமைக்கு அச்சுறுத்தல், நாட்டின் கீர்த்திக்கு பாதகம், ஆட்சியாளருக்கு அவ மானம், தேசத்துரோகம் .எனவே அவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென கூக்குரல்கள்.

இந்தப் பின்னணியின் புரிதலிலிருந்தே நிறுவனமயப்படுத்தப் பட்ட சிங்கள-பௌத்த ஆட்சியாளரின் தமிழருக்கெதிரான கலா சார அழிப்பு நோக்கப்படவும் அதனை முற்றாக நிறுத்துவதற் கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவும் வேண்டும்.




ஒவ்வொன்றும் அவ்வப்போது சிறு குரல் எழுப்பிவிட்டு அடங்கி விடுவதே வரலாறாக உள்ளது.

இலங்கையில் 83 பேருக்கு ஒரு படையினரும் வடக்கில் மட்டும் 5 பேருக்கு ஒரு படையினரும் என உலகில் மிக அதிகமான படையினரை கொண்ட நாடாக இலங்கை உள்ளது. இதற்கு உலகெங்கும் சொல்லப்படும் பொய்யான காரணம் தேசிய பாது காப்பு என்பதாகும். 2009 இல் புலிகள் மௌனிக்கப்பட்ட பின் வடக்கு கிழக்கில் ஒரு பட்டாசு கடை வெடித்ததில்லை. மாறாக ஒருபுறம் இராணுவத்தினரின் வன்குற்றங்களும் மறுபுறம் தென்னிலங்கையில் மாபியாக்களின் குற்றங்கள், துப்பாக்கி சூடுகளுமே பதிவாகி வருகின்றன.

வடக்கு, கிழக்கில் தமிழர் நிலங்களை சிங்களவர்கள் கபளீகரம் செய்வதற்கு பாதுகாப்பு வழங்கல், சிங்கள மீனவர்கள் வடக்கு-கிழக்கு கடலில் தமிழர்களை அடக்கி மீன்பிடிக்க பாதுகாப்பு அளித்தல், தமிழர்களின் புராதன சின்னங்களை அழித்து, மறைத்து புத்த கோவில்கள் கட்டுதல், விரும்பிய இடமெங்கும் புத்தர் சிலைகளை வைத்து பாதுகாப்பளித்தல் என வடக்கு-கிழக்கை சிங்கள பௌத்த மயமாக்கும் செயற்பாடுகளை முன் னெடுப்பதற்கும் அவற்றுக்கு பாதுகாப்பளிப்பதற்குமே தேசிய பாதுகாப்பு என பெயரிடப்பட்டுள்ளது.

இதுபோன்றே இலங்கையின் அகழ்வாராய்ச்சி திணைக்கள மானது தனது வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர்ந்து



ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு பிரிவுகளில் கலாசார படுகொலைக்கெதிரான ஆட்சியாளரின் செயற்பாடுகளை எடுத்து செல்லமுடியும். 1.யூனெஸ்கோ 2.மனித உரிமைகள் பேரவை யில் மனித உரிமைகள் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள கலாசார உரிமைகள் தலைப்பின் கீழ் தனியாக கையாள முயற்சிக் கலாம். அரசாங்கம் தனது படைகளையும் பிக்குகளையும் அகழ்வாராய்ச்சி திணைக்களத்தையும் பயன்படுத்தி அதீத அதிகாரத்தை வழங்கி வேகமாகவும் தொடர்ச்சியாகவும் இக் கலாசார அழிப்பை செயற்படுத்தும் போது தமிழ் தலைமைகள் மக்களுக் கு அறிவுறுத்தி அவற்றை அவ்வாறே பாதுகாப்பது என்கிற கடமைக்கு மாறாக ரகசியமான முறையில் பிக்குகளை யும் படையினரையும் பயன்படுத்தி சைவ-தமிழ் கலாசார மறப் புரிமைகளை மறைத்தும் திரிவுபடுத்தியும் பௌத்த மயமாக்கல் என்னும் வேலையே கீழ்த்தரமாக செய்துவருகிறது.

இவை இன அழிப்புடன் பின்னிப்பிணைந்த செயற்பாடு களாகும். தனியான தொடர்ச்சியான நிலப்பரப்பினை கொண்ட தனியான மொழி, கலாசார பண்பாடுகளை கொண்ட தமிழ் தேசிய இனத்தின் தொன்மைமிக்க வாழ்வியல் வரலாற்றை அழிப்பதனூடாக அவர்களின் தனித்துவம், அடையாளத்தை அழித்து சிங்கள-பௌத்தத்திற்குள் கலந்து விடுவதன் மூலம் கலாசார படுகொலையினூடாக இன அழிப்பு செய்யும் செயற் பாடே முன்னெடுக்கப்படுகிறது.

இவற்றை முழுமையாக தடுத்து நிறுத்தி தமிழர் தாயகத்தையும் தமிழ் மக்களின் தொன்மையையும் தனித்துவத்தையும் நிலை பேறாக பாதுகாக்க வேண்டியது அவசியமும் அவசரமுமான தேவையாகிறது.”வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம்” என்பது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தம் ஓர் சர்வதேச ஆவண மாகும். இதனை இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக மீறுதல் என்பது சர்வதேச ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். இவ்விடயத் தில் இந்தியா தலையிடுவதற்கான சட்ட உரித்தும் தமிழ் மக்கள் சார்பில் இந்தியா கையெழுத்திட்டிருப்பதால் அதனை பாது காக்கும் தார்மீக பொறுப்பையும் இந்தியா கொண்டுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைப்பதை உத்தரவாதம் செய்யவேண்டிய பொறுப்பும் சட்ட உரித்தும் இந்தியாவுக்குண்டு. இந்தியா இதனை நிறைவேற்ற செய்யும் கடமை தமிழ் தலைமைகளுக் குரியது. இந் நகர்வானது வடக்கு கிழக்கில் குறைந்தபட்ச அதிகாரமேனும் உள்ள ஆட்சிக்கு வழிவகுக்கும்.

கலாசார அழிப்பினூடாக இன அழிப்புத்திட்டம் தொடர்பில் தமிழ் தலைமைகள் நுண்ணறிவுடனும் ராஜதந்திர ரீதியிலும் சர்வ தேச சமூகத்தின் ஆதரவை திரட்ட தொடர்ச்சியான முன்முயற் சிகள் எடுக்கவேண்டும். தமிழ் தலைமை எப்போதுமே அரசின் அடக்குமுறைக்கு எதிர்ப்பை பதிவு செய்யும் (REACTIVE) அணுகுமுறையே மேற்கொள்கின்றனர். மாறாக இவ் அடக்கு முறைகள் தொடர்பில் இலங்கை அரசின் கைகளை கட்டிப் போடும் வகையில் முன்னெடுப்புகள் (PROACTIVE) அணுகு முறை கையாளப்படவேண்டும்.

சர்வதேச சமூகத்தை கையாளுதல் என்பது அவர்கள் இலங் கைக்கு வரும்போது சந்தித்து கதை சொல்லிவிட்டு வருவதாக அன்றி அனைத்து ஆதாரங்களும் திரட்டப்பட்டு வகைப்படுத்தப் பட்டு கலாசார உரிமைகளை பாதுகாக்க உலக அளவில் இயங் கும் ஐ.நா.மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதும் சர்வதேச நடவடிக்கை நோக்கி நகர்த்துவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படவேண்டும்.

ஆதாரங்களை திரட்டுவதற்கும் வகைப்படுத்துவதற்கும் பாது காப்பதற்கும் பொருத்தமான சர்வதேச தளங்களில் அவற்றை சமர்ப்பித்து நிலைபேறான தீர்வு காண செயற்படும் வகையில் ஓர் சர்வதேச தலைமையகம் செயற்படவேண்டும். அது ஓர் உயர்ஸ்தானிகரகத்துக்குரிய தரத்துடன் செயற்படும் வகையில் அமைய வேண்டும்.

இவற்றுக்கு சமாந்தரமாகவும் விரைவாகவும் இந்திய-இலங் கை ஒப்பந்த அடிப்படையில் வட-கிழக்கு இணைப்பை உத்தர வாதப்படுத்துவதற்கு உரிய நகர்வுகளும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் நகர்வுகளும் மேற்கொள்ளப் படவேண்டும்.தேவை அறிவுபூர்வமான,சாமர்த்தியமான ராஜ தந்திர நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதே.

நன்றி: கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்




# சிலாவத்துறை ஒரு வரலாற்றுப்போர்!

- *தமிழீழத்தின் ஒரு பகுதியைத் துண்டாடும் நோக்குடன் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வலயம்.*
- *ஒரு நீண்ட போருக்குத் தயார்ப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து சிங்கள முப்படைத்துருப்புக்கள்.*
- *6 சியாமாசெற்றி விமானங்கள், 4 உலங்கு வானூர்திகள், 4 இராட்சத குண்டு வீச்சு விமானங்கள், 2 பாரிய கப்பல்கள், 10 பீரங்கிப் படகுகள், கடலிலிருந்தும் வானிலிருந்தும் பொழிந்து கொண்டிருந்த குண்டு மழை.*
- *இத்தனைக்கும் மத்தியில் சிலாவத்துறை பகுதியில் நாம் நடாத்தியநான்கு நாள்*




1984 ஆண்டு ஆவணி மாதம் 11 ஆம் திகதி வெள்ளாங்குளம் என்னுமிடத்தில் ஒரு கண்ணி வெடித்தாக்குதல் நடாத்தப்பட்டது. அந்த இடியோசையுடன், மன்னார் மாவட்டத்தில் எமது இராணுவ நடவடிக்கைகள் தொடக்கி வைக்கப்பட்டன.

இந்தக் காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் 9 சிங்களப்படை முகாம்கள் (காவல் துறை, இராணுவம், கடற்படை) இருந்தன.

காலம் செல்லச் செல்ல எமது இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்க அதிகரிக்க இராணுவ முகாம்களின் தொகையும் குறையத் தொடங்கியது. இறுதியில், மன்னார் மாவட்டத்தில் 4 படை முகாம்களே எஞ்சியிருந்தன. அதில் ஒன்றுதான் சிலாவத்துறை முகாம் ஆகும்.

மன்னார் - மடு பிரதான வீதியிலுள்ள முருங்கனிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் இருக்கும் ஒரு கரையோப்பகுதி தான் சிலாவத்துறை.

சிலாவத்துறை இராணுவ முகாமுக்குப் பக்கபலமாக அதன் அருகாமையிலிருக்கும் உதவி அரசாங்க அதிபர் விடுதியிலும், பாடசாலைக் கட்டத்திலும் இரண்டு மினி முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இத்துடன் சிலாவத்துறை முகாமிலிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ள கொக்குப்படையானில் ஒரு இராணுவ முகாமும் 6 கி.மீ. தொலைவிலுள்ள கொண்டைச்சி மர முந்திரிகைப் பண்ணையில் ஒரு முகாமும் இருந்தன.

இவ்விதமாக, சிலாவத்துறைப்பகுதி ஒரு இராணுவ வலணமாக மாற்றப்பட்டுக்கிடந்தது. இந்தப்பகுதி இராணுவ மயப்படுத்தப் பட்டதற்கு பலமான ஒரு காரணம் இருக்கிறது.

கொண்டைச்சியில் 6000 ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்படும் ஒரு பெருந்தோட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. இப் பண்ணையில் சிங்களவர்களே குடியேற்றப்பட்டிருந்தார்கள். இது ஒரு புறமிருக்க மன்னார் மாவட்டத்தின் தென்முனையோரமாகப் புத்தளம் மாவட்டத்துடன் சேர்ந்திருந்த தமிழ் கிராமங்களான வண்ணாத்திவில்லு, பெரியநாகவில்லு, இலவன்குளம், முடகண்டாவெளி, பொம்பரிப்பு, கருவாளகுடா போன்ற கரையோரக் கிராமங்களில் 1960ல் மீன்பிடி மற்றும் விவசாயம் என்ற காரணங்களைக்காட்டி சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். இதே சமயம் 1970ல் முள்ளிக்குளம் தொடக்கம் சிலாவத்துறை வரையுள்ள சுமார் 15. கி.மீ. நீளமுள்ள கரையோரப்பகுதிகளில் பருவகால மீன்பிடி நோக்கில் சிங்களவர்கள் வந்து குடியேறியிருந்தனர்.

எனவே, வழமையாக சிங்களக் குடியேற்றக் கிராமங்களுக்கு இராணுவப் பாதுகாப்புக் கொடுப்பதைப்போல கொண்டைச்சியில் இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டது. அதனுடன் சேர்ந்து சிலாவத்துறை முகாமும் குடியேற்றவாத நோக்குடன் அங்கு நிலைத்திருந்தது.

மன்னார் மாவட்டத்தின் தென்முனையில் சிலாவத்துறையிலிருந்து கொண்டைச்சிவரை ஒரு இராணுவ வலயத்தை உருவாக்கிப் பலப்படுத்துவதன் மூலம் அதற்கு உள்ளே இருந்த தமிழர் பகுதிகளை சிங்கள மயமாக்கி ஒரு மண் அபகரிப்பைச் சுலபமாகச் செய்யலாம் என்ற நோக்கிலேயே சிலாவத்துறைப் பகுதியை சிறீலங்கா அரசு இராணுவவலயமாக மாற்றி வைத்திருந்தது.

எனவே, இந்த நுட்ப நோக்கத்தை அடிதுடைப்பதற்காக இராணுவ வலயத்திலும், அதற்கு உள்ளேயும் பல தடவைகள் வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் சிறீலங்கா அரசின் கபட நோக்கத்திற்கு சவாலாக இருந்ததுடன், அப்பகுதி பறிபோவதைத் தடுக்கவும் முனைந்திருக்கின்றோம்.

## சிலாவததுறை முகாம் சூழல்:–

முட்பற்றைக் காடுகளையும் உலர்நிலத்தையும் இதன் காரணமாக குறுகியதும், நீண்டதுமான வெளிகளையும் கொண்ட இடம் தான் சிலாவத்துறை.

இராணுவமுகாமின் பின்புறம் (மேற்கு) கடலையும், மிகுதி 3 புறங்களும் பொட்டல் வெளிகளையும், பற்றைக்காடுகளையும் கொண்டிருக்கின்றது.

ஒரு இராணுவத் தாக்குதலின் வெற்றியைத் தீர்மானிப்பதில் புறச்சூழலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

சிலாவத்துறையின் புறச் சூழல் எதிரிக்குச் சார்பாகவும், எமக்குப் பாதகமானதாகவுமே இருந்தது. உதாரணத்திற்கு யாழ் கோட்டையானது எதிரிக்கு எவ்வளவு தான் பலமானதும், பாதுகாப்பானதுமாக இருந்த நிலையிலும் கூட கோட்டையின் சுற்றுச் சூழல் எமக்கும் சார்பானதாகவுமே இருந்தது.

உயர்ந்து நீண்டு கிடந்த கட்டடங்களும், ஆழம் குறைந்த ஒரு கடல் ஏரியும் ஒரு முற்றுகைப்போருக்கு துணைசெய்திருந்தன.

இதனால் எந்த நேரமும் எதுவும் நடைபெறலாம் என்ற பீதியிலேயே, கோட்டை முகாம் சிக்குண்டு கிடந்தது. ஆனால், சிலாவத்துறைமுகாம் அப்படியான சுற்றுச் சூழலைக் கொண்டிருக்கவில்லை. ஒரு முற்றுகைப் போருக்குச் சார்பான நிலையில் முகாமின் சுற்றாடல் இருக்கவில்லை. எனவே, தான் இந்த 4 நாள் போர் துவங்கும்வரை சிலாவத்துறை முகாம் எமது முற்றுகைக்குள் இருக்கவில்லை.

## படை நடாத்துகைக்கான ஆயத்தங்கள்:–



**சவப்பெட்டிகளுடன் தான் நாங்கள் சண்டைக்குப் போகின்றோம்.**

**மன்னார்த் தளபதி – சுபன்–**




எமக்குச் சார்பில்லாத இத்தகைய சூழலைக் கொண்டிருந்த பொழுதிலும் அதனுடைய கேந்திர முக்கியத்துவம் காரணமாக சிலாவத்துறை மீதான ஒரு படை நடாத்துகைக்கு புலிகள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

மன்னார் மாவட்டத்தளபதி சுபனும் இந்தப்போருக்கான முன் தயாரிப்புக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். மன்னார்த் தளபதிக்கு உதவியாக யாழ். மாவட்டத் தளபதி தினேஸ் தலைமையில் பெரியதொரு படையணி மன்னார் வந்திருந்தது.

இந்தத் தயாரிப்புப் பற்றி தளபதி சுபன் கூறுகின்றார். “நாம் இவ்வாறானதொரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப் போகின்றோம் என்பதை சிலாவததுறைப் பகுதி இராணுவத்தினர் அறிந்து விட்டார்கள். ஏனெனில் இப்போருக்குத் தேவையான மேலதிக ஆளணிகளையும் பொருட்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொண்டிருந்தோம். அதே சமயம் கொழும்புக்கான பிரயாணங்களும் நடந்துகொண்டிருந்தது. எனவே பெரிய அளவிலான படை நகர்வுகள் உளவாளிகள் மூலமும், எமது மக்களில் சிலரினது பொறுப்பற்ற செய்திப்பரப்பல்களினாலும் எதிரிக்குத் தெரிய வந்து விட்டது.

நாங்கள் முகாமைத் தாக்க இருந்த தினத்திற்கு இரண்டு நாட்கள் முன்னரேயே உலங்கு வானூர்தி மூலம் சிலாவத்துறை முகாமுக்குள் இராணுவத்தினரும், மேலதிக இராணுவ உதவிகளும் இறக்கப்பட்டன. கடலில் பீரங்கிக் கப்பல்கள் முகாமுக்கு நேரே கொண்டு வந்து கட்டப்பட்டன.”

போர் விமானங்கள் சிலாவத்துறை பகுதி மீது தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களை நடாத்தத்தொடங்கிவிட்டது. அதே வேளை கொண்டைச்சி கொக்குப் படையான், சிலாவத்துறை இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினரும் ஒரு எதிர்த் தாக்குதலுக்குத் தயாராக இருந்தனர்.

அதே சமயம் போரை நாம் தொடங்கமுன்னர் எமது அணி மீது விமானத் தாக்குதலை எதிரி ஆரம்பித்து விட்டான். எனக் கூறிய




தளபதி சுபன் மேலும் தொடர்ந்தார். நான் நினைக்கிறேன் தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதல் தடவையாக ஒரு முகாம் தாக்குதலுடன் கூடிய பாரிய படை எடுப்பை நாம் மேற்கொண்டோம் என்றார்.

### போர் ஆரம்பமாகின்றது:-

19.03.1991 மாலை போருக்குத் தயாரான நிலையில் எமது படையணிகள் சிலாவத்துறைப் பகுதியில் நிலைகொள்ளத் தொடங்கின. சிற்றெறும்புக் கூட்டம் நகர்வதைப்போன்று ஒழுங்காகவும் சுறுசுறுப்புடனும் எமது படையணிகள் நகர்ந்தன. சிலாவத்துறை முகாம் நீண்ட தொரு கடல் எல்லையைக் கொண்டிருந்ததால், கடலிலிருந்து உதவிகள் வந்து சேரவிடாது தடுப்பதற்காகச்சுமார் 5 கி.மீ நீளத்திற்கு இருந்த கடற்கரை வெளியைக் கட்டுப்படுத்தவென எமது அணியொன்று நிறுத்தப்பட்டது.

அதே போன்று சிலாவத்துறை பிரதான முகாமிலிருந்து 6 கி.மீ உள்ளுக்கு கொக்குப்படையான் கொண்டைச்சி முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினர் சிலாவத்துறை இராணுவத்துடன் இணைவதை தடுப்பதற்காக எமது அணியொன்று காவலுக்கு நிறுத்தப்பட்டது. இவர்கள் காடுகளிலும் வெளிகளிலும் காவல் நின்றனர்.

இவைகள் தவிர சிலாவத்துறை முகாமையும் அதன் சுற்றாடலில் இருந்த மினிமுகாம்கள் இரண்டையும் தாக்கி அழிப்பதற்குத் தேவையான படையணிகளும் தயாராக இருந்தன.

### முதல் நாள் போரும், பெண் போராளிகளின் தீரமும்:-



19.03.1991 அன்று மாலை 1:00 மணியளவில் அதனைச் சூழந்து கொண்டு முற்றுகையிடத் தொடங்கினோம். (இதுவரை நாளும் சிலாவத்துறை முகாம் முற்றுகைக்குள் இருக்கவில்லை) 9:15 மணியளவில் பசிலன்கள் ஏவப்பட்டன. எதிர்த் தாக்குதலுக்கு தயாராக இருந்த இராணுவத்தினரை நிலை தடுமாறச் செய்வதற்காக நீண்ட நேரம் பசிலன் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது அதன் பின்னர் மினி முகாம்களை கைப்பற்றும் முயற்சியில் போராளிகள் இறங்கினர்.

மினி முகாம்களில் ஒன்று அமைக்கப்பட்டிருந்த உதவி அரசாங்க அதிபர் விடுதிக்கு முன்னால் உள்ள தென்னந்தோட்டத்தில் இராணுவத்தினர் நிலை எடுத்துக் கிடந்தனர். தாக்குதல் ஒன்று நிகழப் போகின்றது. என்பதை முன்னரே இராணுவத்தினர் அறிந்திருந்ததினால் மினி முகாமைப் பாதுகாப்பதற்காக தங்களது நிரந்தர நிலைகளை விட்டு முன்னே வந்து தூரத்தில் வைத்து சண்டையை ஆரம்பிக்க எதிரிகள் விரும்பியிருந்தார்கள். எனவே மினி முகாமை தாக்கச் சென்ற அணி முதலில் தென்னந்தோட்டத்திற்குள் நிலையெடுத்துக் கிடந்த இராணுவத்துடன சண்டையிட்டு அவர்களைத் தோற்கடித்தபின் மினி முகாமைத் தாக்கத்தொடங்கினர்.

இந்த மினிமுகாம் கைப்பற்றப்படுவது மிகவும் முக்கியமானது. ஏனெனில் சிலாவத்துறை பிரதான முகாமிற்குச் செல்லும் வீதியை வழிமறித்த படி இந்த மினி முகாம் உள்ளது. இதை நாம் கைப்பற்றினால்த்தான் பிரதான முகாமிற்குச் செல்லும் வாசல் திறக்கப்படும். எனவே என்னவிலை கொடுத்தேனும் மினிமுகாமைக் கைப்பற்றுவது என்ற உறுதியுடன் இருந்தோம்.

தாக்குதலுக்குப் பொருத்தமான நேரமாக விமானங்களுக்குக் கண்தெரியாத இரவைத் தேர்ந்தெடுத்தோம். ஆனால், இரவைப் பகலாக்கக் கூடியளவிற்கு இடைவிடாது வானில் வெளிச்சக் குண்டுகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தது. விமானங்களிலிருந்தும் கடலில் நிலை கொண்டிருந்த பீரங்கிகளிலிருந்தும் குண்டுகள் விதைக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

தரையில் எதிரியின் நிலைகளிலிருந்தும் கடுமையான எதிர்ப்புக்களை சந்தித்துக்கொண்டிருந்தோம். எதிரியை நோக்கிப் படிப்படியாக முன்னேறக்கூடிய வகையில் தற்காப்பு அரண்களும் களத்தில் இருக்கவில்லை. இதனால் பல போராளிகள் காயமடைந்து விட்டனர். இவர்களை அப்புறப்படுத்துவதும் கடினமான காரியமாக இருந்தது. எனவே ஒரு திகைப்பூட்டும் நடவடிக்கையைச் செய்து எதிரியை முறியடிக்க அவ்வணித்தலைவன் முடிவெடுத்தான்.

எதிரியன் அரணை நொருக்க நாங்கள், ஏவிய ஒவ்வொரு ஆர்.பி.ஜி ஏவுகணையும் அரணில் பட்டு வெடித்தவுடன் 2 அல்லது 3 வினாடிகளுக்கு அந்த அரணிற்குள் இருக்கும் எதிரியின் துப்பாக்கிகள் ஓய்ந்தே இருக்கும். இந்த நேரத்தைப் பயன்படுத்தி மின்னலென எதிரியின் நினைக்குள் ஓடிச்சென்று அரணிற்குள் வைத்தே எதிரியை மடக்குவது எனத் தீர்மானித்தோம்.

இந்தப் படையணிக்குத் தலைமை வகித்த தோழன் சொல்கின்றான்.

"எனக்கு அருகில் நின்று போரிட்டுக்கொண்டிருந்த இரண்டு பெண் போராளிகளிடமும் மேஜர் ரஞ்சனிடமும் இந்த உபாயத்தை விளக்கினேன். அதன்படி ஆர்.பி.ஜி. ஏவுகணை ஒன்றை எதிரி நிலை மீது ஏவினேன். அது வெடித்துச்சிதறிய அதேகணம் பெண் போராளிகளும், ரஞ்சனும் மின்னலெனப் பாய்ந்து எதிரி அரணிற்குள் சென்றார்கள். இந்தத் திடீர் நடவடிக்கையைக் கண்டு திகைப்படைந்த சிப்பாய்கள் ஆயுதங்களையும் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார்கள்.

கைப்பற்றப்பட்ட அரணுக்குள் இருந்த எதிரியின் ஆர்.பி.டி ரக இயந்திரத் துப்பாக்கி ஒன்றை எடுத்த மேஜர் ரஞ்சன் எதிரியை நோக்கித் தாக்குதலை வேகப்படுத்தினான். அந்த நேரந்தான் ரஞ்சன் எதிரியின் குண்டுபட்டு வீரமரணமடைந்தான்.

இந்த அரணைக் கைப்பற்ற விரைந்த பெண் போராளிகளது வீரத்தையும், செயல் திறனையும் கண்டு உண்மையில் நான் ஆச்சரியப்பட்டேன்" என மினி முகாம் தாக்குதலுக்குத் தலைமை வகித்த அந்தப் போராளி கூறினான்.

குறிப்பிட்ட அந்த அரண் வீழ்ச்சியடைந்ததனால் மினிமுகாம் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

### கரும்புலித்தாக்குதல்:-

சரியாக இரவு 1:00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் விடுதி மினிமுகாம் எமது கைக்குள் வந்துவிட்டது.

இப்போது சிலாவத்துறை பிரதான முகாமிற்குச் செல்லும் பாதை எமது கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது. அந்தப் பாதைக்குக் குறுக்கே போடப்பட்டிருந்த தடைகள் அகற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த இடத்தில் இருந்து சற்றுத் தொலைவில் முள்ளிக்குளம் சிலாவத்துறைப் பாதையில் வெடிமருந்து நிரப்பப்பட்ட வண்டியுடன் தயாராக டாம்போவும் நின்றுகொண்டிருந்தான்.

மினிமுகாம் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்ததை வானில் நின்ற முகாம்களுக்கும் எதிரி அறிவித்து விட்டான். இப்போது கைப்பற்றப்பட்ட மினிமுகாம் எதிரியின் பலத்த குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதனூடாக வண்டியைச் செலுத்த டாம்போவும் தயாராகிவிட்டான்.

கரும்புலிக்கு வழிவிட்டுக் கொடுக்கும் முகமாகப் போராளிகள் தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபடலானார்கள். காயமடைந்தவர்கள் அவசர அவசரமாக அப்புறப்படுத்தப்படுகின்றனர்.

இதேசமயம், சிலாவத்துறைப் பிரதான முகாமைப் பக்கவாட்டில் தாக்கிநெருக்கிக் கொண்டிருந்த எமது குழுவொன்று இன்னமும் தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கவில்லை. காயமடைந்த சக போராளிகளை மீட்டதற்குப்பின் தற்காப்பை எடுப்பதற்காக அவர்கள் போராடிக்கொண்டிருந்தார்கள்.



கரும்புலி மேஜர் டாம்போ
காசிப்பிள்ளை தயாபரன்
மன்னார்
19.03.1991 மன்னார் சிலாவத்துறை ஸ்ரீலங்கா
இராணுவ முகாம் மீதான தாக்குதல்

***மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாவத்துறை இராணுவ முகாமையும், அதன் அயலிலிருந்த சிறிய இராணுவ முகாம்களையும் அழித்தொழித்து சிலாவத்துறைப் பகுதியை சிங்களப் படைகளிடமிருந்து விடுவிக்கும் நோக்குடன் பாரிய படை நடாத்துகை ஒன்றை மேற்கொண்டிருந்தோம்.***

***19-03-1991 அன்று தொடங்கப்பட்ட இந்தப் படை நடாத்துகை 4 நாட்கள் இரவும் பகலும் தொடர்ந்து நடந்தது. மன்னார் மாவட்டத்தின் தென் பகுதியைத் துண்டாடும் நோக்குடன் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சிலாவத் துறை, கொண்டைச்சி இராணுவ வலயத்தை உடைத்தெறியும் முகமாக அந்தப் போர் நடாத்தப்பட்டது.***

***தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப் பெரிய ஒரு போராக அமைந்து விட்ட இச் சண்டைகளில் 79 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.***

***இயற்கையான தற்காப்பு நிலைகள் எதுவுமே இற்ற புவியியல் அமைப்பைக் கொண்ட இப் போர்க்களத்தில், எதிரியினது மும்முனைத் தாக்குதலையும் எதிர் கொண்டபடி போர் வியூகமமைத்து சாவுக்கு மத்தியில் உறுதியுடன் நாம் நடாத்திய போரானது. எதிரியைத் திகைக்கச் செய்துள்ளது.***

***இப்படைநடாத்துகை தொடர்பாகவும், மன்னார் மாவட்டத்தில் நாம் சந்தித்த வெற்றிகளையும் மேலெழுந்தவாரியாகச் சொல்ல விளைகின்றொம்.***

தயாராக வந்த வெடிமருந்து வண்டி இடைநடுவில் நிறுத்தப் பட்டது. கைப்பற்றப்பட்ட உதவி அரசாங்க அதிபர் விடுதி மினி முகாமிலிருந்து சுமார் 100 யார் தொலைவில் வண்டி நிறகின்றது. இதுவொரு அபாயகரமான நிலமை ஆனாலும் யுத்தத்தில் இவ்விதமான கட்டங்களையும் சமாளிக்கத்தான் வேண்டும் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை எதிரியும் ஊகித்திருப்பான். விமானங்கள் மூர்க்கம் கொண்டு தாறுமாறாகக் குண்டகளை வீசின. கடலிலிருந்து பீரங்கி மழை பொழிந்து கொண்டிருந்தது. டாம்போ போகவேண்டிய பாதை எங்கும் ஒரே புகை மண்டலம். அந்தப் புகைக்குள் பிரதான முகாமிற்குப் போகவேண்டிய பாதையை டாம்போ தவறவிடலாம் எனக் கருதிய தோழன் ஒருவன் கைப்பற்றப்பட்ட மினி முகாம் வரை தானும் வந்து பாதை காட்டுவதாகக் கூறியிருக்கிறான். ஆனால், “குறித்த பாதைக்கூடாகவே நிதானத்துடன் நான் செல்வேன் தற்செயலாக ஏதாவது நடந்தாலும் இருவரும் மரணமடையத் தேவையில்லை” எனக் கூறித் தோழனின் வேண்டுகோளை டாம்போ நிராகரித்தான்.

இறுதியில் சுமார் மூன்று மணியளவில் எமது குழுக்கள் அனைத்தும் தற்காப்பு எடுத்த நிலையில் தன்னுடன் நின்ற தோழர்களுக்குக் கை அசைத்துவிட்டு வெடிமருந்து வண்டியுடன் டாம்போ சென்றான். கைப்பற்றப்பட்ட மினி முகாமிலிருந்து திரும்பி நேராகப் பிரதான முகாமிற்குள் செல்ல வேண்டும். ஆனால் மினிமுகாமை அண்மிக்க முன்பே வண்டி இடிமுழக்கத்துடன் வெடித்துச் சிதறியது.

எதிரியின் துப்பாக்கியிலிருந்து வந்த ஒரு ரவை அல்லது கடலிலிருந்து வந்த ஒரு பீரங்கிக்குண்டு அல்லது விமானத்திலிருந்து போடப்பட்ட ஒரு குண்டு இவற்றில் ஏதோ ஒன்றின் தாக்கத்தால் வண்டி வெடித்துச் சிதறிவிட்டது. டாம்போ காற்றுடன் கலந்து விட்டான்.

வெடிமருந்து வண்டி குறித்த இலக்கில் வெடிக்காததினால் சண்டையைப் புலிகள் நிறுத்திவிடுவார்கள் என எதிரி கணித்து இருந்திருப்பான். ஆனால் தற்காப்பு நிலையிலிருந்து மீண்டு வந்த எமது போராளிகள் மீண்டும் உக்கிரமான சண்டையை ஆரம்பித்தார்கள். இரவு விடிந்துகொண்டிருந்தது. இந்தச் சண்டையில் 14 போராளிகள் வீரமரணமடைகின்றனர்.

இரவு முழுவதும் இலக்குத் தெரியாமல் குண்டுகளை வீசிக் கொண்டிருந்த விமானக் கழுகுகளுக்குக் கண்பார்வை தெரியத் தொடங்குகின்றது.

## இராண்டாம் நாள் போர் – மினிமுகாம் கைப் பற்றல்: –

இரவு நாங்கள் விரித்த முற்றுகை வலை விடிந்த பின்னரும் அப்படியே இருந்தது. நான்கு இராட்சத விமானங்களும், இரண்டு அவ்ரோ விமானங்களும் பீப்பாய்க்குண்டுகளை உருட்டி விட ஆறு குண்டு வீச்சு விமானங்கள் நான்கு உலங்கு வானூர்திகள் முற்றுகையில் ஈடுபட்டிருந்த எமது வீரர்கள் மீது இடைவிடாது குண்டுகளாலும், கலிபர் துப்பாக்கிகளாலும் தாக்குதலை நடாத்தின.

மீண்டும், மீண்டும் குண்டுகளை நிரப்புவதற்காக அனுராதபுரம் விமானத் தளத்திற்கு விமானங்கள் பறந்து சென்று வந்தன. உலங்கு வானூர்திகள் தள்ளாடி முகாமில் இறங்கி ஏறிக்கொண்டிருந்தன.

இரண்டு உலங்கு வானூர்திகளும், இரண்டு விமானங்களும் 24 மணி நேரமும் மாறி, மாறி வானில் நின்று குண்டுகளை வீசிய வண்ணமிருந்தன. தொட்ச்சியான சண்டைகாரணமாக சிலாவத்துறை இராணுவத்திற்கு வெடிமருந்துப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது. அத்துடன் காயமடைந்த சிப்பாய்களை அப்புறப் படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இதை நிறைவேற்ற வான் படை முயற்சி செய்தது. 20ஆம் திகதி காலை 10.00 மணியளவில் முகாமின் சுற்றுப்புறத்தில் போர் விமானமும், அவ்ரோ விமானமும் குண்டுவீசிப் பாதுகாப்புக்கொடுக்க ஓர் உலங்கு வானூர்தி முகாமிற்குள் இறக்கப்பட்டது. ஆனால் அடுத்தகணம் நாங்கள் நடாத்திய எறிகணைத் தாக்குதல்களாலும், துப்பாக்கித் தாக்குதல்களாலும் உலங்கு வானூர்தி பாரிய சேதமடைந்த நிலையில் திரும்பிச் சென்றுவிட்டது.

பின்னர் தரை இறங்கும் நோக்கத்தைக் கைவிட்டு வானில் இருந்து வெடிமருந்துப் பொட்டலங்களைப் போடத் தொடங்கினார்கள். ஆனால் கடற்காற்றுக் காரணமாகக் குறித்த இலக்கினுள் அவர்களால் போடமுடியவில்லை. அந்தப் பொட்டலங்களின் பெரும் பகுதி எமது வீரர்களின் கைகளிற்கே வந்து சேர்ந்தன.

ஆகாயமூலம் உதவிகளை வழங்கமுடியாத நிலையில் கடலில் இருந்து சிலாவத்துறை முகாமிற்குத் தேவையானவற்றை வழங்குவதற்கு முடிவு செய்தார்கள். பிற்பகல் 1:00 மணியளவில் இரண்டு பாரிய கப்பல்கள் அக் கடற்பரப்பிற்கு வந்து சேர்ந்தன. கடல்மூலம் துருப்புக்களை இறக்கி சிலாவத்துறை முகாமை பலப்படுத்தும் நோக்கிலேயே அவை வந்து சேர்ந்தன.

### சிலாவத்துறை போர் முனைகள்: –

இந்தப் போரை நாங்கள் முக்கியத்துவமானதும், வெவ்வேறானதுமான நான்கு முனைகளில் நின்று நடாத்திக்கொண்டிருந்தோம்.

1. சிலாவத்துறை முகாம் மீதான போர்முறை (மினி முகாம்கள் உட்பட)
2. கொண்டச்சி, கொக்குப்படையான் இராணுவத்தை வழிமறித்த போர்முனை
3. சிலாவத்துறை கடற் போர்முனை
4. வங்காலை தள்ளாடி போர்முனை

இந்த நான்கு முனைகளில் எதாவது ஒன்று எதிரியால் வெல்லப் படுமாக இருந்தால் போரின் திசை எதிரிக்குச் சார்பானதாக மாற்றமடையும். ஒவ்வொரு போர் முனையிலும் நின்ற எமது வீரர்கள் இந்தப் போர் அறிவை நன்றாக விளங்கி வைத்திருந்தனர். எனவே, தாங்கள் உயிருடன் இருக்கும்வரை தங்களது முனையைத்தாண்டி எதிரியைப் போகவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர்.

கடலில் நிலைகொண்டிருந்த கப்பல்கள் தரையில் எம்மீது ஒரு எதிர்த்தாக்குதலை நடாத்த முயன்று கொண்டிருந்தன.

பி.ப. 4:00 மணியளவில் கடற்கரையில் போர் மேகம் கருக்கொண்டது. கரையை நோக்கிய பலத்த பீரங்கிக் குண்டுகளுக்குள் ஏழு படகுகள் கரைக்குவர முயற்சி செய்தன. கடற்கரைகளில் உருமறைப்பு நிலைகளில் நாங்கள் வைத்திருந்த 50 கலிபர், 30 கலிபர் துப்பாக்கிகளிலிருந்து வீசிய ரவைக்காற்று இந்தப் போர் மேகத்தைக் கலைத்தது.

பின்னர் மீண்டும் 5:30 மணியளவில் மீண்டுமொரு முறை விமானத்தாக்குதல்களின் உதவியுடன் கரையிறங்க முயற்சி நடந்தது. எதிரிக்கு மீண்டும் தோல்விதான் கிடைத்தது. கடற்கரை போர் முனையில் எதிரி நம்பிக்கையை இழந்தான்.

இரண்டாவது இரவு நெருங்கிக்கொண்டிருந்தது. பாடசாலைக் கட்டடத்தில் அமைந்திருந்த மினிமுகாமைத்தாக்கி அழிக்க தயாராகிக்கொண்டிருந்தோம்.

வெளிச்சக்குண்டுகளின் உதவியுடன் விமானங்களும் குண்டுகளை வீசிக்கொண்டிருந்தன.

கடலிலிருந்து ஏவப்படும் பீரங்கிக் குண்டுகள் விரித்து வைத்த குடையைப்போன்ற வடிவத்தில் பிரதான முகாமைச்சுற்றி விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன.

எம்மைப் பின்னுக்குத் தள்ளி விடுவதன் மூலம் மினி முகாமைப் பாதுகாத்துவிடலாம் என்ற நோக்கத்துடன் எதிரி தனது முழுப் பலத்தையும் பிரயோகித்துக் கொண்டிருந்தான்.

இத்தகையை கடுஞ்சமருக்கு மத்தியில் பாடசாலை மினி முகாமுக்குட் புலிவீரர்கள் புகத் தொடங்கினர்.

மினிமுகாமைச் சூழ இருந்த காவல் அரண்கள் அனைத்திலிருந்தும் எண்ணுக்கணக்கின்றி கைக்குண்டகளையும் ரவைகளையும் எதிரி வீசிக்கொண்டிருந்தான்.

அதே சமயம் வானிலிருந்து படையூர்திகள் எமது போராளிகளைப் பின்புறமாக பலமாகத் தாக்கினர். இவற்றிற்கு மத்தியில் தான் புலிவீரர்கள் முகாமுக்குள் புகுந்துகொண்டிருந்தனர்.

நள்ளிரவுக்கு முன்னர் அந்தப் பாடசாலை மினிமுகாமையும் வெற்றிகொண்டு விட்டோம். அங்கிருந்தபடி பிரதான முகாமை இலக்கு வைத்துச் சண்டை தொடர்கின்றது. மீண்டும் இரவு விடிகின்றது.

## மூன்றாம் நாள் போர்: –

ஒரு நாளில் சண்டை முடியுமென எதிர்பார்திருந்த எதிரிக்கு மூன்றாம் நாளும் சண்டை நீடித்தது வியப்பையும், பீதியையும் கொடுத்திருக்கும்.

எனவே தான் அவசரம் அவசரமாகத் தனது முழுப்பலத்தையும் ஒருங்கே திரட்டி ஒரு முக்கு முக்கி எம்மைப் பின்னுக்குத் தள்ளிவிடத் தீர்மானித்தான்.
விடிந்ததும் விடியாததுமான சிலாவத்துறைப் பகுதியில் பாரிய எதிர்த்தாக்குதலைத் தொடுக்க முத்தாய்ப்புக்கள் நடந்துகொண்டிருந்தன.

தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து இரண்டு உலங்கு வானூர்திகள் மூலம் சுமார் 20 தடவைகளுக்கும் மேல் கொண்டைச்சி முகாமுக்குள் கொண்டுவந்து இராணுவத்தைக் குவித்தது.

கடலிலும் மேலதிகமாகப் பாரிய கப்பலொன்று வந்து சேர்ந்தது. இப்போது கடலில் மொத்தம் மூன்று பாரிய கப்பல்களும் சுமார் 10 பீரங்கிப் படகுகளும் பல விசைப்படகுகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவற்றிலிருந்து தரையைநோக்கிக் குண்டுகள் பொழியப்பட்டுக்கொண்டே இருந்தன.

இது இவ்வாறிருக்க கொண்டைச்சியிலிருந்து இராணுவத்தினர் காடுகளுக்கூடாக சிலாவத்துறையை நோக்கி வரத்தொடங்கினர். இவ்விதமான தொரு நகர்வை எதிர்பார்த்தபடி நின்ற எமது படையணி உடனடியாகவே வழிமறித்துச் சண்டையைத் தொடங்கியது.

தன்னை நன்றாகத் தயாரித்து விட்டே வான்படைகளின் பலத்த உதவியுடன் கொண்டைச்சி கொக்குப் படையான் போர் முனையை எதிரி திறந்தான். இந்தப் போர்முனை நீண்ட எல்லையைக் கொண்டதொன்றாகும்.

நாம் அமைத்த தடுப்பு வேலியை உடைத்துக்கொண்டு எந்தப் பக்கத்தாலும் எதிரி சிலாவத்துறை முகாமுக்குள் போகலாம். எனவே கடல், தரை, விமானப்பலத்தை எதிரி முழுமையாகவே பயன்படுத்தினான். இந்தச் சண்டைக்குள் நின்று காயமடைந்த போராளி ஒருவன் இப்படி இதை ஞாபகம் கொள்கின்றான்.

“மழை பெய்யும்போது சோவெனக் கேட்கும் சத்தம் மழை முடியும்வரை இடைவிடாது கேட்டுக்கொண்டிருப்பதைப்போல் டம், டும் என்ற சத்தம் இடைவிடாது தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருந்தது. சிலாவத்துறைப் பகுதி முழுவதுமே புகை மண்டலமாகவே காட்சியளித்தது. மிக அருகில் நின்ற எமது தோழர்களைத் தவிர மற்ற எதையுமே காணமுடியவில்லை. மழைக்

காலங்களில் வானில் விமானத்தை முகில் மறைப்பதைப்போல தரையிலிருந்து கிளம்பிய புகை மண்டலம் விமானங்களை மறைத்தது. அதற்கு மத்தியிலும் காயமடைந்தவர்களை மருத்துவப் பிரிவுத் தோழர்கள் துணிச்சலுடனும் தோழமையுணர்வுடனும் மீட்டபடியிருந்தனர்."

கொண்டைச்சி, கொக்குப்படையான் முனையில் சண்டை மூர்க்கம் பெற்ற அதே சமயம் வங்காலை தள்ளாடி போர் முனையும் திறக்கப்பட்டது. இங்கிருந்து சிலாவத்துறைக்கு இராணுவத்தினர் வர முயன்றனர். விமானப்படையின் பக்கபலம் போதியளவு இவர்களுக்குக் கிடைக்காததினால் அந்தந்த இடங்களில் வைத்து மடக்கித் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இரவு நெருங்கியது மீண்டும் சிலாவத்துறை பிரதான முகாம் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தினோம். விமானங்களும் கடற்படைக் கப்பல்களும் எமது முயற்சிக்கு குறுக்கே நின்று பெரும் சவாலாக அமைந்தபடியிருந்தன. தங்களது குண்டுச் சிறகை விரித்து சிலாவத்துறை இராணுவ முகாம் குஞ்சைப் பாதுகாப்பதற்கு பிரயத்தனப்பட்டன.

பீப்பாய்க் குண்டுகள் எரிகுண்டுகள் தாராளமாக வீசப்பட்டன. முகாமை முற்றுகைக்குள் வைத்திருந்த போராளிகளும் கடற்கரைகளிலும் கொண்டைச்சி முகாமை நோக்கி காடுகளிற்குள் நின்ற போராளிகளும் தீரத்துடன நித்திரையின்றிப் போராடினார்கள். மூன்றாம் நாள் சண்டையில் 17 போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

மூன்றாவது இரவும் விடிகின்றது.

### நான்காம் நாள் போர்:-

மூன்றாம் நாள் போரின் போது கொண்டைச்சி முகாமிலிருந்து புறப்பட்ட நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை எதிர்த்து இன்றும் சண்டை நடந்துகொண்டிருக்கிறது. சிலாவத்துறை இராணுவ முகாம் பகுதியையும் கொண்டைச்சி இராணுவ முகாம் பகுதியையும் பிரித்தபடி வேலிபோல் நின்ற எமது போராளிகள் கடுமையான சண்டையைச் சந்தித்தார்கள். அந்த வேலியை உடைப்பதற்கு விமானங்களும், பீரங்கிகளும் பிரயத்தனம் செய்தன.

கொண்டைச்சிப் பகுதியில் சண்டை கடுமையடைந்தது. அங்கிருந்து முன்னேறிய இராணுவ அணிகள் கடுமையான தாக்குதலைச் சந்தித்த நிலையில் திசை திரும்பி கடற்கரையை நோக்கி நகர்ந்து அங்கிருந்து சிலாவத்துறை முகாமைச்சென்றடைய முயன்றன.

இந்த நிலையில், கடலிலிருந்து துருப்புக்களை இறங்கவிடாது போரிட்டுக்கொண்டிருந்த எமது அணி உடனடியாகத்தனது போர்வியூகத்தை மாற்றியமைத்தது.

ஏற்கனவே கொண்டைச்சியிலிருந்து வந்த இராணுவத்துடன் போரிட்டுக்கொண்டிருந்த எமது அணியுடன் கைகோர்த்தபடி தரைச்சண்டையைத் தொடங்கியது.

சண்டை மேலும் மும்முரம் அடைந்தது. விமானங்கள் நர்த்தனம் புரிந்துகொண்டிருந்தன.

வானில் இருந்து விழும் குண்டுகளைப்பார்த்து அதற்கேற்றபடி நிலையெடுக்கும் சூழலில் போராளிகள் இருக்கவில்லை. அவர்களது பார்வையெல்லாம் முன்னால் இருந்த எதிரிமீதே இருந்தது. இந்நிலையில், வீசப்பட்ட பீப்பாய்க் குண்டகளிற் சில எமது தோழர்களுக்கு மத்தியிலும் அவர்களது தலைக்கு மேலும் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன.

துப்பாக்கி ரவைகள் வீசிறப்படுவதைப்போல் ஏராளமான குண்டுகளும் வானிலிருந்து வீசப்பட்டன.

நண்பகலளவில் 21 புலி வீரர்களில் உயிரற்ற உடல்கள் மீதேறி நாம் அமைத்த போர்வியூகத்தைக் கடந்து கொண்டு எதிரிகள் சிலாவத்துறை இராணுவத்துடன இணைகின்றனர். சிலாவத்துறை முகாமுக்குத்தேவையான ஆளணிகளும், ஆயுதங்களும் சென்றடைகின்றன.

இந்த நிலையில் போரை நாங்கள் முடிவிற்குக்கொண்டு வருகின்றோம். முற்றுகையில் நின்ற போராளிகள் கட்டம் கட்டமாக திரும்பி அழைக்கப்படுகின்றார்கள்.

இந்தப் பெரும் போருக்கு என சிலாவத்துறை முகாம் சூழலுக்கு கொண்டு வந்த எங்களுடைய இராணுவ தளபாடங்களையும் அப்புறப்படுத்தியபடி போர்க்களத்தைவிட்டு அகலத்தொடங்கினோம்.

இந்த நான்குநாள் போரையும் முன்நின்று நடாத்திய யாழ் மாவட்டத் தளபதி தினேஷ் இந்தச் சண்டையைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

"இது போன்றதொரு நீண்டதும் கடுமையானதுமான சண்டையை இதுவரை நான் சந்திக்கவில்லை. யாழ்.கோட்டை முகாம் எமது முற்றுகைக்குள் இருந்த 107 நாட்களிலும் அதன் சுற்றாடலில் வீசப்பட்ட குண்டுகளின் தொகைக்கு இணையாக இந்த நான்கு நாள் போரிலும் சிலாவத்துறையில் குண்டுகள் வீசப்பட்டன."

யுத்த முனையில் நின்றபடி பெண்போராளிகளை வழி நடாத்திய மகளிர்படைப்பிரிவின் துணைத் தளபதி செல்வி ராதா கூறுகையில் -

"கொக்கிளாய், மாங்குளம் சண்டைகள் எங்களுக்கு தரைப் படைச்சண்டை அனுபவத்தை தந்தன. சிலாவத்துறைப் போர் முப்படைகளையும் ஒரே சமயத்தில் எதிர்கொள்ளும் வல்லமையையும் அதற்குரிய அனுபவத்தையும் எமக்கு ஊட்டியுள்ளது. மொத்தத்தில் மகளிர் படை அணி ஒரு படைநடாத்துகைக்குரிய போர் அனுபவத்தைப் பெற்றுவிட்டது" எனக் கூறினார்.

சிலாவத்துறைப் பகுதியின் கேந்திர முக்கியத்துவத்தைப் பற்றி மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கூறுகையில்...

"குடியேற்றவாத நோக்கில் சிலாவத்துறை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. மன்னார் மாவட்டத்தின் தென் பகுதியை கபளீகரம் செய்யும் இனவாத பூதத்தின் பற்கள்தான் சிலாவத்துறைப்பகுதி.

6 கி.மீ. இடைத்தூரம்கொண்ட சிலாவத்துறை - கொண்டச்சி பகுதியை இணைத்து இராணுவ வலயமாக்கிவிட்டு அதன் கீழ்ப்புறத்திலுள்ள தமிழர் பிரதேசங்களைச் சிங்கள மயமாக்குவது தான் சிங்கள அரசின் திட்டம்."

இந்தத்தாக்குதலைத் திட்டமிட்டு தலைமையேற்றுநடாத்திய மன்னார் தளபதி சுமன் கூறுகையில்...

"சண்டைக்குச் செல்லும் போது நாங்கள் ஆயுதங்களுடன் சவப்பெட்டிகளையும் கொண்டுதான் செல்லுகின்றோம்." என்றார்.

விடுதலைப்புலிகள் - சித்திரை — வைகாசி 1991

# சிலாவத்துறை இராணுவம் முகாம் மீதான தாக்குதல் முயற்சி

## 19.03.1991 அன்று 1 ஆம் நாள் போரில் வீரச்சாவடைந்தோர்



20.03.1991 அன்று 2 ஆம் நாள் போரில் வீரச்சாவடைந்தோர்

# சிலாவத்துறை இராணுவம் முகாம் மீதான தாக்குதல் முயற்சி

சசிக்குமார்
வன்னி.

சூரி
வன்னி



கப்டன் மொறிஸ்
(ச. தவராசா)
வரணி, யாழ்ப்பாணம்

லெப் ஜொனி
(ச. சக்திவேல்)
புலோலி,
யாழ்ப்பாணம்

2வது லெப் ரஞ்சித்நாத்தா
(க. குணபாலசிங்கம்)
பளை, யாழ்ப்பாணம்.

2வது லெப் அன்ரனி
(து. அகிலன்)
யாழ்ப்பாணம்.

சிவசங்கர்
(இராசேந்திரகுமார்)
தாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

திவாகரன்
(தா.யோசப்சாள்ஸ்)
அடம்பன்,
மன்னார்.



லெப் நாதன்
(தி. சிவானந்தன்)
பளை,
யாழ்ப்பாணம்.

2வது லெப் சுதா
(தே. மேரிகிழாரா)
வல்வெட்டித்துறை,
யாழ்ப்பாணம்.

2வது லெப் அம்பி
(நா. கனகரஞ்சன்)
புத்தூர்,
யாழ்ப்பாணம்

ஆனோல்ட்
(கி. குகன்)
இரம்பைக்குளம்,
வவுனியா.

மரியநாயகம்
(த. சின்னத்துரை)
புங்குடுதீவு,
யாழ்ப்பாணம்.

லெனின்
வன்னி

21.03.1991 அன்று 3 ஆம் நாள் போரில் வீரச்சாவடைந்தோர்

# சிலாவத்துறை இராணுவம் முகாம் மீதான தாக்குதல் முயற்சி



மேஜர் சதா
(ந. திலீப்குமார்)
வரணி,
யாழ்ப்பாணம்.

லெப் நேதாஜி
(இ.மங்களேஸ்வரன்)
யாழ்ப்பாணம்.

2வது லெப் சுமன்
(மு. கேதீஸ்வரன்)
பூநகரி, மன்னார்

சத்தியமலா
(டே. தேவமலர்)
செங்கலடி,
மட்டக்களப்பு

சோமன்
(வி. ராஜேந்திரன்)
கல்வயல்,
யாழ்ப்பாணம்

மணாளன்
(பா. குணபாலன)
திருக்கேதீஸ்வரம்,
மன்னார்.



கப்டன் அப்பன்
(ச. சிறிதரன்)
துச்சன்தோப்பு,
யாழ்ப்பாணம்.

லெப் கஸ்ரோ
(ந. செந்தூரன்)
யாழ்ப்பாணம்

2வது லெப் நகுதன்
(த. சுதாராஜ்)
செல்வராயன்கட்டு
மன்னார்

வாணி
(சி. சிவராணி)
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்

சுபந்தன்
(செ.லோகேஸ்வரன்)
நவாலி,
யாழ்ப்பாணம்

சங்கர்
(ரவிசங்கர்)
குழுமுனை
மண்டைதீவு





அனித்தா
(வை. உதயரஞ்சனி)
கொக்குவில்,
யாழ்ப்பாணம்

காந்தன்
பாலையூர்,
யாழ்ப்பாணம்.

லெப் சைமன்
(நா. மோகனரூபன்)
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

பீற்றர்
(ச.சிறிஸ்கந்தராஜா)
மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.

காவேரி
(வை. நிரஞ்சினி)
அல்வாய்,
யாழ்ப்பாணம்.

கோணேஸ்
(சி. அன்னலிங்கம்)
புத்தூர்,
யாழ்ப்பாணம்.

கஜா
(த. பவானி)
புன்னாலைக் கட்டுவன்.
யாழ்ப்பாணம்.

### 22.03.1991 அன்று 4 ஆம் நாள் போரில் வீரச்சாவடைந்தோர்

# சிலாவத்துறை இராணுவம் முகாம் மீதான தாக்குதல் முயற்சி



கப்டன் பாஸ்கர் (செ. ரவீந்திரன்) நானாட்டான், மன்னார்.

லெப் சுகந்தன் (இ. பீற்றர்) நெளிவிக்குளம், மன்னார்.

லெப் டெனிக (க. குகதாசன்) மிருசுவில், யாழ்ப்பாணம்

2ம் லெப் காந்தராஜு (நா. ஜெயக்குமார்) பொலிகண்டி, யாழ்ப்பாணம்

மதிப (இ. பத்மலிங்கம்) சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்

உசான் (ச. தேவநாயகம்) பளை, யாழ்ப்பாணம்.



லெப் சுரேந்தர் (கா. பாந்தாத்) முருங்கன், மன்னார்.

லெப் பரணி (செ. தவராஜா) மிருசுவில், யாழ்ப்பாணம்

லெப் றொபேக் (கு. குலமோகன்) அளவெட்டி, யாழ்ப்பாணம்

2ம் லெப் பஸீர் (பி.ஜேசுதாசன் குசை வங்காலை, மன்னார்.

சூரியகுமார் (க.விக்கினேஸ்வரன்) புத்தூர், யாழ்ப்பாணம்

மது (இ. சுரேஸ்) குடத்தனை, யாழ்ப்பாணம்



ஜெமிலான் (இ. நிமலன்) இனாவில், யாழ்ப்பாணம்

ராயு (கு. சிவநாதன்) ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

கலைச்செல்வன் (கு. மணிவண்ணன்) வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

மணிமுடி (பக. கிரிதரன்) அளவெட்டி, யாழ்ப்பாணம்

ரெத்தினம் (அ. மரியநாயகம்) முருங்கன், மன்னார்

பாலசுந்தரம் (பெ. சிவலிங்கம்) தலைமன்னார் மன்னார்.



மதனன் (மு. கமல்காசன்) கச்சாய், யாழ்ப்பாணம்

கலாதரன் (வி. சிவனேசன்) திருக்கோணமலை

பீற்றர் (தெ. தவராஜா) பளை, யாழ்ப்பாணம்

சந்திரகாந்த (கா. ராமு) தம்பலகாமம், திருக்கோணமலை

ஜெரோமி (ந. சகாயராஜா) திருநாவற்குளம், மன்னார்.

சேகரன் (த. ராஜேஸ்வரன்) மூழங்காவில், மன்னார்



சிறி (த. நந்தகுமார்) கண்ணாகம், யாழ்ப்பாணம்.

உத்தமன் (ப. வேலு) தலவாக்கொல்லை, மலையகம்.

விஸ்ணு (க. நித்தியானந்தன்) பருத்தித்துறை, யாழ்ப்பாணம்,

ரவி (பத்திநாதன்) கற்பிட்டி, புத்தளம்.

பரமசிவம் (கி. வசந்தகுலம்) பூநகரி, மன்னார்.

அசோக (மோகனதாஸ்) புதூர், மட்டக்களப்பு.

# 32 ஆம் ஆண்டு வீரவணக்கம்


TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


New
RANGANAS JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில் எங்கும் கண்டிடாத சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery for Lowest Price
1% முதல் தங்க நகை அடைகு சேவை
Markham & Steeles (Yellow Building)
New RANGANAS JEWELLERY 647-947-2864
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com kprranga@hotmail.com


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330
TD Canada Trust | Scotiabank | First National | radius financial
RFA | Equitable Bank | Home Trust | RMG | MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




## தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# திருகோணமலை இன அழிப்பு 12.04.2006



திருகோணமலை மாவட்டம் 1980களிலிருந்து தமிழருக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடரும் கொதிப்பான ஒரு இடமாக இருந்து வந்திருக்கின்றது. இவ்வன்முறைகள் ஊடாக இம்மாவட்டதிதில் செறிவாக வாழ்ந்து வந்த தமிழர் அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரட்டப்பட்டனர். சிறீலங்கா அரசால் வெளியிடப்பட்ட தீவின் மக்கள் பரவல் சார்ந்த புள்ளிவிபரங்கள் இதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இதே போல் 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களின் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதன்போது 10 தமிழ்மக்கள் உட்பட 15பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 50பேர் படுகாயமடைந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காயப்படுத்தப் பட்டதுடன் பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் எரித்து அழிக்கப்பட்டன.

1983, 1987ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிகமோசமான வன்முறையாக இது கருதப்படுகின்றது. 2006 ஏபபிரல் 12ஆம் நாள் மாலை 4 மணியளவில் திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியிலுள்ள தேங்காய்க் கடைக்கு முன்பாக குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஐந்து சிங்களவரும் கொல்லப்பட்டனர். இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு முன்னரே மூன்று லொறிகளில் சிங்களக்காடையர்கள் திருகோணமலை நகரக்குள் கொண்டு வரப்பட்டதை தமிழர்கள் கண்டனர். இச்சிங்களகாடையர்கள் தமிழருக்குச் சொந்தமான கடைகளை கொள்ளையடித்தபின் இக்கடைகளுக்கு தீயூட்டினர். இதனால் திருகோணமலை நகரிலிருந்து பெரிய புகைமூட்டம் எழுவதைக் காணக்கூடியதாக இருந்தது. விரைவில் தமிழர் மேலான தாக்குதல்கள் ஆரம்பித்தது.

இத்தாக்குதல்களுக்கு துவக்குகளும் கத்திகளும் உபயோகப்படுத்தப்பட்டன. ஏப்பிரல் மாதப் புதுவருடக் கொண்டாட்டத்திற்காக பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நகருக்கு சென்றிருந்த பல தமிழர் இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

வன்முறைகள் நடைபெறுவதை அங்கு நிலைகொண்டிருந்த பல இலங்கை இராணுவததினர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சுதுபண்டா, 39
02. அந்தோனிராஜ் கீதநடனி, 33
03. சந்திரா மத்துவஸ், 50
04. கசுன் சமந்தா, 23
05. கந்தசாமி திரவியன், 56
06. அசங்கா மிலான், 21
07. சுசந்தா, 20
08. ரில்வான், 36
09. செல்வராஜா, 44
10. மயூரா பெதிகே சிவமணி, 30
11. பரூக், 55
12. ராச்மி டிலராங்கி, 08

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)









# தமிழர்களைத் திசை திருப்ப முயலும் குறுந்தேசியவாதிகள்!

பழ. நெடுமாறன்

15.03.2023

**இன உணர்வுக்கும்..**
**வெறிக்கும் வேறுபாடுண்டு..**
**விரும்பி வளர்த்தாலும்..**
**வெறி பிடித்து விட்டால்..**
**வீட்டினுள் சேர்ப்பருண்டோ..**
**திசைமாறிப் பாயும்**
**அம்புகள்...**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 1892ஆம் ஆண்டு முதன்முதலாகத் தொடங்கப் பட்டது. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வாறு இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து மாநிலங்களிலும், ஒன்றிய ஆட்சிப் பகுதிகளிலும் இந்தக் கணக்கெடுப்புத் தவறாமல் நடைபெற்று வருகிறது. 15ஆவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011 ஆம் ஆண்டில் நடத்தப்பெற்றது. அதற்குப் பின்னர் 2021 ஆம் ஆண்டில் நடைபெறவேண்டிய கணக்கெடுப்பு கொடிய தீநுண்மி தொற்று நோயின் காரணமாகத் தள்ளிப்போடப் பட்டுள்ளது.

இக்கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் தமிழ் பேசுவோரின் எண்ணிக்கை 6,37,53,997 ஆகும். இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை 52,72,884 ஆகும். இதில் புதுச்சேரி மாநில தமிழர்களின் எண்ணிக்கையான 11,00,976ஐ கழித்தால் மீதமிருக்கும் 41,71,908 தமிழர்கள் பிற மாநிலங்களில் வசிக்கிறார்கள். 12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த எண்ணிக்கை மேலும் பெருகியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

**மாநிலங்கள் – தமிழ் பேசுவோர்**

சம்மு-காஷ்மீர்- 14,728, இமாச்சல்- 1,038, பஞ்சாப்- 10,389, சண்டிகர்- 5,579, உத்தரகாண்ட்- 2,584, அரியானா- 12,658, டெல்லி- 82,719, இராசசுத்தான்- 8,939, உத்தர பிரதேசம்- 14,444, பீகார்- 986, சிக்கிம்- 762, அருணாசலப் பிரதேசம்- 1,246, நாகலாந்து- 1,127, மணிப்பூர்- 1,657, மிசோரம்- 306, திரிபுரா- 929, மேகாலயா- 913, அசாம்- 5,229, மேற்கு வங்கம்- 15,930, சார்க்கண்ட்- 10,061, ஒடிசா- 6,155, சத்தீசுகர்- 10,334, மத்திய பிரதேசம்- 20,544, குசராத் - 40,072, டையூ டாமன்- 320, தத்ரா நாகர் ஐவேலி- 739, மகாராட்டிரா- 5,09,887, ஆந்திரா- 7,13,848, கர்நாடகா- 21,10,128, கோவா- 6,947, இலட்சத்தீவுகள்- 364, கேரளா- 5,02,516, புதுச்சேரி- 11,00,976, அந்தமான் நிக்கோபர் தீவுகள் - 57,830

**உலக நாடுகளில்**

இந்தியாவின் பிற மாநிலங்களில் மட்டுமல்ல, பிற நாடுகளிலும் ஏராளமான தமிழர்கள் பிழைப்பதற்காகச் சென்று குடியேறி வாழ்கிறார்கள். நாடு வாரியாக அவர்களின் எண்ணிக்கை விவரம்:

ஆசுதிரேலியா- 75,000, இந்தோனேசியா- 50,000, கனடா- 2,00,000, சிங்கப்பூர்- 1,80,000, சுரினாம்- 1,00,000, சுவிட்சர்லாந்து- 60,000, டென்மார்க்- 15,000, தாய்லாந்து- 10,000, தென்னாப்பிரிக்கா- 6,50,000, நியூசிலாந்து- 18,000, நெதர்லாந்து- 12,000, நார்வே- 10,000, பிரான்சு- 50,000, பிரிட்டன்- 3,00,000, பிஜி- 1,10,000, பெல்ஜியம்- 9,000, மலேசியா- 18,00,000, மியான்மர்- 3,00,000, மொரீசியசு- 1,15,000, கிரினிடாட் - ரொபாக்கோ- 1,00,000, ஜமைக்கா- 25,000, செர்மனி- 40,000, அரேபிய நாடுகள்- 56,000, ரீயூனியன் - 4,00,000, மேலும் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் 10,000த்திற்கும் குறைவான எண்ணிக்கையில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இலங்கையின் பூர்வீகத் தமிழர்கள் எனப்படும் ஈழத் தமிழர்கள் (ஏதிலிகளாக வெளிநாடுகள் சென்றவர்கள் மற்றும் போரில் மாண்டவர்கள் உட்பட) 50,00,000 பேர்களும், மலையகத் தமிழர்கள் எனப்படும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் 12,00,000பேர்களுக்குமேல் வாழ்கிறார்கள்.

பிழைப்புத்தேடி வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கி மக்கள் செல்வதும் போர், பஞ்சம், மதக்கலவரம் காரணமாகப் புலம் பெயர்வதும் உலகெங்கும் நடைபெறுகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கை, பர்மா, மலேசியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளை அடக்கி ஆண்டபோது இந்நாடுகளில் தேயிலை, காப்பி, கொக்கோ, ரப்பர் போன்ற பணப் பயிர்களை வளர்த்து செல்வத்தைக் குவிக்கவும், சுரங்கங்களைத் தோண்டி கனிம வளங்களை சூறையாடுவதற்கும் அவர்களுக்குக் கடும் உழைப்பாளியான மக்கள் தேவைப் பட்டனர். அந்த வகையில்தான் தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்பட்ட சாதிகளைச் சேர்ந்த தமிழர்களை ஆசை வார்த்தைகளைக் கூறி அந்நாடுகளுக்குக் கப்பல் கப்பலாகக் கொண்டு சென்றனர். இப்படி கொண்டு செல்லப்பட்ட மக்கள் தங்களது கடும் உழைப்பின் விளைவாக அந்நாடுகளின் பொருளாதாரத்தை வளமாக்கினார்கள். எடுத்துக்காட்டாக, இலங்கையின் ஒட்டுமொத்த தேசிய வருமானத்தில் 60% வருமானம் ரப்பர் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களான தமிழர்கள் மூலம் கிடைத்து வருகிறது. அதைப்போலத்தான் மற்ற நாடுகளிலும் தமிழர்கள் தங்கள் உழைப்பினால் அந்நாடுகளை செழிக்கச் செய்தனர்.

**வளங்கொழிக்கச் செய்தவர்களை விரட்டிய கொடுமை**

1948ஆம் ஆண்டு இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலைப் பெற்ற பிறகு, இலங்கை குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின்படி இந்திய வம்சாவழித் தமிழர்களின் குடியுரிமைப் பறிக்கப்படும் அபாயம் உருவாயிற்று. உடனடியாக அப்போதைய சென்னை மாகாண சட்டமன்றத்தில் "ஐந்தாண்டுகள் தொடர்ந்து இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் அனைவருக்கும் அந்நாட்டின் குடியுரிமை எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்பட வேண்டும் என்றும், இலங்கை வம்சாவழித் தமிழருக்கும், சென்னை மாநிலத்தில் உள்ள அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்குமிடையே எவ்விதத் தங்குதடையும் இல்லாத உறவும், போக்குவரத்தும் நீடிக்க வகை செய்ய வேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1952ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்பாக இந்திய வம்சாவழித் தமிழர்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன. இதைக் கண்டித்து சென்னை மாகாண சட்டமன்றத்தில் 12-05-1952இல் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மனித உரிமைகள் மீறலாக இது வர்ணிக்கப்பட்டது.

வாக்குரிமைப் பறிக்கப்பட்டதை எதிர்த்து இலங்கை-இந்திய காங்கிரசு நடத்திய அறப்போராட்டத்திற்கும் சென்னை சட்டமன்றம் ஆதரவு அளித்தது. அதுமட்டுமல்ல, அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள தமிழ்நாட்டிலிருந்தும் ஏராளமானவர்கள் செல்வதற்குத் தயாரானார்கள். அனைத்துக் கட்சிகளும் போர் முரசு கொட்டின. ஆனால், அவர்கள் அவ்வாறு செல்வதற்கு இந்திய அரசு அனுமதிக்கவில்லை.

1953ஆம் ஆண்டு இந்திய தலைமையமைச்சர் நேரு, இலங்கை தலைமையமைச்சர் சேன நாயகா ஆகியோருக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, "நான்கு இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்குக் குடியுரிமை அளிக்கப்படும் என்றும், இரண்டு இலட்சம் பேருக்கு நிரந்தரமாக வாழ்வோர் அனுமதி அளிக்கப்படும் என்றும், மீதமுள்ள மூன்று இலட்சம் பேருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டு அவர்கள் இந்தியாவிற்குத் திரும்ப அனுப்பப்படும் திட்டத்தை" இலங்கை அரசு முன் வைத்தது. ஆனால் இந்திய தலைமையமைச்சர் நேரு இதை ஏற்கவில்லை. மூன்று இலட்சம் தமிழர்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டால், மலேசியா, பர்மா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் ஏராளமான இந்திய வம்சாவழி மக்களைத் திரும்ப ஏற்றுக்கொள்ள நேரிடும் எனக் கருதினார்.

இலங்கையில் குடியுரிமைப் பெற்ற இந்திய வம்சாவழியினருக்குத் தனியான வாக்காளர் பட்டியல் முதல் பத்து ஆண்டுகளுக்கு இருந்துவரும் என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டது வியப்புக்குரிய ஒன்றாகும். இது தலைமுறை தலைமுறையாக இலங்கையின் வளத்திற்குத் தங்களுடைய உழைப்பை அளித்த மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகமாகும்.

இந்திய வம்சாவழி மக்களை இந்தியா திரும்பப் பெற்றுக் கொள்வதை நேரு ஏற்க மறுத்த போதிலும், அவருக்குப் பின் தலைமையமைச்சரான லால்பகதூர் சாஸ்திரி 1964ஆம் ஆண்டில் இலங்கை தலைமையமைச்சர் திருமதி பண்டார நாயகாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, 5,25,000 மலையகத் தமிழர்களை இந்தியா திரும்பப் பெற்றுக்கொள்ளும் என உடன்பாடு செய்தார். அன்றைய தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தனர். 1974ஆம் ஆண்டில் தலைமையமைச்சராக இந்திராகாந்தி அம்மையார் இருந்த போது இந்திய - இலங்கை செய்துகொண்ட உடன்பாட்டின்படி மேலும் 1,00,000 மலையகத் தமிழர்களை இந்தியா திரும்ப எடுத்துக்கொண்டதோடு மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத்தீவையும் இலங்கைக்குத் தாரை வார்த்தது. இவ்வாறு தொடர்ந்து மலையகத் தமிழர்களுக்கு இந்திய அரசு துரோகம் இழைத்தது என்பது வரலாற்றில் மறைக்க முடியாதபடி பொறிக்கப்பட்டுவிட்டது.

**பிற நாடுகள்**

மலேசியா, சிங்கப்பூர், பிஜி தீவுகள், மொரீசியசு, தென்னாப்பிரிக்கா, தென்அமெரிக்க நாடுகளில் ஒன்றான கயானா மற்றும் தீவுகளில் ஏராளமான தமிழர்கள் பிழைப்பதற்காகச் சென்று குடியேறியுள்ளனர். சுமார் ஐந்து தலைமுறைகளுக்கு மேலாக அந்நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். உடல் உழைப்பு ஒன்றே நம்பி இந்நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் அங்கு எத்தகைய நிலையில் வாழ்கிறார்கள் என்பது பற்றிகூட தாய்த் தமிழகம் எண்ணிப் பார்த்ததில்லை. அவர்களின் நிலைக் குறித்து அக்காலத்தில் பாரதி மனமுருகிப் பாடிய ஒரு பாடலில் பின்வருமாறு கூறுகிறான்-

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவு மழகுங் கருதியும்,
'எல்லையொன் றின்மை' யெனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலு
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழச்
சாதியை "யமரத் தன்மைவாய்ந்தது" என்று
றுறுதிகொண்டிருந்தேன். ஒருபதினாயிரஞ்
சனிவாய்ப் பட்டுந் தமிழச் சாதிதான்
உள்ளுடை வின்றி யுழைத்திடு நெறிகளைக்
கண்டென துள்ளம் கலங்கிடா திருந்தேன்.
ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலுந்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய
தமிழச் சாதி, தடியுதை யுண்டும்

முக்கிய அறிவித்தல்
தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203

காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதந்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாங் கேட்டு மெனதுள மழிந்திலேன்.

திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பன் போன்ற உலகின் மிகச்சிறந்த புலவர் பெருமக்களின் வழிவந்த தமிழினம் இன்று உலக நாடுகள் பலவற்றிலும் புலம்பெயர்ந்து சென்று துயரச் சேற்றில் சிக்கிச் சீரழிவதைக் கண்டு மனம் நொந்து பாரதி "விதியே! விதியே! தமிழச் சாதியை என் செய்ய நினைத்தாய் எனக்கு உரையாயோ" எனப் பாடினான்.

ஆனால் இந்த மக்கள் தங்களது சொந்த முயற்சியினால் அடிமை வாழ்விலிருந்து விடுதலைப் பெற்று தாங்கள் வாழும் நாட்டின் மக்களது அன்பினையும், மதிப்பினையும் பெற்று சிறிது சிறிதாக உயர்ந்து இன்று எந்த நாடுகளுக்கு அடிமைகளாக சென்றார்களோ, அதே நாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, அதிகாரிகளாக, வணிகர்களாக, தொழிலதிபர்களாக வளம்பெற்று விளங்குகிறார்கள். அவர்களின் இந்த உயர்வுக்கும், வளமான வாழ்விற்கும் தமிழ்நாடோ, இந்தியாவோ எந்தவிதத்திலும் உதவவில்லை. ஆனாலும் அந்த மக்கள் இன்னமும் தாய்த் தமிழகத்தை மறந்துவிடவில்லை. உளமார நேசிக்கிறார்கள். தங்களது வாழ்க்கையில் ஒருமுறையாவது தாய்த் தமிழ்நாட்டின் மண்ணை மிதிக்கவேண்டும் என கனவு காண்கிறார்கள்.



**உண்மை என்ன?**

வடமாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு கல்வி, சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 80.09% மக்கள் எழுத்தறிவுப் பெற்றவர்கள். பள்ளிப் படிப்பு வரை இலவச கல்வி அளிக்கப்படுவதால் கல்லூரியில் சேர்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவின் தேசிய விகிதத்தைவிட, இரண்டு மடங்கு அதிகமானதாகும். முனைவர் பட்டம் பெறுவோர் விகிதத்திலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த நூறு கல்லூரிகளில் மூன்றில் ஒரு பங்கு கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளதாக தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்புக் கூறுகிறது. மருத்துவம், பொறியியல் போன்றவற்றுக்கான கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் தமிழ்நாட்டில் அதிகம் உள்ளன. எனவே, இங்கு படித்துப் பட்டம் பெற்ற ஏராளமான மருத்துவர்களும், பொறிஞர்களும் பிற நாடுகளுக்குச் சென்று வேலை பார்த்து தமிழகத்தில் உள்ள குடும்பத்தினருக்கு பணம் அனுப்புவதின் மூலம் அந்நியச் செலாவணி நமக்கு அதிகம் கிடைக்கிறது. அதைப்போல, சுகாதார வசதிகள், தனிநபர் வருமானம் ஆகியவற்றிலும் தமிழகம் வடமாநிலங்களைவிட முன்னேறி உள்ளது. ஆண்டுதோறும் உயர்கல்விக் கற்பதற்காக ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்குச் செல்கின்றனர். அதைப்போல, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களைத் தேடிவந்து கல்வி கற்கின்றனர். இந்நாடுகளைச் சேர்ந்த ஏராளமானவர்கள் மருத்துவம் பெறுவதற்காகத் தமிழகத்தைத் தேடி வருகின்றனர்.

கல்வி வளர்ச்சி அதிகம் இருப்பதால் தமிழ்நாட்டில் உடல் உழைப்புத் தொழில் செய்வதற்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, குடும்பக் கட்டுப்பாட்டு முறை தமிழகத்தில் வெற்றிகரமாக செயல்படுவதால் நமது பிறப்பு விகிதம் குறைந்துள்ளது. இவற்றின் காரணமாகவும் உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான பற்றாக்குறை தமிழ்நாட்டில் உள்ளது.

**வட தொழிலாளர்**

வட இந்திய தொழிலாளர்கள் சுமார் 6 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் உடல் உழைப்புத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். குறைந்த ஊதியத்திற்கு நாளொன்றுக்கு 12மணி நேரம் உழைக்க வைக்கப்படுகிறார்கள். பணி பாதுகாப்பு அவர்களுக்கு அறவே இல்லை. தொழிலாளர் நலச் சட்டங்கள் எதுவும் அவர்களுக்கு உதவுவதில்லை. வறுமையின் காரணமாகக் குடும்பங்களை விட்டுப் பிரிந்து தமிழ்நாட்டிற்கு வந்து மோசமான வாழ்விடங்களில் தங்கி வேலை செய்யும் அவர்களுக்கு எதிராக தமிழ்நாட்டில் வெறுப்புணர்வு சிலரால் விதைக்கப்படுகிறது. இத்தகையவர்களுக்குத் தொலைநோக்கோ அல்லது மனித நேயமோ அறவே இல்லை. குறுகிய அரசியல் ஆதாயங்களுக்காக இவர்கள் குறுந்தேசியவாதம் பேசுகிறார்கள். குறுந்தேசியவாதம் என்பது பாசிசத்தில் போய் முடியும்.

இட்லர், செர்மனியில் வாழும் யூதர்கள் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த செமிட்டிக் (Semitic) இன மக்களுக்கு எதிரான வெறியை கிளப்பினார். செர்மானியர்கள் மட்டுமே மிகத் தூய்மையான ஆரியர்கள் என்றும், மற்றவர்களெல்லாம் விரட்டியடிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் பேசியதோடு நிற்கவில்லை. ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிய பிறகு இம்மக்களுக்கு எதிராக இனப்படுகொலையை நடத்தினார். இரண்டாம் உலகப் போரின் போது ஏறத்தாழ 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்களும், பிற மக்களும் படுகொலை செய்யப்பட்டார்கள். இட்லரின் இந்த குறுந்தேசியவாதம் பாசிசத்தை நிலைநாட்டுவதற்கு வழி வகுத்தது. அதன் விளைவை செர்மானியர்கள் அனுபவிக்க நேர்ந்தது. இதிலிருந்து அவர்கள் மீண்டு எழுவதற்கு 50 ஆண்டுகளுக்கு மேலாயிற்று.

மேலும் தமிழ்நாட்டில் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்து தமிழகத்தையே தங்களது தாயகமாகக் கொண்டுள்ள தெலுங்கர்கள், கன்னடர்கள், மலையாளிகள், உருது பேசுகிற முசுலீம்கள், சௌராட்டிரர் போன்ற மொழிச் சிறுபான்மை இனத்தவர்கள் மீதும் குறுந்தேசியவாதிகள் பாய்கிறார்கள். அவர்களை பகைவர்கள் போலக் கருதுவதும், அவர்களுக்கெதிராக வெறியூட்டும் வகையில் பேசுவதையும், எழுதுவதையும் தொடர்ந்து செய்கிறார்கள்.

**தமிழ்நாட்டில் வாழும் பிற மொழிப் பேசுபவர்களின் எண்ணிக்கையும்**

தமிழகத்தின் மக்கள் தொகையில் அவர்களின் சதவிகிதமும் கீழே தரப்பட்டுள்ளனடு:-

தமிழ்நாட்டில் தெலுங்கு மொழி பேசுகிற மக்களின் எண்ணிக்கை - 42,34,302 - 5.87%, கன்னடம் - 10,45,238 - 1.45%, மலையாளம் - 5,57,705 - 0.77%, சௌராட்டிரர் - 9,02,621 - 1.25%, உருது - 12,64,537 - 1.75% மொத்தம் - 80,04,403 - 11.09%

இவர்களை தவிர, பழங்குடி மக்கள் பேசுகிற மொழியினர் மற்றும் இந்தியாவின் பிற மொழிகளைப் பேசுபவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணத்தகும் அளவிற்கு மிகமிகக் குறைவாகும்.

**ஒரே மொழி – நாடு இல்லை**

ஒரே மொழிவழித் தேசிய இன மக்கள் மட்டுமே தனித்து வாழும் ஒரு நாடு உலகில் எங்கும் அறவே இல்லை. உலக நாடுகள் எல்லாவற்றிலும் பெரும்பான்மை தேசிய இன மக்களும், சிறுபான்மை தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களும் கூடி வாழ்கிறார்கள். பெரும்பான்மை தேசிய இனத்தைச் சேர்ந்த மக்கள், சிறுபான்மை இன தேசிய மக்களுக்குரிய உரிமைகளை அளித்தும், அவர்களை அரவணைத்தும் வாழ்கிறார்கள். சிறுபான்மை தேசிய இன மக்களும் தாங்கள் வாழும் நாட்டையே தங்களின் தாயகமாகக் கருதி பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகிறார்கள். மேலும் அந்த மக்கள் தமிழர்களுடன் இரண்டறக் கலந்து வீட்டு மொழியாகத் தங்கள் மொழியையும், நாட்டு மொழியாகத் தமிழையும் ஏற்று வழங்கி வருகிறார்கள்.

தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் பல்வேறு வகையில் சிறப்பாக தொண்டு புரிந்த தொண்டாற்றி வருகிற பல அறிஞர்கள் சிறுபான்மை மொழிப் பேசுகிற தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இத்தாலி நாட்டிலிருந்து சமயப் பரப்புரைக்காக தமிழ்நாட்டிற்கு வந்த அறிஞர் ஜியுபோப், இத்தாலியிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த பெஸ்கி என்னும் வீரமா முனிவர், அயர்லாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த அறிஞர் கால்டுவெல் போன்றவர்கள் தமிழின் பெருமையையும், தமிழ் இலக்கியங்களின் சிறப்பையும் உலகறியச் செய்தார்கள் என்பதை ஒருபோதும் நாம் மறக்க முடியாது. தமிழ்நாட்டில் நிலவிய சமண - பௌத்த சமயங்கள், அவர்கள் படைத்த தமிழ் இலக்கியங்கள், அவர்களின் வரலாறு ஆகியவற்றை ஆய்ந்து முதன்முதலாக நூல்களாகப் படைத்துப் பெருமைக்குரிய மயிலை சீனி. வேங்கடசாமி ஒரு தெலுங்கர். அதைப்போல கீழடி ஆய்வில் முனைந்து ஈடுபட்டு வைகைக்கரை தமிழர் நாகரிகம் மிகத் தொன்மையான கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதைக் கண்டறிந்து தமிழரின் பெருமையை உலகறியச் செய்த முனைவர் அமர்நாத் இராமகிருட்டிணன் அவர்கள் சௌராட்டிர மொழிப் பேசுபவர் என்பதை உணரவேண்டும். இத்தகைய அறிஞர்களுக்குத் தமிழினம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

**வேட்டைக் காடாகும் தமிழ்நாடு**

தமிழ்நாட்டின் தொழில், வணிகம் போன்றவற்றில் வடநாட்டைச் சேர்ந்த மார்வாடிகளும், குசராத்திகளும், வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் ஆதிக்கம் செலுத்திவரும் நிலையும் அவர்களிடம் தமிழ் வணிகர்களும், தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் கைகட்டி சேவகம் புரியும் நிலை நீடிக்கிறது. இத்தகைய பேராபயத்தை தமிழக மக்களுக்கு உணர்த்தி அவர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, குறுந்தேசியவாதிகள் உண்மையான பிரச்சனையை மறைத்து திசைத்திருப்புவதில் முனைந்து ஈடுபடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் மார்வாடிகள், குசராத்திகள், மேல்நாடுகளைச் சேர்ந்த பெருந்தொழிலதிபர்கள் ஆகியோரால் தமிழ்நாட்டின் கனிம வளம் சூறையாடப்படுகிறது. தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. நமது பொருளாதாரம் வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்கிறது. இதற்கெதிராகத் தமிழர்கள் ஒன்றுபட்டுப் போராடுவதைத் திசைத் திருப்புவதற்காக வடமாநிலத் தொழிலாளர்களுக்கு எதிரான போராட்டத்தை இந்தக் குறுந்தேசியவாதிகள் நடத்துகிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள இந்திய அரசின் அலுவலகங்களிலும், வங்கி, ஆயுள் காப்பீடு, தொடர்வண்டித்துறை, அஞ்சல் துறை, தகவல் தொடர்புத்துறை, இந்திய அரசின் பல பெருந்தொழில்களான நெய்வேலி நிலக்கரி நிறுவனம், பெரம்பலூர் தொடர்வண்டி உற்பத்தித் தொழிற்சாலை, ஆவடி டாங்கி தொழிற்சாலை, சேலம் எஃகு தொழிற்சாலை, திருச்சி பாரத மிகு மின் நிறுவனம் போன்ற பல பெருந்தொழிற்சாலைகளில் குறைந்த அளவு 75% வேலை வாய்ப்பு தமிழர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் எனப் போராட வேண்டிய மக்களின் கவனத்தைத் திசைத் திருப்பும் வகையில் குறுந்தேசியவாதிகள் செயல்படுகிறார்கள்.

இவர்களின் இச்செயலின் விளைவாக இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழ்ந்துவரும் தமிழர்களுக்கு எதிரான உணர்வைத் தோற்றுவித்து அவர்களை அந்தந்த மாநில மக்கள் வேண்டாதவர்களாகப் பாவித்து அவர்களுக்கு எதிரான போராட்டங்களை நடத்துவதற்குத் தூண்டுவதாகும். குறுந்தேசியவாதிகளின் பொறுப்பற்ற செயல்களின் விளைவாக வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் எதிர்ப்புக் கிளம்பும். வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் அந்தந்த மக்களின் அன்பினையும் மதிப்பினையும் பெற்று அவர்களோடு இணைந்து வளமாக வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு குறுந்தேசியவாதிகள் அநீதி இழைக்கிறார்கள். இவர்களின் பொறுப்பற்றப் போக்கின் விளைவாக பீகார் போன்ற மாநிலங்களிலிருந்து அரசு அதிகாரிகள் அடங்கிய குழுவினர் தமிழ்நாட்டிற்கு வந்து தங்கள் மாநிலத் தொழிலாளர்களின் நிலை குறித்து ஆராயும் சூழ்நிலை உருவானது. உடனடியாக வெளிமாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கும் மற்றும் அவர்களின் அச்சத்தைப் போக்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற் கொண்டது. நல்லவேளையாக வடமாநிலத் தொழிலாளர்களுக்கு எதிராக தமிழ்நாட்டுத் தொழிலாளர்களோ அல்லது மக்களோ இல்லை என்பதையும், தங்கள் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு எத்தகைய அபாயமும் நேரவில்லை என்பதையும் பீகார் அரசு அதிகாரிகள் உணர்ந்து திரும்பிச் சென்றுள்ளனர்.

உலகப் பெரும் பணக்காரர்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ள அம்பானி, அதானி போன்ற பெரு முதலாளிகள் தமிழ்நாட்டிலும் ஆழமாகக் கால் பதித்துள்ளனர். தமிழ்நாட்டின் வேளாண்மைத் துறையைகூட அம்பானி விட்டு வைக்கவில்லை. "ரிலையன்ஸ் - பிரெஷ்" என்ற பெயரில் காய்கறி, கனிகள் விற்கும் பெரும் கடைகளை தமிழக நகரங்களில் திறந்துள்ளனர். நகரங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் வாழும் விவசாயிகளுக்குக் கடனுதவி அளித்து காய்கறிகளைப் பயிரிடச் செய்து அவற்றை குறைந்த விலையில் கொள்முதல் செய்து விற்று கொழுக்கின்றனர். இதன் விளைவாக சிறு காய்கறிக் கடைகளை வைத்துப் பிழைத்த தமிழர்களும், வீடு வீடாகக் காய்கறிக் கூடைகளை கொண்டு சென்று விற்று வாழ்ந்த தமிழ்ப் பெண்களும், தங்களின் வாழ்வாதாரத்தையே இழந்து தவிக்கின்றனர். இத்தகைய முதலாளித்துவ முதலைகளின் பிடியிலிருந்து தமிழக விவசாயிகளை மீட்பதற்கு போராடுவதற்குப் பதில் சிறு மீன்களான வடமாநிலத் தொழிலாளர்களுக்கெதிராகப் போராடுவது என்பது பொறுப்பற்ற செயல் என்பது மட்டுமல்ல, மக்களை ஏமாற்றித் திசைத்திருப்பும் செயலாகும். குறுந்தேசியவாதிகளின் உண்மை உருவத்தை தமிழக மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் போராடவேண்டிய களங்களும் சந்திக்க வேண்டிய உண்மை பகைவர்களும் வேறு என்பதை புரிந்துகொண்டு செயல்பட வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
● Replacement (Door & Windows)
● Custom Door & Windows
● Front Door & Patio Door
● Garden Door
● Door & Windows Re-Caulking (Important)
● Painting Doors & Windows
● Basement Separate Entrance Door
● Home Painting
● Spotlights installation
● California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# தமிழரின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தும் உடுத்துறையில் கிடைந்த நாணயம்!

வெளிச்சம் சித்திரை - வைகாசி 2003



யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரிவின் வட எல்லையில் உள்ள கடற்கரைக் கிராமங்களில் உடுத்துறையும் ஒன்றாகும். இக்கிராம மக்கள் 1994ஆம் ஆண்டு கிணறொன்றை வெட்டும்போது எதிர்பாராத விதமாக கிணற்றின் ஆழமான மையப் பகுதியில் மிகப் பழமையான நந்தி விக்கிரகத்துடன், புராதன குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப்படுத்தும் மட்பாண்டங்கள், சங்கு, சிற்பி, கூரை ஓடுகள் மற்றும் செங்கற்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்தனர்..

பின்னர் இதுபற்றிய செய்தி எமக்குத் தெரியப்படுத்தியதன் பேரில் நாம் அவ்வூர் மக்களது ஒத்துழைப்போடு அவ்விடத்தையும், அதன் சுற்றாடல்களையும் ஆராய்ந்து பார்த்தோம். அப்போது சில இடங்களில் மிகப் பழமையான குடியிருப்புக்கள் இருந்ததை அடையாளம் காட்டும் பெருங்கற் காலப் பண்பாட்டிற்குரிய மட்பாண்ட ஓடுகள், கல்மணிகள் மற்றும் பண்டைய காலப் பகுதியில் புழக்கத்திலிருந்த பலதரப்பட்ட நாணயங்கள் போன்றனவற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது. இருப்பினும் 1995இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் தொடர்ந்தும் அவ்விடங்களில் தொல்லியல் ஆய்வினை மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் அந்த ஆய்வின்போது கண்டபிடித்த தொல்பொருட்களைக் குறிப்பாக நாணயங்களை மிக அண்மைக் காலத்தில் மீண்டும் சுத்தம் செய்து ஆராய்ந்து பார்த்தபோது அவற்றுள் சில நாணயங்கள் இதுவரை வரலாற்று வெளிச்சத்திற்கு வராத புதிய வரலாற்று உண்மைகளைத் தருவனவாக இருக்கின்றன. அவற்றுள் “நாக” என்ற பெயர் குறித்து நிற்கும் நாணயத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை இவ்விடத்தில் எடுத்து நோக்கலாம்.

மிகச் சிறிய இச்செப்பு நாணயம் 07 சென்ரி மீற்றர் விட்டமும், 1.5 கிராம் நிறையும் உடையது. இதன் முன்புறத்தில் விளிம்பை ஒட்டி சுவஷ்திகா சின்னமும், இதற்கு கீழே வலப்புறமாக குத்து விளக்கும், இடப்புறமாக பிறைச்சந்திரனும், சூரியனும் இச்சின்னங்களுக்கு மத்தியில் பக்கவாட்டாக இரு மீன் சின்னமும் காணப்படுகின்றன. இவ் விரு மீன் சின்னங்களுக்கு கீழே நாணயத்தின் விளிம்பை ஒட்டியவாறு நான்கு பிராமி எழுத்துக்கள் சிறிதும், பெரிதுமாக பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் எழுத்தமைதி கொண்டு இந் நாணயம் கி.பி.1 - 2ஆம் நூற்றாண்டில் வளியிடப்பட்டிருக்கலாம் எனக் கூறமுடியும். இதில் “நாக” என எழுதப்பட்டுள்ள முதலிரு பிராமி எழுத்தும் தெளிவாக உள்ளன. ஏனைய இரு எழுத்துக்களும் சற்று தேய்வடைந்து இருப்பதால் அதன் வாசகத்தை நிச்சயப்படுத்திக் கூறமுடியவில்லை. அவற்றை இரு எழுத்தாக எடுத்தால் “பூமி” எனவும், ஒரு எழுத்தாக எடுத்தால் ”ஹ” எனவும் வாசித்து நாணயத்தில் உள்ள வாசகத்தை நாகபூமி அல்லது நாகஹ(1)” அதாவது நாகனுடைய நாணயம் எனப் பொருள் கொள்ளமுடியும். ஆனால் தமிழகத் தொல்லியற் பேராசிரியர் சுப்பராயலுவும், இந்திய தொல்லியல் அளவீட்டுத் திணைக்கள முதுநிலைக் கல்வெட்டாய்வாளர் இராசவேலுவும் அதிலுள்ள மூன்றாவது எழுத்தை ”வ” என எடுப்பதே பொருத்தம் எனக் கூறியுள்ளனர்(2). அப்படியானால் நாணயத்தில் உள்ள வாசகத்தை நாகவம்(சம்) எனப் பொருள் கொள்ளமுடியும்.

நாணயத்தின் பின்புறத்தில் வலப்புறமாக விளிம்பை ஒட்டி சுவஷ்திகா சின்னமும், மத்தியில் கிடையான அமைப்பில் ஒரு மீன் சின்னமும், இச்சின்னங்களுக்கு கீழே பிராமி எழுத்தில் பொலம் என்ற தமிழச் சொல்லும் காணப்படுகின்றன. இதில் பொறிக்கப்பட்டுள்ள “பொலம்” என்ற சொல்லுக்கு பொன், பொன்னிறமான காசு, அழகு, சிறந்தது எனப்பல கருத்துக்கள் உண்டு. இச் சொல் சங்க காலம் தொட்டு நாணயத்தோடு தொடர்புடைய பெயராகப் பயன்படுத்தப்பட்டதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதற்கு ஐங்குறுநூற்றில் (310:01) பொலம்பசு பாண்டிற்காசு என்றும், குறுந்தொகையில் (66:4, 148:3) பொலங்கல ஒரு காசு எனவும், பொலஞ்செய் கிண்கிணி காசு எனவும் அகநானுற்றில் (293:7, 315:12) பொலஞ்செய்காசு எனவும்வரும் குறிப்புக்களைச் சான்றாகச் சுட்டிக்காட்டலாம். ஆயினும் இச் சொல் சமகாலத்தில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் அல்லது சங்க கால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் பயன்படுத்தப்பட்டதற்கு சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சமகால இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் இச்சொல் உயர்ந்த என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் தமிழில் “பொலம்“ என எழுதப்படவேண்டிய இச்சொல் அக்கல் வெட்டுக்களில் அதன் பிராகிருத மொழிக்கு ஏற்ப “பொல” என்றே எழுதப்பட்டுள்ளது. இலங்கையில் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் வழக்கிலிருந்த பல தமிழ்ப் பெயர்கள் சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களில் அதன் கல்வெட்டு மொழிக்கு ஏற்ப பிராகிருத மயப்படுத்தப்பட்டிருந்தாலும் அப்பெயர்கள் சமகால நாணயங்களில் தமிழில் எழுதப்பட்டதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதை மேலும் உறுதிபபடுத்துவதாக மேற்குறித்த உடுத்துறை நாணயத்தில் வரும் ”பொலம்” என்ற சொல்லை எடுத்துக் கொள்ளலாம்.

நாணயத்தின் முன்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள “நாக” என்ற பெயர் இவ்விடத்தில் சிறப்பாக ஆராய்ந்து பார்க்கப்படவேண்டிய ஒன்றாகும். கி.பி5ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தென்னாசியாவில் புழக்கத்தில் இருந்த பிராமிக் கல்வெட்டுக்களில் இப்பெயர் பிராகிருத மொழியில் ”நாஹ” என்றே எழுதப்பட்டுள்ளன. ஆனால் விதிவிலக்காக தமிழகத்தில், கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்களிலும், இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட சில பிராமிக் கல்வெட்டுக்களிலும் இப்பெயர் தமிழில் ”நாக” என்றும் ”ணகா” என்றும் எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். அதேபோல் தென்னிலங்கையில் கிடைத்த சில நாணயங்களிலும் இப்பெயர் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இந்த வேறுபாடு இப்பெயருக்கு உரியவர்கள் தமிழர்கள் அல்லது இப்பெயரை எழுதகுயவர்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தவர்கள் எனக் கூறலாம். இவற்றின் அடிப்படையில் உடுத்துறையில் கிடைத்த நாணயத்தை தமிழ் மன்னன் அல்லது தமிழ்ச் சிற்றரசனே வெளியிட்டான் என எடுத்துக் கொள்வதில் எந்த தவறும் இல்லை.

இந்நாணயத்தை தமிழ் மன்னன் வெளியிட்டதாகக் கொள்ளும் போது அவன் எந்த நாட்டைச் சேர்ந்த தமிழ் மன்னன் என்பது முக்கிய கேள்வியாக எழுகின்றது. தமிழகத்தில் அதிலும் குறிப்பாக சங்க காலத் தமிழகத்தைப் பொறுத்தவரை ”நாக” என்ற பெயர் கொண்ட மன்னன் அல்லது வம்சம் நாணயங்களை வெளியிட்டதற்கோ அல்லது நாணயங்களை வெளியிடும் அளவுக்கு அப்பெயர் கொண்ட மன்னர்களது ஆட்சி அங்கு இருந்ததற்கோ இதுவரை எந்தச் சான்றுகளும் கிடைத்ததாகத் தெரியவில்லை. சங்க காலப் பாண்டிய மன்னர்கள் தமது அரச இலட்சனையான மீனைத் தமது நாணயங்களில் பொறித்ததற்கு தமிழகத்திலும், இலங்கையிலும் (கந்தரோடை, பூநகரி, அநுராதபுரம் , அக்குறுகொட) கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் சான்றாக உள்ளன. ஆயினும் அந்த நாணயங்கள் சதுரவடிவில் வடிவமைக்கப் பட்டுள்ளதுடன், நாணயத்தின் பின்புறத்தில் மட்டும் ஒரேயொரு மீன் சின்னம் அதுவும் கோட்டுருவமாகவே பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் உடுத்துறையில் கிடைத்த நாணயம் வட்டவடிவில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் அதன் இரு புறத்திலும் மூன்று மீன்கள் கோட்டுருவத்திற்கு பதிலாக முழு உருவமாக வடிவமைக்கப் பட்டுள்ளதைக் காணலாம். அதேவேளை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் காணப்படும் சின்னங்களை ஒத்த வடிவமைப்பில் தமிழகத்தில் அதிலும் குறிப்பாகச் சங்க காலத்தில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்குச் சான்றுகள், கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையில் இதே வடிவமைப்பில் பல நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதற்கு அவற்றை வடிவமைப்பதற்குப் பயன்படுத்திய சுடுமண் அச்சுக்களே சான்றாகக் கிடைத்துள்ளன. இவை உடுத்துறை நாணயம் இன்னொரு நாட்டிலிருந்து கொண்டுவரப்படாது இலங்கையிலேயே வடிவமைக்கப்பட்ட தென்பதற்கு சிறந்த சான்றாக உள்ளது. இவற்றின் அடிப்படையில் இந்நாணயத்தை இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னனே வெளியிட்டான் எனக் கூற முடியும்.





இந்நாணயத்தை இலங்கைத் தமிழ் மன்னனே வெளியிட்டான்





எனக் கொள்ளும்போது அந்நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள "நாக" என்ற வெயரின் வரலாற்று முக்கியத்துவம் என்ன என்ற கேள்வியும் எழுகின்றது. புராதன இலங்கையில் நாக வம்சத்து மன்னர்கள் ஆட்சி புரிந்ததற்கும், இன்று தமிழர்கள் செறிவாக வாழ்ந்து வரும் பிராந்தியம் பண்டுதொட்டு நாகதீப(ம்) அல்லது நாகநாடு என அழைக்கப்பட்டு வந்ததற்கும் பல சான்றுகள் காணப்படுகின்றன. இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் கி.மு.6ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்தபோது அநுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த பிராந்தியத்தை நாகதீப(ம்) எனவும், அங்கு ஆட்சியில் இருந்த இரு நாகவம்சத்து மன்னர்களுக்கிடையிலான சிம்மாசனப் போராட்டத்தை அவர் தீர்த்து வைத்ததாகவும் கூறுகிறது. அதில் புத்தர் இலங்கை வந்ததாக மகா வம்சத்தில் கூறப்படுவது ஐதீகமாக இருப்பினும், அந்நூல் எழுதப்பட்ட கி.பி. 6 ஆம் நுற்றாண்டில் வடஇலங்கை நாகதீபம் என அழைக்கப் பட்டதையும், அங்கு நாகவம்சத்து மன்னர்களே ஆட்சி செய்தனர் என்பதையும் இச்செய்தி எடுத்துக் காட்டுவதாகக் கூறலாம். இதற்குச் சார்பாக வட இலங்கையில் பெரியபுளியங்குளம் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்கு முற்கட்ட நான்கு பிராமிக் - கல்வெட்டுக்கள் இங்கு நாகச் சிற்றரசர்களது ஆட்சியிருந்ததாகக் கூறும் செய்திகளை ஆதாரமாகக் காட்டலாம். அதேவேளை இக்காலப்பகுதிக்குரிய இன்னொரு பிராமிக் கல்வெட்டு இலங்கையில் "நாகநகர்" என்ற பெயரில் தலைநகள் ஒன்று இருந்ததாகக் கூறுகிறது. பேராசிரியர் இரகுபதி இத்தலைநகர் கந்தரோடையாக இருக்கலாம் எனக் கூறுகிறார். ஆனால் நிக்லஸ் என்ற ஆய்வாளர் இது பதவியாவுக்கு அண்மையில் இருந்த தலைநகள் என்பதற்கு கி.பி.10ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டில் வரும் இதையொத்த இன்னொரு பெயரை ஆதாரம் காட்டுகிறார். கி.பி1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டவரான தொலமியின் குறிப்பில் "நாகதீபோய்" என்ற இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பாளி நூல்களில் குறிப்பிடப்படும் நாகதீபம் என முதலியார் இராசநாயகம் கருதுகிறார் . இக்கூற்றுக்கு மேலும் சான்றாக யாழ்ப்பான மாவட்டத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் 1936ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட கியி3ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனத்தில் வரும் "நாகதீப(ம்)" என்ற பெயரைக் குறிப்பிடலாம்.

சற்றுப்பிற்பட்ட காலத்தில் எழுந்த படையெடுத்த வரலாற்றைச் சுட்டிக்காட்டுகிறது. இதே பாளி நூலில் கி.பி 10ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் ஒருவன் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தியும் காணப்படுகிறது. இப்படையெடுப்பை மேற்கொண்ட தென்னிந்திய மன்னன் முதலாம் பராந்தக சோழனாக இருக்கலாம் என்பதை அவனது 37 ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வரும் "ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பர கேசரிவர்மன்" என்ற சொற்தொடர் உறுதிப்படுத்துகிறது. இக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ள ஈழத்து வெற்றி என்பது நாக நாட்டு வெற்றியை குறிப்பதாகக் கொள்வதற்குப் பல ஆதாரங்களைக் காட்டலாம். இந்த நாகநாட்டு வெற்றியைக் குறிக்கும் வகையில் அவன் "உரக" என்ற பெயரில் (உரக என்ற வடமொழிச் சொல்லுக்கு நாகம், நாக இன மக்கள் என்ற கருத்துண்டு) நாணயங்களை வெளியிட்டான் எனக் கூறலாம். ஏனெனில் இவன் காலத்தில் "நாகதீப" என்ற பெயர் "உரக" எனவும் அழைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி என்னும் இடத்தில் கிடைத்த இவன் காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்று திருகோணமலை நாகநாட்டிற்குரிய இடம் என்பதையும், அங்கிருந்த கிராமம் ("உலாகிரிகம" தமிழில் இதன் பொருள் நாக மலையில் உள்ள கிராமம் என்பதாகும்) சிவன் ஆலயத்திற்கு மானியமாக வழங்கப்பட்டதையும் கூறுகிறது. இந்த ஈழத்து (நாகநாட்டு) வெற்றியை தொடர்ந்தே அவனால் வெளியிடப்பட்ட 15 க்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் "ஈழக்காசு", "ஈழக்கருங்காசு" என்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் இவ்விடத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமாகும்.

வடமொழியில் "நாகதீப" அல்லது "உரக" என அழைக்கப்பட்ட இப்பெயர் தமிழில் "நாகநாடு" என அனுழக்கப்பட்டு வந்துள்ளதையும் காணலாம். பண்டைய தமிழ் இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் நாகநாடு பற்றிய செய்திகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இந்த நாகநாடு இலங்கையில் இருந்த நாட்டையே குறித்திருக்கலாம் என்பதற்கு அவ்விலக்கியங்களில் நாகநாட்டோடு தொடர்புபட்டு வரும் வரலாற்றுச் சம்பவங்கள் சான்றாக உள்ளன. கி.பி .8ஆம் நூற்றாண்டில் பல்லவ இளவரசன் ஒருவன் "நாகநாடு" சென்று அங்குள்ள இளவரசியை மணந்ததாக பல்லவச் செப்பேடு ஒன்று கூறுகிறது. தமிழ் நாட்டில் குடுமியாமலை என்ற இடத்தில் கண்டுபிடித்த கி.பி.1262ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டு ஒன்று சிங்கள அமைச்சன் ஒருவன் பாண்டிய மன்னனிடம் சென்று உதவி கேட்டதன் பேரில் வீரபாண்டியன் என்ற மன்னன் தனது படைகளை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும், அப்படை சிங்கள மன்னனுக்குச் சார்பாக நாகநாட்டின் மீது படையெடுத்து அங்கு ஆட்சி செய்து கொண்டிருந்த சாகவ மன்னனைக் கொன்று அவன் மகனை ஆட்சியில் அமர்த்தியதாகவும் கூறுகிறது. (Puthukkoddai Inscriptions no.366) இக்கல்வெட்டில் நாகநாட்டு அரசினது முக்கிய தலைநகரங்களான திரிகூடகிரியிலும், கோணாமலையிலும் நாகநாட்டு அரச கொடி பறந்து கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளதைக் கொண்டு நாக நாட்டின் எல்லை கிழக்கிலங்கை வரை பரந்திருந்தமை மேலும் உறுதியாகிறது.

மேற்கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த பிராந்தியம் நாகதீபம், நாக நாடு, உரக என வேறுபட்ட மொழிகளால் அழைக்கப்பட்டு வந்துள்ளதையும், அங்கு வாழ்ந்த மக்கள் நாக இனத்தவருடன் தொடர்புடையவர்கள் என்பதையும் வரலாற்று ரீதியாக அடையாளம் காணமுடிகிறது. அதில் "நாக" என்ற சொல்லை பயன்படுத்திய அனைவரும் அக்காலத்தில் தமிழர்களாகத்தான் இருந்தார்கள் எனக் கூறமுடியாது. ஏனெனில் மிகப்புராதனகாலத்தில் இப்பெயரை தமிழர்கள் மட்டுமன்றி ஏனைய இன மக்களும் பயன்படுத்தியதற்கு இலங்கையிலும், பிறநாடுகளிலும் உறுதியான பல சான்றுகள் உள்ளன. ஆயினும் இலங்கையைப் பொறுத்தவரை காலப் போக்கில் இங்கு வாழ்ந்த சிங்கள மொழி பேசிய மக்களிடமிருந்து அப்பெயர் படிப்படியாக மறைந்து போக அது தமிழர்களிடம் மட்டுமே நிலைத்திருந்ததைக் காண முடிகிறது. அந்தப் பாரம்பரிய வரலாற்றுத் தொடர்ச்சி தற்காலத்திலும் நிலைத்திருப்பதை அவர்கள் பயன்படுத்தி வரும் ஆட்பெயர்களும் (நாகன், நாகி, நாகம்பாள், நாகம்மா, நாகமுத்து, நாகராஜா, நாகப்பா, நாகவண்ணன், நாகதேவன், நாகரூபி, நாகரூபன், நாகராணி, நாகமணி, நாகவள்ளி, நாகசீலன்), இடப்பெயர்களும் (நாகர்கோயில், நாகபடுவான், நாகதேவன்துறை, நாகஞ்சோலை, நாகதாழ்வு, நாகமுனை, நாகமலை, நாகர்குளம்) உறுதிப்படுத்துகின்றன. இதனால் உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் வரும் பெயருக்கு "நாகபூமி" அல்லது "நாகவம்சம்" அல்லது "நாகனுடையது" (நாகஹ) என வேறுபட்ட பொருள் கொடுக்கப்பட்டாலும் அப்பெயர் "நாக" இன மக்களையும், அம்மக்களை ஆட்சி செய்த "நாக" வம்சத்தையும், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட "நாக" நாட்டையும் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது.

இதற்கு சங்ககாலத் தமிழகத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்ற அரச வம்சப் பெயர்களால் அழைக்கப்பட்டிருந்தாலும் கூட அப்பெயர்கள் அரச வம்சங்களை மட்டும் குறிக்காது, அவர்கள் ஆட்சி செய்த நாடுகளையும், அந்த நாடுகளில் வாழ்ந்த மக்களையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதை இவ்விடத்தில் உதாரணத்திற்கு குறிப்பிடலாம். இந்த வரலாற்று உண்மை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் வரும் "நாக" என்ற பெயருக்கும் பொருத்தமாக இருக்கலாம். ஏனெனில் இந்நாணயம் கண்டெடுக்கப்பட்ட உடுத்துறை என்னும் புராதன கிராமம் பண்டைய காலத்தில் நாக இனமக்கள் வாழ்ந்த இடமாகவும், நாகநாட்டிற்கு உட்பட்ட ஒரு இடமாகவும், நாகவம்சத்தவர் ஆட்சி செய்த நாடாகவும் இருந்து வந்துள்ளதை வரலாற்று மூலங்கள் காலரீதியாக எடுத்துக் கூறுகின்றன. இதனால் அந்த நாக நாட்டை ஆண்ட மன்னன் தானும், தனது ஆட்சிக்கு உட்பட்ட மக்களும், அந்த மக்கள் வாழ்ந்த நாடும் "நாக" இனத்து வழி வந்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டும் நோக்கில் தான் வெளியிட்ட நாணயத்தில் "நாக" எனத் தொடங்கு முன்னொட்டுப் பெயரைப் பொறித்தான் என்ற முடிவுக்கு வருவது பொருத்தமாகத் தெரிகிறது.

**உடுத்துறையில் கிடைத்த நாணயம் வட்டவடிவில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் அதன் இரு புறத்திலும் மூன்று மீன்கள் கோட்டுருவத்திற்கு பதிலாக முழு உருவமாக வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அதேவேளை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் காணப்படும் சின்னங்களை ஒத்த வடிவமைப்பில் தமிழகத்தில் அதிலும் குறிப்பாகச் சங்க காலத்தில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்குச் சான்றுகள் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையில் இதே வடிவமைப்பில் பல நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதற்கு அவற்றை வடிவமைப்பதற்குப் பயன்படுத்திய சுடுமண் அச்சுக்களே சான்றாகக் கிடைத்துள்ளன. இவை உடுத்துறை நாணயம் இன்னொரு நாட்டிலிருந்து கொண்டுவரப்படாது இலங்கையிலேயே வடிவமைக்கப்பட்டதென்பதற்கு சிறந்த சான்றாக உள்ளது.**

நன்றி: பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்










விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# ஆனந்தபுரம் ஒரு வீரவரலாறு

போர் அநேகமாக இறுதிக் கட்டத்தை எட்டி விட்டது. ஏறக்குறைய எல்லா நம்பிக்கைகளும் பொய்த்துப் போகின்றன என்று தெரிந்து கொண்டிருந்தது அப்போது. ஏனென்றால், புவியியல் ரீதியாக சிறிய ஒடுங்கிய பிரதேசத்தில் சுற்றிவளைக்கப்பட்ட நிலைக்கு மக்களும் புலிகளும் தள்ளப்பட்டு விட்டனர். சர்வதேச ஆதரவுத்தளத்தையும் பெறக்கூடிய நிலையில், போரைத் தணிக்கக் கூடிய நிலையில் நிலைமைகளும் இல்லை. எனவே போர் தன்னுடைய இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது. அதாவது அது ஏறக்குறைய முடிவுக் கட்டத்துக்கு வந்து விட்டது என்று நிலைமைகளைக் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருந்தோர் தீர்மானித்தனர்.

ஆனாலும் பலர் இன்னும் ஏதாவது செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது என்றே நம்பினார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்கும் காரணங்களிருந்தன.

கரும்புலிகள் அணி எந்தப் பெரிய நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படவில்லை. கடற்புலிகளும் கூட மிகப் பிரமாண்டமான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அதைவிட தொடர்ந்து மோதல்கள் நடந்து கொண்டேயிருந்தன. விடுதலைப் புலிகளின் நம்பிக்கைக்குரிய தளபதிகள் இன்னும் போரை வழிநடத்திக் கொண்டேயிருந்தார்கள்.

ஆகையால் எப்படியும் இறுதிக் கட்டத்திலாவது ஏதாவது அதிரடியான போர் நடவடிக்கைகள் நடைபெறக் கூடும் என்று அவர்கள் நம்பினார்கள். இல்லையென்றால், இவ்வளவு இயக்க உறுப்பினர்களும் இறுதியில் என்ன செய்வது? அதைவிட தலைவர் பிரபாகரன் ஏதாவது செய்யாமல் விடமாட்டார் என்ற எண்ணம் அவர்களுக்கிருந்தது. ஆனாலும் அவர் ஏன் இன்னும் தாமதித்துக் கொண்டிருக்கிறார் என்று அவர்களுக்குப் புரியவில்லை. அதற்கு அவர்களால் விடைகாணவும் முடியவில்லை.

எனவே இறுதிக் கட்டப் போர் எப்படியும் நம்பிக்கைக்குரியதாக, மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கைக்கு அவர்களிடம் போதிய விளக்கங்களிருக்கவில்லை. ஆனாலும் அந்த நம்பிக்கையிலும் அவர்கள் கொஞ்சம் தளர்ந்தேயிருந்தார்கள். அதுவொரு கலவையான மனநிலைதான். பொதுவாகச் சொன்னால், நம்பிக்கைக்கும் நம்பிக்கையின்மைக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்த நாட்களில் பலரும் என்ன செய்வது, எங்கே செல்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால், தொடர்ந்து போரை நடத்தக் கூடிய நிலையில் அப்போது போராளிகளில் பலரின் மனநிலை இருக்கவில்லை. பலரும் தங்கள் குடும்பங்களைத் தேடுவதிலும் அவர்களைக் காப்பாற்றுவதிலும்தான் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதைவிட போரைத் தாங்கக் கூடிய சனங்களும் இல்லை. அவர்களுக்கு சாப்பாடில்லை. அதைவிடத் தங்குமிடமில்லை. காயப்படுகிறவர்களுக்கு மருத்துவமனைக ளில்லை.

இதற்கிடையில் வெடிபொருட்கள் தீர்ந்து விட்டதாக மெல்லிய சேதி கசிந்தது. இனிச் சண்டை ஓய்ந்து விடலாம். அதுக்குப் பிறகு ஏதாவது ஒரு வழி - அது நன்மையைத் தருமோ தீமையைத் தருமோ என்பது வேறு விசயம் - கிடைத்து விடும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

இனி வன்னியில் இருந்தால் மரணம் அல்லது கைது என்ற நிலையைத்தவிர வேறு மார்க்கமில்லை என்று திடமாக முடிவு கட்டினார்கள். இதனால் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை விட்டு படைத்தரப்பிடம் ஓடுவோரின் தொகை அதிகரித்தது. இந்த நிலை வரவரக் கூடியது. இந்த மனநிலை வளர்ந்து போராளி குடும்பங்கள், மாவீரர் குடும்பங்கள் வரையில் பரவியது.

இந்த நிலையைத் தடுத்தாற்தான் அடுத்த கட்டமாக எதையாவது செய்யலாம் என்ற நிலை தவிர்க்க முடியாதபடி உருவாகியது. அதே வேளை தாக்குப்பிடிப்பதன் மூலம் தான் சர்வதேச ரீதியான மாற்று அபிப்பிராயத்தை உருவாக்கலாம் என்ற நிலையும் புலிகளுக்கு ஏற்பட்டது. அத்துடன், என்னதான் நடந்தாலும் படைத்தரப்புக்குப் பேரழிவை ஏற்படுத்தி, அதன் உளநிலையைச் சிதைப்பதன் மூலம் அதைப் பலமிழக்கச் செய்து பின்வாங்கச் செய்யலாம் என்று புலிகளின் மூத்த தளபதிகள் கருதினார்கள்.



**ஆனந்தபுரப் போர்**

**இந்தியா – சிறீலங்கா சிங்கள கூட்டுப்படையினர் மேற்கொண்ட இரசாயன குண்டுத் தாக்குதலால் மூத்த போராளிகள் உட்பட பல நூறு போராளிகள் வீரச்சாவு.**

இது இறுதிக்கட்டம். வாழ்வா சாவா என்ற நிலை. தோற்கமுடியாது. அப்படித் தோற்பதாக இருந்தாலும் மரணத்துக்குப் பின்னர் அது நிகழட்டும். அந்த மரணம் தோல்விளைத் தருவதற்குப் பதிலாக வெற்றியைத் தருவதாக ஏன் அமையக் கூடாது? என்று அவர்கள் கருதினார்கள். எனவே இதற்கான ஒரு தர்க்க நிலைப்பட்ட நியாயத்தையும் அவர்கள் சொன்னார்கள். அது போராளிகளை சிறிது உற்சாகப் படுத்தியது.

தொடர்ந்து வெற்றியைச் சுவைத்தபடியே படையினர் முன்னேறி வருகின்றனர். அதனால் தாம் இலகுவில் வெற்றி பெற்று விடுவோம், புலிகள் இனிமேல் பெரிய தாக்குதல் எதனையும் நடத்தக்கூடிய நிலையில் இல்லை. அவர்கள் பலவீனப்பட்டுவிட்டார்கள் என்று நம்பியிருக்கும்போது அதிரடியாக பத்தாயிரம் வரையான படையினர் பலியாகக் கூடிய தாக்குதலைத் தொடுத்தால் போரின் நிலையே மாறிவிடும் என்று அவர்கள் நிறுவினர். இதையடுத்து பலரிடம் ஒரு தெம்பு ஏற்பட்டது.

எனவே படையினரை எப்படியாவது தடுக்க வேண்டும். அப்படித் தடுப்பதற்கான உபாயம் என்ன என்ற கேள்வி எழுந்தபோதுதான் ஆனந்தபுரம் சமர் தொடங்கியது. அது இறுதிச் சமர். அதுதான் இப்போது தாய்ச்சமர். அதுவே இப்போது விடுதலைக்கான திறப்புச் சமர். அதுதான் புலிகளின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கும் சமர் என்ற நிலையில் அதில் அத்தனை சிறப்புப் பயிற்சியும் போர் அனுபவமும் உள்ளவர்கள் களமிறங்கினார்கள்.

அந்தச் சமருக்கு முன்னர் அங்கிருந்து தான் வெளியேறமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு தலைவர் பிரபாகரன் அங்கே நின்றார். அப்போது இராணுவம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கேப்பாபிலவு, தேவிபுரம் ஆகிய இடங்களில் நிலை கொண்டிருந்தது. அதாவது முக்கால வட்ட வடிவில் இராணுவம் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்திருந்தது. மிஞ்சிய பகுதி, புதுக்குடியிருப்பின் ஆனந்தபுரம், இரணைப்பாலை என்ற சிறு பகுதியும் மாத்தளன் முள்ளிவாய்க்காலுக்கிடைப்பட்ட ஒடுங்கிய கடற்கரைப் பிரதேசமும்தான்.

ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தையும் இந்தப் பிரதேசத்தையும் இழந்தால் வேறு மார்க்கமே இல்லை, அது அழிவாகத்தான் இருக்கும் என்று தலைவர் பிரபாகரன் நம்பினார். அதுதான் உண்மையும். எனவேதான் அவர் அப்படியொரு முடிவை எடுத்தார்.

தலைவர் பிரபாகரனுடன் அப்போது அங்கே புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பொட்டு அம்மான், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை ஆகியோரும் இருந்தனர். எனவே அவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு தாங்கள் களத்தில் இறங்குவதாக மூத்த தளபதிகள் முடிவெடுத்தார்கள்.

ஆனந்தபுரம் சமரில் ஏறக்குறைய மூவாயிரம் வரையான போராளிகள் ஈடுபடுத்தப்பட்டனர். முக்கியமான படைத்தளபதிகள் எல்லோரும் கூடிக் களத்திலிறங்கினர். கேணல் பானு, கேணல் விதுஷா, கேணல் தீபன், கேணல் கடாபி, கேணல் மணிவண்ணன், கேணல் நாகேஸ், கேணல் சேரலாதன் இப்படிப் பலர். (இவர்களில் பலர் பின்னர் பிரிகேடியர் என்ற இராணுவ நிலைக்கு உயர்த்தப்பட்டனர்) இவர்களைத் தவிர, அடுத்த நிலையிலுள்ள முக்கிய தளபதிகள் பலரும் களத்தில் நேரடியாக இறங்கியிருந்தனர்.

குடாரப்புத் தரை இறக்கம், அதைத் தொடர்ந்து பெட்டி வடிவில் இத்தாவிலில் வியூகம் அமைத்து கேணல் பால்ராஜ், கேணல் விதுஷா ஆகியோர் தமது அணிகளை வைத்துச் சமரிட்டதைப் போல ஆனந்தபுரம் சமரை இந்தத் தளபதிகள் வடிவமைத்திருந்தனர். எனவே இந்தத் திட்டத்தின்படி இந்தச் சமரை ஒரு மாதத்துக்கும் மேலாக அந்தப் பகுதியில் நீடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒரு மாதத்திலும் படையினரை அந்தப் பகுதிக்கு - தமது வியூகத்தினுள் - கவர்ந்திழுத்து அவர்களுக்குப் பேரழிவுகளை ஏற்படுத்துவதே திட்டம். ஆகவே அதற்கேற்ற வகையில் வியூகங்கள், தாக்குதல் முறைமைகள், தாக்குதல் அணிகள், அதற்கான ஆயுதப் பிரயோகம் மற்றும் வழங்கல் என சகலதும் ஒழுங்கு படுத்தப்பட்டன.

திட்டத்தின்படி போர் தொடங்கியது. கடுமையான போர். பேரழிவுகளோடு அது தொடர்ந்து கொண்டிருந்தது. உடனடியாக சரியான தகவல்களைப் பெற முடியவில்லை. ஆனால் உள்ளே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அறிவதற்கு எல்லோருக்குமே பெரும் ஆவல். வதந்திகள், ஊகங்கள் தாறுமாறாகப் பறந்து கொண்டிருந்தன. வந்து விழும் எறிகணைகளை விடவும் அந்த வதந்திக் கணைகள் அதிக சக்தி வாய்ந்தவையாக இருந்தன.

ஆயிரக்கணக்கான படையினர் கொல்லப்பட்டிருப்பதாக ஒரு தகவல். விடுதலைப்புலிகள் இப்போது புதுக்குடியிருப்பைக் கைப்பற்றி, அதற்கு அப்பால் கேப்பாபிலவை நோக்கியும் தேவிபுரத்தை நோக்கியும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று இன்னொரு தகவல். இப்படிப் பலதகவல்கள் வந்து கொண்டேயிருந்தன. ஆனால் எதையும் உறுதிப்படுத்த முடியவில்லை. அப்படிப் போர்க்களத்தில் சிறிது வெற்றி பெற்றாலும் அதனுடன் போர் நின்று விடப்போவதில்லை என்பதையும் சிலர் மதிப்பிட்டிருந்தனர். ஏனெனில் அதற்கான அக புற நிலைமைகள் மாறிவிட்டன.

என்றாலும் போர் தொடர்ந்து கொண்டிருப்பதால் வெளியே நின்றவர்கள் சற்று மகிழ்ந்தார்கள். இந்தப் போர் நிச்சயம் புதிய மாற்றங்களைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை ஒரு பக்கத்தில் உண்டென்றால், இது வெற்றிபெற வேண்டும் என்ற பிரார்த்தனை இன்னொரு பக்கத்தில். வாழ்வா சாவா என்ற நிலை அல்லவா?

உள்ளே நின்ற தளபதிகள் சாதாரணமானவர்கள் அல்ல. கேணல் தீபன் பால்ராஜுடன் கூடவே நின்று வளர்ந்தவர். பால்ராஜுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் பேரபிமானம் பெற்ற தளபதியாக அவர்தான் இருந்தார். அவருடைய தலைமையில் போரடுவதற்குப் பல போராளிகள் தயாராகவே இருந்தனர். மிக நீண்டகாலம் முகமாலை முன்னரங்கை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர் தீபன். ஆனையிறவை வெற்றிகொண்ட சமரில் இயக்கச்சி முனையை வென்று அந்தச் சமரின் வெற்றிக்கு உதவியர் அவர். இன்னும் பல சமர்க்

களங்கள் தீபனின் ஆற்றலுக்கு அடையாளமாக உண்டு. ஆகவே தீபன் சமர்க்களத்தில் நிற்கிறார் என்பது போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் சற்று நம்பிக்கையை அதிகரிக்கச் செய்தது.

இதைப்போல தளபதி பானுவும் களத்தில் இறங்கியிருக்கிறார் என்பது இன்னொரு முக்கியமான விசயமாகும். பானு நீண்டகால அனுபவமுடைய தளபதி. யாழ்ப்பாணம் முதல் மட்டக்களப்பு வரையில் பொறுப்பு மிக்க தளபதியாக இருந்தவர். யாழ்ப்பாணக் கோட்டையைப் புலிகள் கைப்பற்றியபோது பானுதான் அங்கே அப்போது கொடியேற்றியிருந்தார். அதைப்போல ஆனையிறவுப் படைத்தளத்தையும் புலிகள் வென்ற பிறகு பானுதான் கொடியேற்றியிருந்தார். இப்போது அதே பானுவும் களத்தில் நின்றார். பானு பீரங்கிப் படையணிக்கும் பொறுப்பாக இருந்தவர். அதைவிட வன்னியின் இறுதிச் சமரில் மன்னாரிலிருந்து அவர்தான் ஒருங்கிணைப்புத் தளபதியாகவும் கட்டளைத் தளபதியாகவும் இருந்தவர்.

அடுத்தது கேணல் மணிவண்ணன். இவர் கேணல் ராஜுவுக்குப்பின்னர் புலிகளின் பீரங்கிப் படைத்தளபதியாக பொறுப்பேற்றவர். இந்தச் சமரில் அவர் நேரடியாகக் களமிறங்கியிருந்தார். அவருடன் அவருடைய படையணியின் இரண்டாம் மூன்றாம் நிலையிலிருந்த ஏனைய தளபதிகளும் சமரில் குதித்திருந்தனர்.

அடுத்தது கேணல் விதுஷா. கேணல் விதுஷா பால்ராஜுடன் குடாரப்புத் தரையிறக்கத்தில் இறங்கி, முகமாலைச் சமரில் தாக்குப் பிடித்து நின்று வெற்றிகண்டவர். அதைவிட மாலதி படையணியின் தளபதியாகவே நீண்டகாலம் இருந்து அந்தப் படையணி பங்குபற்றிய பல சண்டைகளில் வெற்றியீட்டியவர். துணிச்சல் மிக்கவர். எதற்கும் விட்டுக் கொடாதவர். கடும் பிடியாளர் என்று பலராலும் விமர்சிக்கப் படுபவர் விதுஷா. பெண்போராளிகளின் ஆதர்சம் அவர். அவரும் தன்னுடைய மூத்த பெண் போராளிகளுடன் இணைந்து நின்று போரிட்டார்.

இதைப்போலவே கேணல் துர்க்கா, கேணல் கடாபி என்கிற ஆதவன், மட்டக்களப்புத் தளபதியாக இருந்த கேணல் நாகேஸ், நிதர்சனம் நிறுவனத்தின் பொறுப்பாளராக இருந்த கேணல் சேரலாதன் எனப் பலர் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தனர். கேணல் ஆதவன் முன்னர் தலைவர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலராகவும் பின்னர், மெய்ப்பாதுகாவலர் அணிக்குப் பொறுப்பான தளபதியாககவும் பிறகு படையப் பயிற்சிக் கல்லூரிகளுக்குப் பொறுப்பாளராகவும் இருந்தவர். இதைவிட தலைவர் பிரபாகரனின் மகனான சார்ள்ஸ் அன்ரனியின் படையணியைச் சேர்ந்த – கணனிப் பிரிவைச் சேர்ந்த தளபதிகள் போராளிகள் என்போரும் போரில் ஈடுபட்டனர்.

இரவு பகல் என்றில்லாத தாக்குதல். நிலைகொண்ட படையினர் மீதும் தாக்குதல். முன்னேறி வரும் படையினர் மீதும் தாக்குதல். இப்படி படையைச் சிதைக்கும் உச்சகட்டப் போர் இரண்டு நாட்களைக் கடந்தது. புலிகளின் வானொலி சில செய்திகளைச் சொன்ன போதும் எதையும் சரியாக உறுதிப்படுத்தவோ உத்தரவாதப் படுத்தவோ முடியவில்லை. சனங்கள் கொஞ்சம் நம்பிக்கை நிலைக்கு வந்தனர். போராளிகளிற் பலரிடமும் உற்சாகம் ஏற்பட்டது. ஆனால் எல்லோரிடமும் ஒரு அவநம்பிக்கையும் இழையோடிக் கொண்டேயிருந்தது. அதைப் பலரும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

இதேவேளை படையினரிடம் செல்வோரின் தொகை திடீரெனக் குறைந்து விட்டது. போர் நடந்து கொண்டிருக்கும்போது படையினரிடம் சென்றால் உயிராபத்துகள் நிகழக்கூடிய அபாயம் உண்டென்ற அபிப்பிராயம் சனங்களிடம் இருந்தது. அதனால் அவர்கள் நிலைமைகளின் போக்கை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரண்டு நாட்கள் தீவிரமாக நடந்த போர் மூன்றாவது நாள் மெல்ல தணிவுக்கு வந்தது. ஆனாலும் அதன் கொந்தளிப்புக் குறையவில்லை. அப்போது ஒரு செய்தி மெல்லக் கசிந்தது. ஆனால் அந்தக் கசிவுத் தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பெரும் பரபரப்பையும் உண்டாக்கியது.

ஆனந்தபுரம் பகுதியை படையினர் சுற்றி வளைத்துத் தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டனர். படையினரின் முற்றுகைக்குள் ஏறக்குறைய எண்ணூறுக்கும் அதிகமான போராளிகள் சிக்கிவிட்டனர் என்றும் முதலில் வந்த தகவல்கள் கூறின. ஆனால் அங்கே உண்மையான நிலைமை என்ன என்று அறிய முடியவில்லை. தளபதிகளில் பலரும் காயப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ளனர் என்று அடுத்து வந்தது தகவல். ஆனால் அதிலும் யார் யாருக்கு என்ன பிரச்சினை, யார் எப்படி இருக்கிறார்கள் என்று எதுவும் சரியாகத் தெரியவில்லை.

உண்மையில் அங்கே என்ன நடந்தது என்றால்,

புலிகள் ஆனந்தபுரத்தில் பெரியதொரு படைத்தளத்தை நிர்மாணித்திருந்தனர். அவர்களைப் பொறுத்தவரையில் அதை படையினருக்கான ஒரு பொறியாகவே உருவாக்கியிருந்தனர். அங்கே மையமாக நின்று போரிடும் போது – சூட்டு வலுவை ஓரிடத்தில் குவித்துக் கொண்டு போரிடும் போது அதற்கெதிராக படையினர் நிச்சயம் போரிட்டே ஆகவேண்டும். அப்போது அதற்கெதிராக தாம் தொடர்ச்சியாக செறிவும் வலுவும் கூடிய தாக்குதலை நடத்துவது என்றும் அவர்கள் திட்டமிட்டனர்.

புலிகளின் எதிர்ப்பு அதிகரிக்கும் போது மேலதிக படையினர் அங்கே கொண்டு வரப்படுவர். அப்படி வருகின்ற படையினர் மீதும் பல வகையான அதிர்ச்சிகரமான தாக்குதல்களைத் தொடுப்பது. அதில் பல படையினரைக் கொல்வது அல்லது அந்தப் படையணிகளைச் சிதைப்பது என்பது இந்தத் திட்டத்தின் இன்னொரு விரிவு. அதற்குத் தக்கமாதிரியே வியுகமும் தந்திரோபாயமும் நிலைகளும் அமைக்கப்பட்டன.



இப்படிக் கவர்ந்திழுத்துக் கொல்லப்படுதன் மூலம் படையினரைக் கலங்கவைத்தல் களைப்பும் திகைப்பும் அடைய வைத்தல் என்ற தந்திரோபாயத்தை படையினர் வேறு விதமாக முறியடித்தனர். அவர்கள் புலிகளின் பின் வழியான காயப்படுகிறவர்களையும் இறப்பவர்களையும் கொண்டு செல்லும் வழி மற்றும் உணவு, மேலதிக படையணிகளை வழங்குவது, ஆயுதங்களை எடுத்துச் செல்வது ஆகியவற்றுக்கான வழங்கல் வழியை மூடினர்.

இது எப்படித் தெரியுமா?

புலிகளின் எதிர்ப்பு அதிகரித்திருக்கின்றதாலும் அது மிக மூர்க்கமாக இருக்கின்ற படியினாலும் அந்தத் தாக்குதலை தமக்கெதிரான முறையில் புலிகள் வடிவமைத்திருக்கின்றனர் என்று அவர்கள் கருதினர். இதனால் அந்தப் பொறியில் சிக்கி விடாமல் அவர்கள் தமது பலமான தரப்பான கண்காணிப்பு அணியை அதாவது ஆழ ஊடுருவிக் கண்காணித்துத் தாக்கும் அணியைப் பயன்படுத்தி புலிகளின் விநியோக வழியைக் கண்டு பிடித்தனர்.

பின்னர் இந்த வழியை மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன்படி அவர்கள் இரவோடிரவாக முட்கம்பிச் சுருள்களைப் பாவித்து மூன்று அடுக்கிலான தடுப்பு வேலியைப் போட்டனர். இப்போது புலிகள் தப்பிச் செல்வதற்கு வழியுமில்லாமல், அங்கே தொடர்ந்திருப்பதற்கான விநியோக வழியுமில்லாமல் சிக்கிக் கொண்டனர்.

இதைச் சற்றும் புலிகள் எதிர்பார்க்கவேயில்லை. அதேவேளை படையினர் உள்ளே சதுர வடிவில் நின்ற ஆயிரக்கணக்கான புலிகளை நோக்கி – அவர்கள் நின்ற அந்தச் சிறிய நான்கு சதுர கிலோ மீற்றர் பகுதியின் மீது – படையினர் மிகவும் உக்கிரமான தாக்குதலைத் தொடுத்தனர். இந்தத் தாக்குதலுக்காக அவர்கள் செலவிட்ட வெடிபொருட்கள் கிட்டத்தட்ட வேறு இடங்களில் செலவிட்ட வெடிபொருட்களை விடவும் பத்து மடங்குக்கும் அதிகமாகும்.

பொறி இப்போது அதன் நோக்க நிலையை – அர்த்த நிலையை மாற்றிக் கொண்டு விட்டது. அதாவது அது பொறியாகத்தான் இருந்தது. ஆனால், அதை உருவாக்கிய புலிகளுக்குப் பதிலாக படையினருக்கு வாய்ப்பாகவே அமைந்து விட்டது. துரதிருஷ்ர வசமாக அது புலிகளுக்கான பொறியாகி விட்டது.

இரவில்தான் விநியோக நடவடிக்கைகள் நடப்பது வழக்கம். பகலில் எதுவும் செய்ய முடியாது. கண்காணிப்பு விமானங்கள் அதற்கு இடமளிக்காது. ஆளில்லா வேவு விமானம் வானத்தை விட்டு நீங்குவதே இல்லை. ஒரு விமானம் இறங்குவதற்கு முன்னர் இன்னொரு விமானம் வானத்தில் நிற்கும்.

புலிகளின் வியூகத்துக்குக் கிழக்கே களப்பும் வெளியும். ஆகையால் காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் மற்றும் மருந்து, ஆயுதம், உணவு எல்லாவற்றையும் இரவில் தான் அந்த வழியால் கொண்டு செல்ல முடியும். மாலையானதும் அந்த வழியால் சென்ற போராளிகள் முட்கம்பி தடுப்புகளைக் கண்டு அதிர்ந்தனர். அப்போதுதான் அவர்களுக்கு நிலைமை விளங்கியது. கட்டளைப் பீடத்துக்கு அவர்கள் தகவல் தந்தனர். நிலைமை பாதகமாகியுள்ளது என்பதை கட்டளைப் பீடம் உணர்ந்தது.

இப்போது உள்ளே நிற்கின்ற போராளிகளை மீட்கவேண்டிய நிலை. அதற்காக மேலதிக படையணிகள் வரவழைக்கப்பட்டன. இதே வேளை உள்ளே கடுமையான தாக்குதல் நடந்து கொண்டிருந்தது. தலையை வெளியே தூக்க முடியாதபடியான தாக்குதல். எதிர்பார்த்ததை விடவும் இழப்புகள் அதிகம். நெருக்கடிகள் அதிகம். ஆனாலும் அவர்கள் சளைத்து விடவில்லை. இது இறுதிப் போர். வாழ்வா சாவா என்ற போர். இதை விட முடியாது. விட்டால் வேறு வழி கிடையாது. ஆகவே எதிர்த்து நின்று தான் ஆகவேண்டும். போரிட்டுத்தான் ஆகவேண்டும்.

அந்த நெருக்கடி நிலையிலும் போரின் தீவிரம் குறையவில்லை.

ஆனாலும் படையினரின் தடையை உடைப்பதற்குப் புலிகளால் முடியவில்லை. இதற்குள் அந்தப் பகுதியில் புலிகளின் முக்கிய தளபதிகள் தான் நிற்கிறார்கள் என்ற தகவலை படையினரின் ஒட்டுக் கேட்கும் பிரிவினர் கண்டு பிடித்து விட்டனர். அதற்குள் யார் யாரெல்லாம் நிற்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது. அதனால், அது தங்களுக்குக் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பென்றே அவர்கள் கருதிக் கொண்டனர். அந்த வாய்ப்பை அவர்கள் இழக்க விரும்பவில்லை.

அதனால் முற்றுகை இறுக்கப்பட்டது. சுற்றிவர முற்றுகையை இறுக்கிக் கொண்டு, உள்ளே பேரழிவுத் தாக்குதலை படையினர் மேற்கொண்டனர். சக்கை, சரமாரி என்றெல்லாம் சொல்லக்கூடியமாதிரி, எறிகணைகளை அவர்கள் புலிகள் மையமிட்டு நின்ற பகுதிக்குள் கொட்டினர். அந்தப் பகுதியை அப்படியே அழிப்பதுதான் அவர்களுடைய இலக்கு.

புலிகளின் மீட்புப் படையணிகளோ, உதவிப் படையணிகளோ அங்கே செல்வதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை என்றாகி விட்டது. அதேவேளை உள் நிலைமைகள் சீர்செய்ய முடியாத கட்டத்துக்கு, நின்று தாக்குப்பிடிக்க முடியாத கட்டத்துக்குச் சென்று விட்டன. உள்ளே நிற்பவர்கள் தங்கள் ஆற்றலைப் பயன்படுத்திக் கொண்டு முற்றுகையை உடைத்து வெளியே வருவதைத் தவிர வேறு வழியில்லை என்ற கட்டம். அத்துடன் முக்கிய தளபதிகள் பலர் கொல்லப்பட்டு விட்டனர் என்ற தகவல்களும் வெளிவரத் தொடங்கியது.

இது வெளியே இருந்த மக்களையும் போராளிகளையும் கலங்கவைத்தது. ஒரு பக்கம் பெருந்துக்கம். அடுத்த பக்கம் இந்த இழப்புகளின் வலி. பல களங்களை வெற்றிகரமாக வழிநடத்தியவர்கள், எத்தனையோ தாக்குதல்களில் இருந்து தப்பியவர்கள், மரணத்துடன் வெற்றிகரமாக இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நின்று விளையாடியவர்கள், தமிழ்ப் படையணிகள் என்ற புலிகளின் போராளிகள் அணிகளைக் கட்டிப் போரில் பல பரிமாணங்களை உருவாக்கியவர்கள் எல்லாம் மிகச் சாதரணமாகவே அங்கே, அந்த ஆனந்தபுரம் சமரில் கொல்லப்பட்டு விட்டனர்.

கேணல் தீபன், கேணல் கடாபி, கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, கேணல் மணிவண்ணன், கேணல், நாகேஸ்... என்று ஒவ்வொருவரும் துக்கத்துடன் இந்த இழப்புகளையிட்டுப் பல கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

கேணல் பானு உட்பட சிலர் கடுமையான போராட்டத்தின் பின்னர் காயங்களுடன் வெளியேறினர். அவர்கள் அங்கிருந்து தப்பி வந்ததை யாராலுமே நம்பிக்கொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு முற்றுகையின் இறுக்கமும் தாக்குதலின் தீவிரமும் இருந்தது.

சனங்களிடம் இப்போது இருந்த கொஞ்ச நம்பிக்கையும் அப்படியே சரிந்தது. போராளிகள் சோர்ந்து விட்டனர். பல போராளிகள் மனங்கலங்கிப் போனார்கள். இப்படி இத்தனை தளபதிகளும் ஒன்றாகவே கொல்லப்படுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை.

ஆனந்தபுரம் சமரைப் புலிகள் அப்படித் திட்டமிட்டிருந்ததற்கு இன்னொரு காரணம் இந்தச் சமர்ப்புள்ளியில் படையினரை ஒரு மாதகாலம் வரையில் நிறுத்திக் கொண்டால், அதற்குள் சர்வதேச நிலைமைகளை தமக்கேற்றமாதிரி மாற்றிக் கொள்ளலாம் என்பதுடன், அந்த ஒரு மாத கால அவகாசத்தைப் பயன்படுத்தி அடுத்த பெருந்தாக்குதலுக்கான தயாரிப்புகளைச் செய்து கொள்ளலாம் என்பதாக இருந்தது.

ஆனால், அந்த எதிர்பார்ப்பு பெருந்தோல்வியில் முடிந்ததை அடுத்து, எல்லாத் திட்டங்களும் அப்படியே குலைந்து போயின. புலிகளின் இறுதி முயற்சியும் பெருந்தோல்வியில் முடிந்ததையடுத்து படைத்தரப்பு முழு உஷாரடைந்தது. அது இறுதிப் போரை இன்னும் உக்கிரமாக்கியது.

உண்மையில் அந்தச் சமர்தான் புலிகளின் இறுதிச் சமர். அதற்குப் பின்னர் நடந்தவை எதுவும் பதிவுக்குரிய பெறுமானத்தைக் கொண்டவையாக இல்லை. அதாவது புலிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இறுதி நடவடிக்கை அதுதான்.

அந்தச் சமரில் கொல்லப்பட்டதைப்போல வேறு எந்தச் சமரிலும் புலிகளின் பெரும் எண்ணிக்கையான மூத்த தளபதிகள் கொல்லப்படவேயில்லை. அது எல்லோரையும் உலுக்கியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஏப்ரல் 2009 மாத்தளன் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் பெருந்துக்கத்துடனும் பேரவலங்களோடும் கழிந்து கொண்டிருந்தது. சனங்கள் படையினரிடம் தப்பிச் செல்வதற்காக இன்னும் கடுமையாகப் போராடத் தொடங்கினர். அதைத் தவிர அவர்களுக்கு வேறு வழிகள் இருக்கவில்லை.

ஆனந்தபுரம் சமரில் மூத்த தளபதிகள் பலரையும் களமுனைத்தளபதிகள் பலரையும் நூற்றுக்கணக்கான போராளிகளையும் இழந்த அந்தச்சமர் தமிழ் மக்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

தமிழீழ விடுதலைப் போரினை வழிநடத்திய தலைவனையும் போராளிகளையும் உலுப்பி விட்ட, அந்த இழப்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராணுவ சமநிலையை எதிரிக்கு சாதகமாக்கி விடுதலைக்காக விரைந்த பயணத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

ஆனாலும் தர்மத்தின் அடிப்படையில் பயணித்த தமிழீழ விடுதலைப் போராட்டம் மீண்டும் எழுச்சியோடு புதிய பரிணாமத்தில் புதுவீச்சோடு பயணிக்க தோள்கொடுப்போம் என உறுதியெடுப்போம்.

நன்றி: ஈழப்பறவைகள் இணையம்

# வில்லுக்குளத்துப் பறவை

## உண்மைக் கதை

**இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரின வாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக் குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.**

**இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந் தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப் பட்டுள்ளன.**

**சிங்கள வெறிப்படை ,**

**"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப் பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணி வுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...**

**எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.**
**அவற்றில்...இருந்து.**



"வெளியே வா...!"

யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள்,

சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள்.

"ஐயோ எண்ட பிள்ளைகளே!" என்று வனாம் இடிய ஓலமிட்டாள் அவள்... முன்னால் நின்றவர்களின் கைகளில் கத்தியும் கோடரியும்...

## வில்லுக்குளத்துப் பறவை

சறோ அக்கா முற்றத்திற்கு வந்தாள்...

வாசலில் துப்பாக்கியும் கையுமாக இந்தியப் படை வெறியாா்கள்.

"நட முகாமுக்கு" என்று கத்தினான் ஒரு முரடன்.

அக்கா நடந்தாள்.

பிள்ளைகள் வாய்விட்டு அழத் தொடங்கியபோது, "ஏன் பிள் ளையள் குழறுறீங்கள்... எதையோ கேட்கிறத்துக்குத்தானே கூட்டித்துப் போறானுவள். விட்டுவானுகள்" என்று தேற்றினாள் அவள்.

கொஞ்ச நேரத்தில் ஊரே கூடிவிட்டது.

"பாவம்... இவளை எதுக்குத்தான் கொண்டு போறானு வளோ..." என்று படபடத்தார் பக்கத்து வீட்டுக்கிழவர்.

***

சம்பூர் நூல்நிலையத்தை இந்தியப் படை முகாமாக மாற்றியிருந் தார்கள். கிராம மக்களுக்கு அறிவூட்ட, ஒரு காலத்தில் ஊர்ப் பெரியவர்களால் அந்த நூல்நிலையம் அமைக்கப்பட்டது. இன்று வல்லாளுமை வெறியர்களின் கொடிய அடக்குமுறையை ஒரு வரலாற்றுப் பாடமாக, சம்பூர் மக்கள் இங்கே படிக்கிறார்கள். அன்றாடம் சித்திரவதைகள் - பெண் வதைகள் - கொலைகள்... முகாமின் - முற்றத்தில் நின்ற சறோ அக்கா நினைத்துப் பார்த்தாள்... இந்த முகாமை ஒட்டினாற்போல் சம்பூர் வில் லுக்குளம். குளத்திற்கு மறுபக்கத்தில் - தூரத்தில் கூனித்தீவும் - அவள் வீடும். வீட்டில் பிள்ளைகள் என்ன செய்யுமோ...?

இரவாகி... உலகம் இருண்டுபோய்க் கிடந்தது. துப்பாக் கிகளோடு படை வெறியர்கள் அங்கும் இங்குமாக...

அப்போதுதான்...

அந்தக் கொடிய சிரிப்பை அவள் கேட்டாள். அறையிலிருந்து வெளியே எட்டிப்பார்த்த இந்தியப் படை மேஜர், அவளை உள்ளே வருமாறு அழைத்தான்... பின்பு அவளுக்குத் தெரியும் - அவன்தான் மேஜர் 'கோர்'.

உள்ளே நடுங்கிக்கொண்டே போனாள் சறோ அக்கா. சாராயத் தின் நெடி மூக்கைத் துளைத்தது.

"கூடைக்குடா ராயப்பு யேசுராஜாவின் சாவீட்டுக்குப் போனாயோ...?"

யாரோ ஒருவன் மேஜர் கோரின் ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக்கொண்டிருந்தான்.

அக்காவிற்கு இப்போது நிலைமை தெளிவாயிற்று. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவள் யேசுராஜாவின் சாவீட்டிற்குப் போய் வந்தாள். யேசுராஜா விடுதலைப் புலி அல்ல - ஆனால் இந்தியப் படையால் தேடப்பட்டவன். கொடுமையான சித்திர வதையின் பின்பு அவனைக் கொன்று பிணமாக வீசினார்கள்.

அண்மையில் திருமணமானவன் யேசுராஜா - மனைவிக்குச் சின்ன வயது. போய் அவளுக்கு ஏதாவது ஆறுதல் கூற வேண்டும் போல், சறோ அக்காவுக்குத் தவிப்பாய் இருந்தது. "யேசுராஜாவின் சாவீட்டிற்கு யாரும் போகக்கூடாது" என்று இந்தியப் படை போட்ட தடையையும் மீறி, அவள் அங்கே போனாள். அந்தப் பெண்ணின் கண்ணீரை முடிந்தவரை துடைத்து, ஏதோ ஒரு மன அமைதியோடுதான் அவள் வீடு திரும்பினாள் அதற்குள்...

"ஓம்... போனநான்தான்... சாவீடு எண்ட படியாத்தான் போன நான்..."

அக்கா ஒப்புக்கொண்டாள்.

மேஜர் கோர் இன்னொரு முறை அதிர்ந்து சிரித்தான் பின்பு –

அறையிலிருந்து மற்ற இந்தியப் படை ஆட்களை வெளியே போகச் சொல்லிவிட்டுக் கதவைப் பூட்டினான் அவன்.
அக்காவை ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லிக் கையால் சாட்டிவிட்டு, முன்னால் ஒட்டினாற்போல் இன்னொரு நாற்காலியைப் போட்டு உட்கார்ந்தான் மேஜர்.
விலங்குத் தனத்தின் இறுக்கமான பிடி... கொடிய வெறியின் திணிப்பு... மனிதத் தன்மையின் சமாதி...
அந்த இரவு கொடுமையானது.
எங்கே ஓட முடியும்?
காலையில் கதவு திறக்கப்பட்டது — "நீ போகலாம்" என்று சொன்னான்... கோர்.

அக்கா தெருவுக்கு வந்தாள்.

சினத்தோடு காறித் தெருவில் துப்பினாள்.

"இவனுவள் என்னதான் செய்தாலும் எண்ட தமிழீழ உணர்வை அழிக்க முடியாது" என்று உறுமினாள் அவள்.

★★★

கூனித்தீவில் தண்ணீர்த்தாங்கிக்குப் பக்கத்தில் தான் சறோ அக்காவின் வீடு. இரண்டு அறைகளும் பாதி முன் மண்டபமும். வீட்டிற்குப் பின்னால் அழகான அந்த வில்லுக்குளம்.

தாயகத்தோடு ஒன்றிப்போன உணர்வுகள் - கணீரென்றமிடுக்கான பேச்சு - கள்ளம் கபடமில்லாத சிரிப்பு - துணிச்சல் - கூனித்தீவில் அக்கா நிழல்மரம்.

"வாங்க ஆச்சி ... இருங்க... சங்கத்து வேலை எல்லாம் ஒழுங்கா நடக்குதுதானனே? எப்படி அண்ணன் பானைகளை சூளையில வச்சிட்டீங்களா? கேள் புள்ளை... சிங்கள "ஆமி"க்காரனுகள் நம்மட பொம்புளையள படுத்துகிற பாட்டை கட்டுரையாக எழுதி வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்த வேணும்..."

வீட்டில் எல்லோரும் நிறைந்துபோய் இருப்பார்கள். அக்காவின் குரல் "கணீர" என்று ஒலிக்கும் மட்பாண்டச் சங்கத் தலைவி - மாதர் சங்கத் தலைவி - அன்னையர் முன்னணித் தலைவி - சைவ மங்கையர் கழகத் தலைவி - மக்கள் குழு உறுப்பினர் என்று கூனித்தீவில் எல்லாமே அக்காதான் என்பதால், அக்கா வீடு கலகலப்பாகவே இருக்கும்.

1984 இல் அக்காவுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிமுகமானார்கள் புலேந்திரன், சந்தோஷம், கணேஸ் - போன்ற திருகோணமலை மாவட்டப் புலிகள் தலைவர்கள் அக்காவை அடிக்கடி சந்தித்த நாட்கள்... அக்கா புலிகள் இயக்கம் அல்ல - அனால் புலிகளின் பெரிய விடுதலை வேட்கையும் ஈடிணையற்ற வீரமும் - அவர்களின் மாபெரும் உயிரிழப்புக்களும் அவள் நெஞ்சைத் தொட்டன.

சறோ அக்காவுக்கு 42 வயது கணவனோடும் 7 பிள்ளைகளோடும் அவள் வாழ்க்கை. மூத்தவளுக்கு வயது 18. கடைசிப் பெடியன் இப்போதுதான் 6 வயதைத் தாண்டிக்கொண்டிருக்கிறான். இந்த நீண்ட வாழ்வில் தமிழீழத்தின் போராட்ட வரலாற்றை அவள் நன்கு அறிவாள். தமிழர் போராட்டத்தில் இயலாமைகள் - போலித்தனங்கள் - தொய்வுகள் எல்லாம் நிறைந்துபோன ஒரு காலத்தில் தான், விடுதலைப் புலிகள் தோன்றினார்கள். அவர்கள் வாழ்க்கை எத்தனை பெரியது...!

தொலைவில் - எங்கோ காட்டில் நீண்ட ஒதக்குப்புற வயல் வெளிகளில் அவர்கள் புல்லோடு புல்லாகப் படுத்திருப்பார்கள். அக்கா சோறும், கறியும் சமைத்துக்கொண்டு போய்க கொடுப்பாள்.

"நீங்கள் எண்ட புள்ளையளைப்போல - இல்லையில்லை... நீங்கள் எண்ட புள்ளையள்" என்பாள் அக்கா. வீட்டிலும் இப்படித்தான்... அடுப்பில் எப்போதும் "தேநீர்ப் பானை" கொதித்துக் கொண்டேயிருக்கும்.

காயப்பட்ட விடுதலைப் புலிகள் பலதடவை அக்கா வீட்டில் மருந்து கட்டியிருக்கிறார்கள். புலிகளுக்கு மட்டுமல்ல கூனித்தீவுக்கே அக்காவீடு ஒரு மருத்துவ நிலையம் போலத்தான். சிறீலங்கா படைகள் வெறிக்கூத்தாடிய 1985 - 86 - 87களில். சறோ அக்காவைச் சிங்களப் படைகள் வெறிகொண்டு தேடின. அப்போது சிலகாலம் தலைமறைவாக அவள் வாழநேர்ந்தது. "உன்னுடைய பிள்ளையளுக்காக நீ மறைந்து வாழத்தான் வேண்டும்" என்று யாரோ அவளுக்கு அறிவுரை சொன்ன போது, அக்கா திருப்பிக் கூறினாளாம் - "பெற்ற பிள்ளைகளுக்காக மட்டுமல்ல மற்றப் பிள்ளைகளுக்காகவும்தான் நான் தலைமறைவாகிறேன்."

ராஜீவ் - ஜே.ஆர். உடன்படிக்கையைத் தொடர்ந்து, சறோ அக்கா வெளிச்சத்துக்கு வந்தாள். விடுதலைப் புலிகளின் மேடைகளில் மக்கள் அவளைப் பார்த்தார்கள். திலீபனின் இரங்கல் கூட்டங்களில் அவள் குரல் இடியாய் முழங்கியது.

அக்கா இந்தியப் படைக்கும் "றோ" வின் கைக்கூலிகளுக்கும் அடிவயிற்றில் நெருப்பானாள்.

★★★

13.07.1989 தான் அந்த நாள்.

காலையில் படுக்கை விட்டெழுந்ததும் சறோ அக்கா வழமை போல் சுறுசுறுப்பானாள்.

எத்தனை துன்பங்கள்.

1987 ஒக்ரோபர் 10 இல் இந்தியப்படைக்கும் புலிகளுக்கும் போர் தொடங்கிய நாளிலிருந்து, இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் அவளை இந்தியப் படை வெறியர்கள் முகாமுக்குக் கொண்டுபோய், என்ன பாடெல்லாம் படுத்திவிட்டார்கள்.

அக்கா நெருப்பில் நனைந்து நிற்கிறாள்.

எப்போதும் போல அடுப்பில் தேநீர்ப் பானை கொதிக்கிறது.

மனைவியின் துன்பங்கள் - அவளுக்கு ஏற்பட்ட கொடுமைகள் - எல்லாவற்றையுமே அமைதியோடு தாங்கிக்கொண்ட கணவனுக்கு ஆசையோடு தேநீர் போட்டுக்கொடுத்துவிட்டு, ஐந்தாவது பெண் மனாவைக் கூப்பிட்டு மடியில் வைத்துக்கொஞ்சினாள் அக்கா.

மனாதான் அக்காவுக்குச் செல்லப் பெண்.




நடுப்பகல் ஆயிற்று.

சாப்பிட உட்கார்ந்த அக்கா சொன்னாள் - "காட்டிலையும் மேட்டிலையும் பிள்ளையள் என்ன பாடுபடுகுதோ...?"

எப்போதும் அக்காவுக்குப் புலிகளின் நினைவுதான்.

விடுதலைப் புலி லிங்கம் அடிக்கடி அக்கா வீட்டுக்கு வந்து போவான். அண்மையில்தான் இந்தியப் படையின் கைக்கூலிகள் அவனைப் பிணமாகப் போட்டார்கள். புலிகளின் மருந்துப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்தவன் லிங்கம். அவன் அக்காவிடம் எப்போதும் சொல்லுவான் "கண்ட கண்ட ஆட்களையெல்லாம் வீட்டுக்குள்ள எடுக்காத அக்கா... யார் நல்லவன் - யார் கள்ளன் என்று கண்டுபிடிக்க முடியாத காலம்.

உண்மைதான்...

அக்காவின் வீட்டில் - நான்றாகப் பழகி சோறுண்டு சென்றவர்களில் - இந்தியப்படையின் கையாட்களும் இருக்கவே செய்தார்கள்.

துரோகம் எங்குதான் இல்லை? விடுதலைப் புலிகளின் பெரிய உயிரிழப்புக்களையும் - வீரத்தையும் கண்முன் கண்டும் அவர்களக் காட்டிக் கொடுக்கும் தலையாட்டிகள் எத்தனை பேர்...?

கொடிய உலகம்... கொடிய மனிதர்கள்...

பின்னேரம் அக்கா அழகான அந்த வில்லுக்குளத்துக்குக் குளிக்கப்போனாள்... பச்சைப் புற்கள்... "தளதள" என்ற தண்ணீர்... கொக்குகள்... மீன்...

ஒரு தொல்லையும் இல்லாமல் - முழு விடுதலையைச் சுவைத்தபடி - வெள்ளைச் சிறகை நீளவரித்து - வானத்தில் பறந்த பறவையை நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே இருந்தாள் அக்கா.

இரவு ஆயிற்று.

★★★

ஓ...!

அந்த இரவு கொடியது.

7 மணி இருக்கும்.

சாவு அக்காவின் படலையைத் தட்டிய முரட்டுத்தனமான மணித்துளிகள்.

மனா அம்மாவின் சேலையைப் பிடித்துக்கொண்டிருந்தவள் பதற்றத்தோடு கடப்படியைப் பார்த்தாள்... இருளில் ஆட்களின் முகம் தெரியவில்லை... ஆனால் ... நான்கைந்து பேர்.

"வெளியே வா...!"

யாரோ அக்காவைக் கூப்பிட்டார்கள்.

சறோ அக்கா படபடப்போடு கடப்படிக்குப் போனாள்.

"ஐயோ எண்ட பிள்ளைகளே!" என்று வானம் இடிய ஓலமிட்டாள் அவள்... முன்னால் நின்றவர்களின் கைகளில் கத்தியும் கோடரியும்...

ஒருவன் அக்காவின் கையை முரட்டுத்தனமாகப் பிடித்து - தெருவில் "கொறகொற" என்று இழுத்தான்.

பதறி அடித்துக்கொண்டு தெருவுக்கு ஓடிவந்த பிள்ளைகளையும் கணவனையும்... "யாரும் வெளியே வரக்கூடாது - தெரியுதா?" என்று ஒரு தடித்த குரல் எச்சரித்தது.

"ஐயோ... மனா மனா..." என்று எங்கிக்கத்தினாள் அக்கா.

ஊர் மூலையில் நாய்களின் ஊளை...

அக்காவின் வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளினாற்போல - அதே தெருவில் - அவள் உடலின்மீது கத்தி வீசப்பட்டது.

"நீயாடா பாவி...?" என்று அக்கா கூச்சலிட்டதைத் தெருவில் நின்றவர்கள் கேட்டார்கள். அறிமுகாமானவர்களுக்கு அவன் முகம் கூடத் தெரிந்தது.

இந்திப் படையின் அந்தக் கைக்கூலியை கூனித்தீவு முன்பே அறியும். அக்கா வீட்டுச் சோறு கூட அவன் உடலில் தசையாய்... செந்நீராய்...

கத்திகளாலும், கோடரியாலும் அக்கா மாறிமாறி விறகுகட்டை போல் பிளக்கப்பட்டாள்.

நோடிப் பொழுதில் - அந்தத் தாய் ஓவியம் தெருவில் கிழிந்து கிடந்தது.

அக்கா போய்விட்டாள்!

நெருப்பு - ஐப்பசி: 1989



# வெளிவந்துவிட்டது

உலக வணிகம்
ULAGA VANIKAM
2023




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

**437-345-4203**

# ஆனையிறவில் ஆடும் சிவன்!

18.03.2023



யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே, கண்டி வீதியில் தட்டுவன்கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை நிறு வப்பட்டிருக்கிறது. கரைசிப்பிரதேச சபையின் ஒழுங்கமைப் பில் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு 27 அடி உயர மான அந்தச் சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத் தீவில் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை அதுவென்று கூறலாம்.

2009க்கு பின் ஆனையிறவுப் பிரதேசம் யுத்த வெற்றிவாதத் தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் பண்பாட்டு தலைநகரமாகிய கவர்ச்சிமிகு யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் எவரும் முதலில் ஆனை யிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு யுத்த வெற்றி வளாகங்களைக் கடந்துதான் உள்ளேவர வேண்டும். அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள். இது எங்களால் வெற்றி கொள்ளப்பட்ட நிலம் என்று பொருள்.



யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் பொழுது குடாநாட்டின் கழுத்துப் பகுதியில் முதலில் தென்படுவது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோல்வியுற்ற படை நடவடிக்கை ஒன்றின்போது பயன்படுத்தப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு கவச வாகனம். அதற்கருகில் அந்தக் கவச வாகனத்தை தடுத்து நிறுத்திய படை வீரர் ஒருவரின் நினைவுச் சின்னம். அதோடு சேர்த்து ஒரு விருந்தகம். அதைச் சற்றுத் தாண்டிச் சென்றால் வலது பக்கத்தில் கடலேரியின் பின்னணியில் பிரம்மாண்டமான ஒரு யுத்த வெற்றிச்சின்னம் உண்டு. இலங்கைத்தீவை இரண்டு கைகள் ஏந்தியிருப்பது போன்ற அந்த யுத்த வெற்றிச் சின்னந்தான் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் வெளியாட்களை வரவேற்கின்றது. அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற் கிறது என்று பொருள்.

இவ்வாறு கடலேரியின் உப்புக் காற்றில் எப்பொழுதும் யுத்த



வெற்றி வாடை வீசும் ஒரு பிரதேசத்தில், தமிழ் மக்களின் வழிபாட்டுருக்களில் ஒன்றாகிய நடராஜர் சிலையை நிறு வியமை என்பது அரசியல் அர்த்தத்தில் கவனிக்கப்பட வேண் டியது.

அச்சிலையின் அழகியல் அம்சங்களைக் குறித்தும் அது பார்த்த உடனேயே கையெடுத்துக் கும்பிடக்கூடிய ஒரு சிலையாக இருக் கிறதா இல்லையா என்பதைக் குறித்தும் பின்னர் தனியாக ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறேன். இன்று இக்கட்டுரையில் நான் கூறவருவது அச் சிலைக்குப் பின்னால் இருக்கும் பிரதேச, பிராந்திய மற்றும் கட்சி அரசியலைப் பற்றி.

நாவற்குழிச் சந்தியை போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் தமிழ் மக்களை அடை யாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம். அரசாங்கம் அதைத் திட்டமிட்டு யுத்தவெற்றி வாசலாகக் கட்டியெழுப்பி வைத்திருக் கிறது. தமிழ்மக்கள் அதனை ஒரு மரபுரிமை வாசலாக மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் சிந்தித்து கரைச்சி பிரதேச




சபை முடிவெடுத்திருந்திருந்தால் அது வரவேற்கத்தக்கதே.

நாவற்குழியில் ஒரு புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில், சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட் சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பதுபோல, ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு.




ஆனால் அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமைய வேண்டும்? அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப்பல் வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டுமா?

சிவபூமி அறக்கட்டளை ஒரு சமய நிறுவனம். அது தான்



போற்றும் ஒரு சமயத்தை முன்னிறுத்தும். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அப்படிச் சிந்திக்கத் தேவையில்லை. மேலும் பொதுவெளிச் சிற்பம் வேறு, மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் வேறு. இரண்டையும் ஒன்றாகக் கண்டு மயங்கும் பொதுப்புத்தியை அரசியல்வாதிகள் இலகு வாகக் கையாள்வார்கள்.

பிரயோக தேசியவாதமும் நடைமுறையில் பொதுப்புத்தியின் மீதே கட்டியெழுப்பப்படுகிறது. ஆனால், தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்று மேற்கத்திய அறிஞர்கள் கூறுவார்கள். அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக் கட்டவேண்டும். இதை இன்னும் ஆழமாக சொன்னால், ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற அடிப்படையில் மக்களைத் திரட்ட வேண்டும். இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு சமம் ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துக்கு சமம் யாரும் பிரதேச ரீதியாகவோ சாதி ரீதியாகவோ மத ரீதியாகவோ ஒருவர் மற்றவருக்கு மேலானவரும் அல்ல கீழானவரும் அல்ல என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும். எனவே தேசியவாதம் எனப்படுவது மதப்பல் வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட வேண்டும். மத மேலாண்மையின் மீது அல்ல. இந்த அடிப்படையில் சிந்தித்து தமிழ்மக்கள் தமது மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கவும் முன்நிறுத்தவும் வேண்டும்.

ஒவ்வொரு மதப்பிரிவும் அதனதன் மதச்சின்னங்களை முன் னிறுத்துவதில் தவறில்லை. அது அந்த மதத்தின் கூட்டுரிமை. ஆனால் ஒரு மதம் இன்னொரு மதத்தை அவமதிக்கும்போது அல்லது அந்த மதச் சின்னங்களை அழிக்கும்போது அல்லது ஒரு மதத்தின் மேலாண்மையை நிறுவ முற்படும் போதுதான் பிரச்சினை வருகிறது. அதாவது மதப்பல்வகைமை வேறு மத மேலாண்மை வேறு.

அண்மை ஆண்டுகளாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய மத்திய அரசை அணுகுவதற்கு மதத்தை ஒரு வாகனமாக பயன்படுத்த முயற்சிப்பது தெரிகிறது. இதில் சில தமிழ் அரசியல்வாதிகளும் அடங்குவர். இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மதசார்பு நிலைப்பாட்டைப் பின்பற்றி அதன்மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை அணுக முடியுமா என்று மேற்படி தரப்புக்கள் சிந்திக்கின்றன. பாரதிய ஜனதா அரசாங்கமானது இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று. எனவே ஈழத் தமிழர்கள் அந்த அரசாங்கத்தைத்தான் அணுக வேண்டும். ஆனால் அதன் பொருள் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பாரதிய ஜனதா பின்பற்றும் அதே நிகழ்ச்சி நிரலை ஈழத் தமிழர்களும் பின்பற்ற வேண்டும் என்றில்லை.

இப்பிராந்தியம் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துட் காணப்படுகிறது. இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தரமுடியாது. இப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும்போது ஈழத்தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத்தான் அணுகவேண்டும். ஆனால் அதன் பொருள் தமிழ் தேசியத்தின் மதப்பல்வமையை பலியிட வேண்டும் என்பதல்ல.

ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் எனப்படுவது மதப்பல் வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. பெருமளவு இந்துக்களைக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பாகிய யாழ்ப்பாண வாலிபர் முன்னணியை உருவாக்கியது (1924) ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராகிய கண்டி பேரின்பநாயகந்தான்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது, அதன் கால்கோல் விழா 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவட்டபுரம்


திரு. செல்வநாயகம் அவர்கள் பிரச்சாரம்
செய்யத்தொடங்கினார். இந்த இயக்கத்தின்
கால்கோள் விழா 13.2.1949 அன்று
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
முன்றிலில், ஸ்ரீலஸ்ரீ துரைச்சாமிக்குருக்கள்
அவர்கள் ஆசி கூறித் திரு. செல்வநாயகம்
அவர்களைத் தலைமை வகிக்கும்படி
அழைக்க ஆரம்பமாயிற்று. கோப்பாய்ப்
பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் அவர்களும்
மூதவை உறுப்பினர் டாக்டர் இ. மு. வி.
நாகநாதன் அவர்களும் பேசிய இச்
கூட்டத்தில் இளைஞர்களின் சார்பில் பேசுப்
வாய்ப்பு, அப்போது ஓர் சட்டமாணவனா
இருந்த எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்
தமிழ்மக்களின் அரசியலில் ஓர் புதி
ந்தனை - ஈழத்தமிழன் ஓர் தனித்தேசி
னம்; அவனுக்கு ஓர் தனிப் பிரதேச
ண்டு; அதை அவன் ஆளவேண்டும்; அத
பாருளாதாரத்தை விருத்தி செய்து தமிழ
முடியும்; தென்னிலங்கையை நம்பி வ
யாது; வாழத் தேவையுமில்லை;



கந்தசாமி கோவில் முன்றலில் சீலஸ்ரீ துரைசாமிக் குருக்களின் ஆசியுடன் இடம் பெற்றது. இதுதொடர்பான தகவல்களை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் காணலாம். அக்கட்சியின் தலைவராகிய செல்வநாயகம் ஒரு புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர். செல்வநாயகத்தை ஈழத்தமிழர்கள் தந்தை



என்றும் ஈழத்துக் காந்தி என்றும் அழைத்தார்கள். தந்தை செல்வா இறந்தபோது அவருடைய உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை. இந்து முறைப்படி வேட்டி அணிவிக்கப்பட்டு, தகனம் செய்யப்பட்டது. தன்னைத் தலைவராக தெரிந்தெடுத்து, தந்தை என்று அழைத்த பெரும்பான்மை இந்து வாக்காளர்களை கௌரவிப்பதற்காக செல்வநாயகம் அவ்வாறு கேட்டுக் கொண்டதாக கருதப்படுகிறது.

எனவே ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகைமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது. அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்கக் கூடாது. குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுகநாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் இந்துபோர்ட் போன்ற இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவுதான். ஆனால் அந்தப் போட்டியானது மத விரோதமாக, மோதலாக மாறவில்லை.

ஆனால், 2009க்குப் பின் எந்த ஒரு மதத் தலைவரும் துணிந்து கதையாத ஒரு வெற்றிடத்தில், ஒற்றைக் குரலாக ஒலித்த, முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களுடைய அதே மறைமாவட்டத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான முரண்பாடு தூக்கலாகத் தெரிவது தமிழ்த் தேசியத் திரட்சிக்குப் பாதகமானது. தமிழ்த் தேசியத்தை மதப்பல் வகைமையின் மீது கட்டியெழுப்ப விரும்பும் எல்லாச் சக்திகளும் அந்த முரண்பாட்டைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறு அகமுரண்பாடுகளைத் தீர்க்கும் சக்திமிக்க சிவில் அமைப்புகளோ கட்சிகளோ இல்லாத அரசியல் மற்றும் ஆன்மீக வெற்றிடத்தில், இன்னொருபுறம், சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் “எல்லைக் கற்களாக” புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருமோர் இராணுவ அரசியற் சூழலில், தமிழ் மக்கள் மத்தியிலும் இரவோடிரவாகச் சிலைகள் முளைக்கத் தொடங்கி விட்டன. இவ்வாறான சிலை அரசியலின் பின்னணியில், ஆனையிறவில் நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

சிவ நடனத்துக்கு ஆன்மீக வியாக்கியானம் மட்டுமல்ல, பௌதீகவியல் வியாக்கியானமும் உண்டு. அது ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது (cosmic dance). ஆனையிறவுச் சிவனுக்கு மேலதிகமாக ஓர் அரசியல் பரிமாணமும் உண்டு. உப்புக் காற்றில் யுத்த வெற்றிச் சின்னங்களின் மத்தியில், சிவனார் யாருடைய பஜனைக்கு ஆடப்போகிறார்?

நன்றி: நிலாந்தன்







ஈகைச்சுடர்
அன்னை பூபதி
35 ஆம் ஆண்டு நினைவு நாள்
நாட்டுப்பற்றாளர் நாள்
ஏப்ரல் 19 2023
அன்னை பூபதி கணபதிப்பிள்ளை
Annai Poopathy Kanapathipillai
மண்ணில்: 03.11.1932
கிரான், மட்டக்களப்பு, தமிழீழம்
ஈகைச்சாவு: 19.04.1988
உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி
Annai Poopathy was the first woman to embrace martyrdom in the fasting struggle for Thamileelam
“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் – The Thirst of Thamils is the Homeland of Thamileelam”
சங்கத்தமிழ்